கல்கி



KALKI 10.3.1968 40காசு

GRASIM

STAPLE FIBRE A SUPPLEMENT TO COTTON AND OTHER FIBRES



Among Indian technological achievements Gwalior Rayon's success in producing Rayon Grade Pulp from indigenous raw materials without any foreign aid or collaboration has, perhaps, been the most remarkable. The staple fibre produced from the pulp has been a boon to the hard-pressed textile industry which was deprived of valuable raw materials when vast areas of cotton-growing land were lost to Pakistan as a result of Partition.

Grasim Staple Fibre is unique in many respects, and is, in effect, a supplement to all natural fibres including cotton, wool, silk, jute, as well as to synthetic fibres. When blended or mixed with other fibres, it increases the usefulness of the resultant fabrics, making them cooler, softer, and more comfortable while at the same time helping to lower costs.

Today Gwalior Rayon contributes substantially to the national economy. It keeps hundreds of textile mills busy, gives employment to thousands of people, helps clothe lakhs more, saves crores of rupees in foreign exchange, contributes handsomely and in ever-increasing amounts to the national exchequer—these are just a few of the calculable benefits.

Besides Rayon Grade Pulp and Staple Fibre, Gwalior Rayon also produces high quality fabrics and fabricates its own machinery and equipment.

As the needs of the nation for the basic necessities of life are constantly growing, Gwalior Rayon, conscious of its responsibilities, has already made plans to expand its production. It is the constant endeavour of the Company to serve the country to its utmost ability.

THE GWALIOR RAYON SILK MANUFACTURING (WVG.) CO. LTD.

Birlagram, Nagda.

SAS-GR 26 A

கல்கி

பொருளடக்கம்

பிலவங்க மாசி 27 — மார்ச் 10



படவிளக்கம் பக்கம் 16

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


எச்சரிக்கை
போதும்! நில்லுங்கள்!
இதற்கு மேலே வேண்டாம்!
— ராஜாஜி
அண்ணா
மொழிப் போராட்டம்



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 □ இதழ் 32

இரண்டு பட்ஜெட்டுகள்

காங்கிரஸின் பொருளாதார-ராணுவக் கொள்கைகள் மாறாத வரையில் மத்திய பட்ஜெட் மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டவே முடியாது. சர்க்கார் செலவு ராணுவத்திலும், மற்ற இனங்களிலும் பெருகிக் கொண்டே இருக்கும்போது புது வரி விதிப்புக்களும், பண வீக்கமும் இல்லாமல் வரவுசெலவை எப்படி ஈடுகட்ட முடியும்? எனவே பட்ஜெட்டைக் குறைகூறுபவர்கள் உண்மையில் சர்க்கார் கொள்கைகளிலேயே ஆதாரமான குறை உள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். காங்கிரஸின் சோஷலிஸத் திட்டங்களையும், கூட்டுச் சேராமையையும் ஆதரிப்பவர்கள் பட்ஜெட்டை மட்டும் குறை கூறிப் பயனில்லை.

புது வரி எவ்வளவு என்பதைக் கொண்டு மட்டும் பட்ஜெட்டை எடை போடுவதற்கில்லை. இதுவரை இருந்துவந்துள்ள சுமைகளைக் குறைக்க வேண்டிய இத்தருணத்தில் புதிதாகச் சிறிதளவு பாரம் ஏற்றுவதும் எலும்புகளை நொறுங்கச் செய்வதாகும். இந்தப் புண்ணிய கைங்கரியத்தைக் கூசாமல் செய்திருக்கிறார் ஸ்ரீ மொரார்ஜி தேசாய் அவர்கள். இதுவரையில் கேட்டிராத விதத்தில் தபால்—தந்திக் கட்டணங்களை உயர்த்தி நாட்டின் பரம ஏழை உட்பட எல்லா மக்களுக்கும் அபராதம் விதித்திருக்கிறார். இதனால் கஜானாவுக்கு ரூ. 25 கோடி கிடைக்க வழி செய்திருக்கிறார். ரூ. 290 கோடி துண்டு விழும்படி பட்ஜெட் தயாரித்திருப்பவர், தபால்—தந்திக் கட்டணங்களை உயர்த்தாமல் ரூ. 315 கோடிக்குப் பற்றாக்குறை பட்ஜெட் போட்டிருக்கலாமே! காங்கிரஸின் சோஷலிஸம் அதி விசித்திரமானது. ஏழை இந்தியப் பொதுமக்கள் அனைவரும் உபயோகிக்கும் பொருட்கள் பலவற்றுக்குத் தீர்வை விதிப்பது இந்த சோஷலிஸத்துக்கு முரணாக இல்லை. ரயில்வே பட்ஜெட் வந்தால் எல்லா மக்களையும் பாதிக்கும் விதத்தில் சிறிதேனும் கட்டண உயர்வு இருந்துதான் தீருகிறது. பொது பட்ஜெட் வந்தால் கேட்கவே வேண்டாம்!

ஆனால் உண்மையில் பொதுமக்கள் நேரடியாகச் செலுத்தும் வரியும், கட்டணமும் தவிர, மற்ற மறைமுக வரிகளும், பண வீக்கமும் பணக்காரர்களுக்கு விதிக்கும் நேரடி வரிகளும் கூட ஏதோ ஓர் உருவில் எல்லா மக்களாலும்தான் பகிர்ந்து கொள்ளப் படுகின்றன. முக்கோணத்தின் உருவம் எப்படியிருந்தாலும் அதன் மூன்று கோணங்களையும் கூட்டினால் இரண்டு நேர் கோணம் கிடைப்பது போல், வரிவிதிப்பும் ரூபாய் நோட்டுப் பெருக்கமும் எப்படியிருந்தாலும் அதன் சுமை மக்கள் அனைவரையும்தான் பாதிக்கும். நேரடி வரியைத் தெரிந்து கொடுக்கிறோம். மறைமுக வரியையும், பண வீக்கத்தின் விளைவையும் விலை உயர்வு என்ற பெயரில் தருகிறோம். அவ்வளவுதான் வித்தியாசம். இந்த ஆண்டுப் பட்ஜெட்டைப் பணக்காரர்கள் ஓரளவுக்குச் சகித்துக் கொண்டு வரவேற்பதிலிருந்து பொது மக்களின் சுமை அதிகமாவதாகக் கருதலாம். ஆனால் எந்த ஒரு வர்க்கம் நலிவுற்றாலும் அது மற்ற வர்க்கத்தையும் தாக்கியே தீரும். பணக்காரர்கள் வரிக் கொடுமையால் முதலீட்டைக் குறைத்துக் கொண்டால், அதன் விளைவாக உற்பத்தியும் வேலை வாய்ப்பும் குறைந்து மற்ற மக்களும் இன்னலுக்கு ஆளாவர். அதே போல் ஏழைகளுக்கு வரி விகிதம் அதிகமாயின், அவர்கள் பொருட்கள் வாங்குவதைக் குறைத்துக் கொள்வாராதலால், உற்பத்தியாளரும் இறுதியில் தாக்கப்படுவர். சாமானிய மக்களைப் பாதித்துள்ள இவ்வருட பட்ஜெட் அதே சமயத்தில் பணக்காரர்களின் சேமிப்பும், மூலதனமும் விசேஷமாகப் பெருகுமளவுக்குப் பெரிய மாறுதல்களைச் செய்துவிடவில்லை. தொழில்துறை அடைந்துள்ள பயங்கரமான சுணக்கத்தை யாருமே

அலட்சியம் செய்வதற்கில்லை. ஆதலால், நமது நிதிமந்திரிகூட ஆபத்தை உணர்ந்து ஏதோ சிறிது சலுகைகள் ஆங்காங்கு காட்டியிருக்கிறார்.

பொதுமக்கள் பெருமளவில் உபயோகிக்கப் பழகி வரும் ரேடியோ, டிரான்ஸிஸ்டர், மிட்டாய், சாக்லேட், கார்டு, கவர் இவற்றின் வரிகளை அல்லது கட்டணங்களை உயர்த்திவிட்டு போகாரோ எஃகு ஆலைக்காக ரூ. 110 கோடி செலவு செய்வதிலிருந்து சர்க்கார் கொள்கை இம்மியும் மாறவில்லை என்று உணரலாம். இந்தக் கொள்கைக்கு மொரார்ஜி மட்டும் பொறுப்பில்லை. எனவே பட்ஜெட்டின் பிரம்மாவான அவரை மட்டும் கண்டித்துப் பயனில்லை.

ராணுவச் செலவுகளும் மிக உயர்ந்துவிட்டன. ஏழாண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட இப்போது சுமார் நான்கு மடங்கு அதிகமாக இத்துறைக்குச் செலவாகிறது. ஆயிரம் கோடி ரூபாய் என்ற எல்லைக் கல்லையும் தாண்டி விட்டோம். ராஜாஜி கூறி வருவது போல் உலகத்தின் ஜனநாயக சக்திகளுடன் உடன்பாடு செய்து கொள்ளாமல் நமது ராணுவத் தேவையை எப்படிச் சுயமாகப் பூர்த்தி செய்து கொள்ளப் போகிறோம் என்பதுதான் பெரிய கேள்வி.

இவ்வாண்டில் விவசாய விளைச்சல் பெருகியிருப்பதால் வருகிற ஆண்டில் எல்லாத் துறைகளிலும் புதுப் பொலிவு ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கையின் மீது, துண்டு விழுந்துள்ள 290 கோடி ரூபாயைப் பூர்த்தி செய்யாமல் விட்டிருக்கிறார் மொரார்ஜி. இந்த அளவுக்கு நாட்டில் பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடப் போகிறதா என்பது போகப் போகத்தான் தெரியும். காங்கிரஸ் ஆட்சி நடந்தும்கூட அப்படியொரு சுபிட்சம் ஏற்பட்டுவிட்டால் அதில் நமக்குப் பரம திருப்திதான். ஆனால் ஓராண்டு விளைச்சலை வைத்துக் கொண்டு அல்நாஷர் கனவு காண்பது அவ்வளவு விவேகமாகத் தோன்றவில்லை.

புதிய வரிகள் போடாத தமிழகப் பட்ஜெட், விவசாய உற்பத்தியில் விசேஷ கவனம் செலுத்தியிருப்பது குறிப்பிட வேண்டியது. மதுரை, சென்னையின் சுற்றுப்புறச் சர்க்கார் ஊழியருக்கும், ஆசிரியருக்கும் ஈட்டுப்படி உயர்வு அளித்திருப்பது பலருக்குத் திருப்தி தரும். பொதுவாக விசேஷக் கண்டனத்துக்கோ, பாராட்டுக்கோ இடம் தராத வகையில் தமிழகத்தின் பட்ஜெட் அமைந்துள்ளது.

இரண்டு கேள்விகள் மட்டும் எழுகின்றன. ராஜ்யத்தின் ஒருசில நகரவாசிகளுக்குக் குறைந்த விலையில் அரிசி தருவதற்காக ஏழு கோடிக்கு மேல் செலவிடப்படுகிறது. இதை மற்ற நகரங்களுக்கு விஸ்தரிக்காததால் பலருக்கு அதிருப்தியும் ஏற்பட்டிருக்கிறது. இன்றைய நிதி நிலைமையில் பல நகரங்களுக்கு இத்திட்டத்தை விஸ்தரித்தால் செலவு மேலும் உயரும். ஏற்கனவே இந்த ஏற்பாடு அமுலில் உள்ள நகரங்களில் இதை ரத்து செய்வதற்கும் இல்லை. தருமசங்கடமான நிலைதான். இதிலிருந்து தேர்தலின்போது வாக்குறுதிகள் தருவதில் எவ்வளவு முன்யோசனை தேவை என்பது தெரிகிறது.

இரண்டாவது கேள்வி லாட்டரிச் சீட்டு பற்றியது. மக்களின் உழைப்புக்கோ, அறிவுக்கோ தொடர்பின்றி வெறும் குருட்டு அதிருஷ்டத்தின் மீது தான் லாட்டரிப் பரிசு கிடைக்கிறது. இதற்காக ஏழை மக்கள் சக்தி மீறிச் செலவு செய்யக்கூடும். பரிசுப் பத்திரங்களைப் போல், எல்லா மக்களுக்கும் போட்ட பணம் திரும்பக் கைக்குக் கிடைத்து, ஒரு சிலருக்கு மட்டும் பரிசு விழுவதையேனும் ஓரளவு ஒப்புக் கொள்ளலாம். சில ஆண்டுகளுக்குமுன்பு தமிழ் நாட்டில் குறுக்கெழுத்துப் போட்டிகளில் மோகம் மிகுந்து ஏழையர் ஏராளமாகச் செலவிட்டதையும், பிறகு அவை பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டதையும் இன்று நினைவுகூருகிறோம்.

என்ன சேதி?

'ஹிந்து'வுக்குக் கிடைத்த பரிசு

ஹிந்துப் பத்திரிகைக்குக் கிடைத்தற்கரிய பாராட்டுப் பரிசு கிடைத்ததில் தமிழகமே பெரிதும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருக்கிறது.

அமெரிக்கப் பத்திரிகை பிரசுரகர்த்தர்களின் சங்கம் 1968ம் ஆண்டுக்குரிய பரிசை 'ஹிந்து'ப் பத்திரிகைக்கு வழங்கியிருக்கிறது. கிட்டத்தட்ட நூறாண்டுகளாகச் சென்னையில் மட்டுமின்றி இந்தியா முழுவதிலும் தனது செல்வாக்கை நிலைநாட்டி ஹிந்து அரும் பணியாற்றி வருவதை மேற்கூறிய சங்கம் பெரிதும் பாராட்டியுள்ளது. தீண்டாமை, பால்ய விவாகம், வரதட்சிணைக் கொடுமை, சாதி வித்தியாசம் — ஆகிய சமுதாய விரோத மனப்பான்மைகளை எதிர்த்துச் செய்துள்ள சேவைகளைப் பாராட்டியுள்ளது!

மேற்படி சங்கம் அளிக்கும் பரிசைப் பெற உலக நாடுகளிலுள்ள அத்தனை தினப் பத்திரிகைகளுமே போட்டி போடுகின்றன! அவற்றிலிருந்து 'ஹிந்து'ப் பத்திரிகையைத் தேர்ந்தெடுத்திருப்பது 'ஹிந்து'ப் பத்திரிகையின் சிறப்பான பணிக்கு அளித்த பரிசாகும்.

'ஹிந்து'ப் பத்திரிகை எப்படி இவ்வளவு சிறப்பாகப் பணியாற்ற முடிந்தது என்பதை ஆராய்ந்தால் அதற்குக் காரணம், அதன் வாசகர்களே. கூர்த்த மதியும், முற்போக்குக் கொள்கைகளும், அதே சமயத்தில் பாரதப் பண்பில் நிலையான நம்பிக்கையும் கொண்டவர்கள் தமிழக வாசக மக்கள். ஆகவே, 'ஹிந்து'ப் பத்திரிகை பெற்ற பரிசு தமிழர்களுக்குக் கிடைத்த பரிசு என்று ஒவ்வொருவருமே பெருமிதமடையலாம்!

ஜப்பான் கற்பிக்கும் பாடம்

நமது நாட்டில் குடும்பக் கட்டுப்பாடு அவசியம் என்று வற்புறுத்துபவர்கள், அடிக்

கூடி ஜப்பான் நாட்டைச் சுட்டிக்காட்டி அங்கு குடும்பக் கட்டுப்பாடு வெற்றிகரமாக நிறைவேறி ஜப்பானியர் எவ்வளவு முன்னேறி விட்டார்கள் என்று கூறுவார்கள். அங்கு பெண்கள் கருச்சிதைவு செய்து கொள்வதுகூட சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டிருப்பதையும் கூறுவார்கள். ஆனால் இப்பொழுது ஜப்பானிலிருந்து வரும் செய்திகளைப் பார்த்தால், நாம் எச்சரிக்கையோடு இவ்விஷயத்தில் நடந்துகொள்ள வேண்டும் என்பது விளங்கும்.

இப்பொழுது ஜப்பானில், தொழிற்கூடங்களிலும், காரியாலயங்களிலும் வேலை செய்யக்கூடிய வாலிப, நடுத்தர வயது மக்களின் தொகை கணிசமாகக் குறைந்துவிட்டதாம். பல தொழிற்கூடங்களில் வேலைகள் காலியாக இருக்கின்றனவாம். வேலை செய்பவரிடையேயும் ஓரளவு சோம்பலும் மந்தமும் ஏற்பட்டிருக்கிறதாம். அதனால் வேலை சரிவர நடப்பதில்லை. ''வேலையைச் சரியாகச் செய்யவில்லை'' என்று நீக்கப்பட்டு விடுவோமோ என்ற பயம் தொழிலாளர்களிடையே போய்விட்டதாம். ''இந்த வேலையை விட்டால் இன்னொரு வேலை'' என்று இருக்கிறார்கள். கருத்தூன்றிப் பணியாற்றுவதில்லை. அதனால் விளையக்கூடிய நஷ்டத்தை யாரும் ஊகிக்கலாம்.

இன்னொரு பிரச்னையும் எழுந்துள்ளது. 65 வயதுக்கு மேற்பட்டவர்களின் தொகை பெருகியுள்ளது. இவர்களால் தேச சுபிட்சத்துக்கு உதவக்கூடிய ஒரு விதமான வேலையும் செய்ய முடியாது. ஆனால் அவர்களைப் பாதுகாத்து, ஆதரவளிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கிறது. உற்பத்திக் குறைவும், அரசாருக்குப் பொறுப்பு மிகுதியும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினால் விளைந்துள்ளனவாம்.

'முன்னால் போகிறவன் இடறி விழுந்தால் பின்னால் வருபவனுக்கு விளக்குப் பிடித்த மாதிரி' என்ற பழமொழியில் உள்ள உண்மையைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இருக்குமானால் ஜப்பான் அனுபவம் இந்தியாவுக்கு ஓர் எச்சரிக்கை!

விஞ்ஞானச் சொற்கள்

கல்லூரிகளில் போதனை மொழி தமிழாக இருக்கும் என்று தமிழக சட்டமன்றத்தில் முடிவு செய்யப்பட்டதிலிருந்து, விஞ்ஞான பொறி இயல் விஷயங்களை எப்படித் தமிழில் போதிக்கப் போகிறார்கள் என்ற சந்தேகம் பொதுமக்களிடம் இருந்து வந்தது. இதைக் கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியன் போக்கி வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

சென்ற பிப்ரவரி 29ம் தேதி சென்னை எஸ். ஐ. இ.டி. பெண்கள் கல்லூரியில் பேசிய மந்திரி, ''பொறிஇயல் விஞ்ஞானப் பாடங்களைத் தமிழில் போதிக்கத் தொடங்கப் பல காலம் பிடிக்கும்'' என்று கூறிவிட்டார்.

அதே போல் விஞ்ஞான, பொறி இயல் சொற்களைத் தமிழில் மொழிபெயர்க்காமல் ஆங்கிலச் சொற்களாகவே, தமிழ் எழுத்துக்களில் உபயோகிக்க வேண்டும் என்று மந்திரி நெடுஞ்செழியன் கருத்துத் தெரிவித்திருக்கிறார். ஆக்ஸிஜன், ஹைட்ரஜன் எல்லாம் தமிழில் மொழிபெயர்க்க வேண்டிய அவசியமில்லை. கார்பரேட்டர், ஸ்பானர், டிக்கி என்ற சொற்களை எல்லாம் மோட்டார் ரிப்பேர் தொழிலில் ஈடுபட்டுள்ள எந்தத் தொழிலாளியும் தினம் உபயோகித்து வருகிறார். ரஸிகமணி டி. கே. சி. அவர்கள் சொல்லி வந்தாற்போல், ஆங்கில மொழியிலுள்ள விஞ்ஞான, பொறி இயல் கலைச் சொற்கள், ஆங்கில மொழிக்கு மட்டும் உரியனவல்ல. லத்தீன், கிரீக், பிரஞ்சு ஆகிய மொழிகளிலிருந்து கடன் வாங்கியவை. அம்மொழிகளிலிருந்து ஆங்கிலம் கடன் வாங்கலாமெனில், தமிழ் ஏன் கடன் வாங்கக் கூடாது? பிறமொழிச் சேர்க்கையால் எப்பொழுதுமே ஒரு மொழி கெடுவதில்லை; வளரவும் செய்யும்.

வருந்துகிறோம்

திருச்சி பாய்லர் தொழிற்சாலை மானேஜர் திரு ஆர். எஸ். கிருஷ்ணன் திடீர் என்று மாரடைப்பினால் காலமானார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். திரு ஆர். எஸ். கிருஷ்ணன் 1935ம் ஆண்டு ரெயில்வேயில் மெக்கானிகல் இன்ஜினியராகச் சேர்ந்தார். தமது திறமையாலும் உழைப்பாலும் அவர் படிப்படியாக உயர்ந்து எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தார். அதனாலேயே துர்க்காப்பூரில், இந்திய அரசாங்கம் பிரும்மாண்டமான எஃகுத் தொழிற்சாலை நிறுவத் திட்டமிட்டபோது, திரு ஆர். எஸ். கிருஷ்ணனின் சேவையைக் கோரிப் பெற்றது. இதற்குச் சில ஆண்டுகளுக்குப் பின் 1962ல் திருச்சியில் பாய்லர் தொழிற்கூடத்தின் நிர்வாக அதிகாரியாக நியமிக்கப் பெற்றார். இது அவரது இயந்திரத் தொழில் நுட்பத்திறனுக்குக்கிடைத்த பாராட்டாகும். அங்கு நியமிக்கப் பட்டதிலிருந்து தமது இறுதி மூச்சு வரை திருச்சி பாய்லர் தொழிற்கூடத்தில் அவர் பணியாற்றிப் பலருடைய பாராட்டுக்களைப் பெற்றார். பழகுவதற்கு இனியவரான அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.



ஆர். எஸ். கிருஷ்ணன்

ராஜாஜியின் கருத்துக்கள்

ஹிந்தியர் மீது தமிழையோ தெலுங்கையோ சுமத்துவதன் மூலம் அவர்களுக்கும் ஹிந்தி பேசாதோருக்குமிடையே பாரத்தைச் சமமாக்கலாம் என்ற வாதம் கேலிக்கிடமானது. இரு பிரிவினரையும் சமமாகத் துன்புறுத்தப் பார்த்துக் களிக்கின்ற பரிகாசகரமான குழப்பச் சிந்தனை இது. அமைதிக்கும் திறமைக்குமான நேர் வழியை விட்டு, கோணல் வழி தேடுவதாலேயே காங்கிரஸ் காரியக் கமிட்டி இந்த யோசனைக்கு வந்திருக்கிறது. நேர் வழி ஆங்கிலத்தின் முக்கியத்துவம் குன்றாமல், இன்று போல் நீடிப்பதே. மற்ற மொழிகளை மக்கள் தமது சுயேச்சைத் தேர்வு மூலம் தங்கள் தேவைக்கும் திறமைக்கும் தக்கபடி கற்றுக்கொள்ள விட்டுவிட வேண்டும். தாய் மொழி என்பது இந்தத் தேர்வுக்கெல்லாம் தனிப்பட்டு இருக்கவே இருக்கிறது. தாய்மொழிப் பயிற்சிக்காக இளைஞர்களைக் கட்டாயப்படுத்த வேண்டிய அவசியமே இல்லை.

மக்கள் ஹிந்துஸ்தானி கற்பதை நான் முற்றிலும் ஆதரித்த போதிலும், அதை அகில இந்திய ஆட்சிமொழியாகக் கட்டாயமாக்குவதற்கு நான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன் என்பதைக் காந்திஜி தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தார். இதை ஸ்ரீ பியாரிலால் அவர்களின் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்டிப் பேராசிரியர் அன்பழகன் ராஷ்டிரபதி உரை மீதான விவாதத்தின்போது தெளிவுபடுத்தியுள்ளார். அது பலப்பல ஆண்டுகளுக்கு முந்தைய விஷயம்.

அரசியல்வாதிகள் வேண்டாத பல காரியங்களில் தலையிட்டு மாணவர்களையும் ஆசிரியர்களையும் சீண்டாமல் இருக்கட்டும். எல்லாக் காரியங்களையும் தாங்களே செய்யத் தொடங்கிக் குழப்பத்தை விளைவிக்காமல் அரசியல்வாதிகள் தமக்கு ஓர் எல்லையை வகுத்துக் கொண்டு அதற்குள் திறம்படச் செயலாற்ற வேண்டும்.

ஃஃஃ

மொழிச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஹிந்தி பேசாதோருக்கு அநீதி இழைத்து விட்டது என்று கூறுவதோடு இவ்விஷயத்தை விவாதிக்கின்ற அனைவரும் நிறுத்திக் கொள்கின்றனர். இதன் தொடர்ச்சியாக அவர்கள் சொல்லாமல் விட்டதொன்று உண்டு. அதாவது இந்தத் தீர்மானம் மொழிச் சட்டத்துக்கு இசைவாக இருந்ததால்தான் அதோடு சேர்த்து நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அப்படியானால் இதற்கு இடம் தரும் மொழிச் சட்டமும் கண்டனத்துக்குரியதாகவே இருக்க வேண்டும் என்பது பகுத்தறிந்தால் புரியும். தெளிவின்மையும் இரு பொருள் தொனிப்பதும் சட்ட வாசகங்களில் ஒரு பெரும் குறையாகும். மொழித் தீர்மானம் அநீதமானது. அதை ரத்து செய்ய வேண்டுமெனில் அதை அநுமதித்த சட்டமும் ரத்து செய்யப்பட வேண்டும்; அல்லது திருத்தப்பட வேண்டும்.

ஃஃஃ

அமெரிக்கா அளிக்கும் அந்நிய உதவிகளால் பிற நாடுகளிடையே அமெரிக்காவிடம் நட்பையும், நெருக்கடி காலத்தில் அதற்கு உதவி புரியும் விழைவையும் ஏற்படுத்த இயலவில்லை என்று பென்ஸில்வேனியாவைச் சேர்ந்த ஓர் அமெரிக்கச் சரித்திரப் பேராசிரியர் அப்பட்டமாகக் கூறுகிறார். ''உணவு ஊட்டும் கரத்தைத் தொடர்ந்து கடித்து வருவதில் இந்தியாவைக் குறிப்பாகச் சொல்ல வேண்டும்'' என்கிறார். படிக்கவே வருத்தமாக இருக்கிறது.

ஃஃஃ

நகரங்களில் உள்ள சேரிகளை ஒழிப்பது பற்றித் தினந்தோறும் பேசப்படுகிறது. சேரிகளை அகற்றியாக வேண்டும் என்றே அனைவரும் கருதுகின்றனர். ஆனால் அன்றாட வாழ்வின் கோணத்தில் இந்தப் பிரச்னையைப் பார்க்க வேண்டும். நகரத்தில் வாழ்வோரின் தேவைகளையும், இவர்களுக்கு உதவி புரிந்து தாமும் ஜீவனோபாயம் பெறுவதற்காக நகரத்திலுள்ள தொழிலாளிகளின் தேவைகளையும் கருத்தில் கொண்டே இந்தப் பிரச்னையை அணுக வேண்டும்.

கல்கத்தா அல்லது சென்னை போன்றதொரு நகரத்தில் நடுத்தரமான வீட்டில் வசித்து வாழ்க்கை நடத்தக் கூடிய குடும்பங்களிலெல்லாம் வீட்டு வேலைக்காக ஓரிருவர் அமர்த்திக் கொள்ளப்படுகின்றனர். குடும்ப அங்கத்தினர் செய்ய முடியாத அன்றாட வேலைகளை இவ்வேலைக்காரர்கள் செய்கின்றனர். நகரம் சுத்தமாக, அழகாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறவர்களும், போலீஸ் அதிகாரிகளும், நகரசபை உத்தியோகஸ்தர்களும் இந்த வேலைக்காரர்களையெல்லாம் நகர எல்லைக்கு அப்பால் விரட்டிவிட முடியாது. இவ்வேலைக்காரர்கள் நகர வாழ்வின் ஓர் அவசியமான அங்கமாவர். வீட்டு வேலை செய்யாமல் வேறு விதத்தில் நகர வாழ்வுக்கு உதவும் தொழிலாளிகளும் உள்ளனர். இவர்கள் யாவரும் தாங்கள் வேலை செய்யும் இடத்துக்கு அருகிலேயே தான் வசித்தாக வேண்டியிருக்கிறது. அவர்கள் அன்றாடம் வேலை தொடங்கும் நேரம் அப்படிப்பட்டது.

சேரி ஒழிப்பு என்பது கோஷிப்பதற்கு எளிதானது. ஆனால் ஒழிப்பு என்ற வார்த்தை சரியல்ல. மனிதத் தேவைகளையும் உணர்ச்சிகளையும் மதித்துப் பிரச்னையில் சிந்தனை செலுத்த வேண்டும். இதுகாறும், நகரத்தில் வேலை செய்பவர்களின் குடியிருப்புப் பிரச்னையை அவர்களே தீர்த்துக் கொள்வதற்கு விட்டு விட்டோம். அவர்களை வேலையில் வைத்துக் கொள்ளும் நகரவாசிகள் தங்கள் கடமையில் தவறிவிட்டதையே இது குறிக்கும். இவ்வேலைக்காரர்கள் தாங்கள் சம்பாதிக்கும் அற்பச் சம்பளத்தில் பெரும் குதியைப் பல 'பருந்து'களுக்கு லஞ்சம் கொடுத்துத் தங்கள் குடியிருப்பைக் காப்பாற்றிக் கொண்டு வருகின்றனர். இந்த ஏழை ஆன்மாக்களிடம் நாம் நன்றி காட்ட வேண்டும்.

பிரச்னைக்குத் தீர்வாக ஒரு திட்டம் தேவை. நகரத்தின் மத்தியதர — உயர்தர



காமகோடியின் கருணைமொழி

படம்: ஆந்திர நாட்டில் ஏலூரில் சிவராத்திரி பூஜை நடத்திய ஸ்ரீ காஞ்சி காமகோடி பெரியவர்களை அதற்கு முந்தின நாள் தேனுபுரி சம்ஸ்கிருத ஸ்மார்த்த பாடசாலை சமிதியில் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்கின்றனர்.

துணி அழுக்கு இல்லாமல் இருந்தால் போதாது. உடம்பு அழுக்கு இல்லாமல் இருந்தால் போதாது. வீடு அழுக்கு இல்லாமல் இருந்தால் போதாது. நம் மனம் அழுக்கு இல்லாமல் இருக்க வேண்டும். அதற்கு அம்பாளுடைய சரணாரவிந்தத் தியானம் தான் வழி.

வகுப்பினர் வாழ்வதற்குச் சௌகரியமாக அழுக்குப் படிந்த வேலைகளைச் செய்யும் தொழிலாளிகளுக்குக் கௌரவமான ஆரோக்கியமான வீடுகள் அமைத்துத் தருவதற்கு நகரசபைகள் திட்டம் வகுக்க வேண்டும். நகரத்தின் ஒவ்வொரு தொகுதியிலும் இதற்காக ஒரு பகுதியை ஒதுக்கி வைக்க வேண்டும். நாள்தோறும் வளர்ந்து வருகிற மத்தியதர — உயர்தர வர்க்கத்தினர் இப்பகுதிகளை விழுங்கிவிடாமல் நகர சபையினர் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்பகுதிகளை அரசாங்கச் சொத்தாக்கி, எவரும் அவற்றைச் சொந்தச் சொத்தாக்கிக் கொள்ள முடியாமல் தடுக்க வேண்டும். மிகுந்த கவனத்துடன் இதுபோல் விரிவாக ஒரு திட்டம் வகுப்பதே 'சேரி ஒழிப்பு'க்குக் கிரமமான வழி.

ஃஃஃ

அடியிற் காணும் வாசகங்கள் மிகவும் மதிக்கத் தக்கனவாதலால் 'பவன்ஸ் ஜர்னல்'லிலிருந்து அவற்றை எடுத்துத் தருகிறேன்:

பொறியியல், வைத்தியக் கல்லூரிகளிலும் ஆராய்ச்சி சாலைகளிலும் சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் இவற்றிலும் ஆங்கிலத்தின் இடத்தில் ஹிந்தியையோ, பிரதேச மொழியையோ அமர்த்துவதால் குழப்பம்தான் விளையும். பின்னேற்றமும் ஏற்படும். —கே. சந்தானம்

ஃஃஃ

ஆரம்பத்தில் தொழிலதிபர்கள்பால் என்னுள்ளே வெறுப்புப் பதுங்கியிருந்தது. ஆனால் அவர்களை நெருக்கமாக அறிந்து கொள்ளும் வாய்ப்புக்கள் கிடைத்த பின், அவர்கள் ராஜ்யத்தின் முன்னேற்றத்துக்கும், தொழிற் பெருக்கத்துக்கும் எவ்வளவு தேர்ந்த கவனத்துடன் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். —சி. என். அண்ணாதுரை

ஃஃஃ

தென்னிந்தியாவில் — குறிப்பாகத் தமிழகத்தில் — மொழிப் பிரச்னை குறித்து மாணவர் நடத்தும் கிளர்ச்சி, தில்லியின் கவனத்தை மிகவும் கவர்ந்திருக்கிறது. 'தமிழ் நாட்டில் தீவிரவாதிகள் எவ்வளவு பேர் இருப்பார்கள்? அரசியல் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள் இவர்களைவிடக் குறைவாக இருப்பார்களா? அதிகமாக இருப்பார்களா?' என்றெல்லாம் கணக்குப் போட்டுப் பார்க்கிறார்கள். இந்தக் கணக்குகள் தப்பாகப் போகும். ஏனெனில், அக்கருத்தலின் மீது சிலர் தீவிரவாதிகளை எதிர்க்காமலிருந்து விடுவார்கள். ஒரு குறிப்பிட்ட தினத்தில் நகரத்தின் எல்லாக் கடைகளும் மூடி

விருந்தால், அதைக் கொண்டு எல்லாக் கடைக்காரர்களும் ஒரே கருத்தில் ஏகோபித்து ஹர்த்தால் செய்கிறார்கள் என்று கொள்ள முடியாது. வன்முறைகளில் இறங்கக் கூடியவர்களுடன் பலப் பரீட்சை பார்க்கத் தயாராக இல்லாததாலேயே இவர்களில் பலர் கடையை மூடியிருக்கக்கூடும்.

சட்டப்படியும், சட்டத்தை மீறியும் நடப்பவர்களின் விகிதாசாரம் எப்படியிருப்பினும் சரி, தென்னாட்டு மக்களின் **எல்லாப்** பகுதியினருமே ஒருமித்து மொழிப் பிரச்னை மீது மிகவும் கொதிப்படைந்திருக்கிறார்கள். இவர்களில் ஒரு சாரார், தமிழக அரசாங்கத்தின் எதிர்ப்புக் காரணமாகத் தில்லியிலுள்ள காங்கிரஸ் சர்க்காரின் மொழிக் கொள்கை மாறவே செய்யும் என்று நம்புகின்றனர். மற்றவர்களுக்கு இந்த நம்பிக்கை போய்விட்டது. எனவே, சமீப காலப் பொது வாழ்வின் அநுபவப்படி, சில அழுத்தமான உபாயங்களைக் கையாண்டாலே பலன் ஏற்படும் என்று இவர்கள் கருதுகின்றனர். அனைவரும் ஆட்சேபித்துள்ள மொழிக் கொள்கையில் சிறிது இணக்கத்தைக் கிளர்வாதி மாணவர்கள் கண்டால், முதன்மந்திரி அவர்களும் நானும் சேர்ந்து வெளியிட்டுள்ள அறிக்கைக்கு அதிக மதிப்புத் தருவர்.

ஸ்ரீ சவான் அவர்களின் அறிக்கை ஓரளவு நிம்மதி தந்தாலும் அது போதாது. மூட்டுக்களுக்கு எண்ணெய் போடுவது போல், திரு அண்ணாதுரை செயலாற்றுவதற்கு அதிக சௌகரியம் செய்து தர வேண்டும். பல சந்தர்ப்பங்களில் கடும் நடவடிக்கை தேவைப்படுவதுண்டு. ஆனால் இளம் உள்ளங்களைக் கையாளும் போது அடக்குமுறையால் மனக் கசப்பை வளர்ப்பதன்றி வேறெதுவும் சாதிக்க முடியாது. மாணவர்களின் மனோபாவத்தைப் பக்குவம் பெறாதவர்களின் போக்கு என்று அலட்சியம் செய்துவிட முடியாது. மத்திய சர்க்காரின் கொள்கையால் அடுத்த தலைமுறைகளில் எத்தகைய விளைவுகள் ஏற்படும் என்பதை நன்கு புரிந்து கொண்டதன் மீதே மாணவர்கள் கொதிப்படைந்திருக்கின்றனர்.

தென்னகத்தின் இளம் மக்களுடைய மனத்தில் ஏற்றும் சுமையாலும் அவநம்பிக்கையாலும், இறுதியில் அவர்களுக்கு வடநாட்டு மக்களிடம் துவேஷம் உண்டாகும் என்பதைத் தேசத் தலைவர்கள் உணர வேண்டும். காலதாமதம் செய்து, சந்தேகங்கள் வேரூன்ற இடம் தந்துவிட்டால் பிறகு துவேஷத்தின் போக்கைத் தடுப்பது சிரமமாகிவிடும். அறிவுக்கு இசைந்த முறையில், சுமுகமான முறையில்தான் இப்போக்கைத் தடுக்க முடியும். பதிலடி தருகிற ரீதியில், வடக்கே வாழ்ந்து அந்நாட்டவரிடம் நல்ல பெயர் எடுத்து அமைதியாக வாழ்ந்து வரும் தென்னிந்தியர்மீது துவேஷத்தைத் தூண்டி விடுவதால் பிரச்னையைச் சமாளிக்க முடியாது.

உலக சர்க்காரும், உலகச் சட்டமும் உருவாகும் வரையில் நாடுகள் போட்டி போடுவதையும் போர் புரிவதையும் நாம் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் ஒரே சர்க்காரின் கீழுள்ள ஒரு நாட்டுக்குள்ளேயே இவ்விதப் போட்டிகளும், பதிலடிச் சண்டைகளும் ஏற்பட்டால் நம்மால் தாங்க முடியாது.

* * *

மொழிப் பிரச்னையை வைத்துப் பிரிவினை கோருவது வருந்தத்தக்கது. நிருவாகத்திலும் கல்வியிலும் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்று நான் சொல்வது இந்தியாவின் மற்றப் பகுதிகளோடு நாம் **ஐக்கியமாக** இருக்க வேண்டும் என்பதற்கேயன்றி, தமிழ் நாட்டைத் தனிக் கொடியின் கீழ் பிரிப்பதற்காக அல்ல என்பதை உணர வேண்டும்.

* * *

எந்த இனத்தவரும் நிறத்தவரும் பிரிட்டனுக்குக் குடியேறி அதன் பிரஜையாவதை இவ்வளவு காலமும் தடுக்காதிருந்த பிரிட்டன், இப்போது மனச்சாட்சியைவிடச் சமயோசித சௌகரியத்தைப் பெரிதாக மதித்து, அக்கொள்கையை மாற்றிவிட்டது. இவ்விஷயத்தில் மற்றப் பல பெரிய நாடுகளோடு சேராமல் தனித்து நின்ற பிரிட்டனின் மக்கள் சபை இப்போது தன் சரித்திரத்திலேயே புதுமையான முடிவு செய்துவிட்டது. சோதனைக் காலம் ஏற்பட்டபோது பிரிட்டனின் மனச்சாட்சி அடிபணிந்து விட்டது. பிரிட்டனுடன் முன்பு நாம் கொண்டிருந்த தொடர்பு காரணமாக இந்தத் துன்பமான முடிவைக் கண்டு நாம் வருந்துகிறோம். நீண்ட காலமாகப் போற்றி வளர்க்கப்பட்ட ஒரு கொள்கையிலிருந்து நழுவுவதற்குத் தேசியப் பெரும்பான்மையின் ஆதரவைப் பெற்று விட்டார் பிரதமர் வில்ஸன் என்றே சொல்லலாம்.

அட்டைப்பட விளக்கம்

இயற்கைத் தொழில்

இந்தப் புவிதனில் வாழும் மரங்களும்
இன்ப நறுமலர்ப் பூஞ்செடிக் கூட்டமும்
அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும்
ஔடத மூலிகை பூண்டுபுல் யாவையும்
எந்தத் தொழில் செய்து வாழ்வனவோ?

— பாரதியார்

மனோரம்மியமான இயற்கைக் காட்சியை வண்ணப்படமாக எடுத்தளித்தவர்: ஆர். பி. எஸ். மணி

நளினத்துக்கு ஒரு நங்கை

சென்னை பெண்கள் கிறிஸ்துவக் கல்லூரி வரவேற்பறை. சென்னை சர்வகலாசாலை கூடைப் பந்தாட்ட காப்டன் மிஸ் இரேனி தாமஸும் கிறிஸ்துவக் கல்லூரி விளையாட்டு ஆசிரியை ஸ்ரீமதி மதுரமும் அமர்ந்திருந்தனர். இரேனி தன் பெயருக்கேற்ப நளினமாக இருக்கிறளா என்பது அவளை அடையப் போகிறவர் கூற வேண்டிய சொந்த அபிப்பிராயம். ஆனல் கூடைப் பந்தாட்டத்தில் அவள் காட்டும் நளினத்தையும் லாகவத்தையும் யாராலும் மறுக்க முடியாது! இரேனி மைதானத்தில் 'இரேஸ் புல்'லாகத்தான் செயல்படுகிறன், சந்தேகமில்லை!

''மிஸ் இரேனி! உங்களுக்குப் பாஸ்கெட் பால் விளையாட்டில் ஆர்வம் ஏற்பட்டது எப்படி?'' என்று கேட்டேன்.

''என் தந்தை டாக்டர் தாமஸ் டென்னிஸிலும் கூடைப் பந்தாட்டத்திலும் வல்லுநர். எனது சகோதரர் டாக்டர் ஈப்பன் தாமஸ் வேலூர் கிறிஸ்துவ வைத்தியக் கல்லூரியின் சாம்பியன். என் சகோதரர் இன்ஜினியர் குருவில்லா தாமஸ் சிறந்த கூடைப் பந்தாட்டக்காரர். எங்கள் குடும்பமே விளையாட்டுக் கலையில் தேர்ந்து விளங்கும்போது எனக்குக் கூடைப் பந்தாட்டத்தில் ஆர்வம் பிறந்ததில் ஆச்சரியமில்லையல்லவா?'' என்றுள் மிஸ். இரேனி.

''எங்கள் பெண்கள் கிறிஸ்துவக் கல்லூரியில் சர்வ கலாசாலைக் கூடைப் பந்தாட்டத்தில் கலந்து கொள்ள ஐந்து பெண்கள் இருக்கிறர்கள். சாந்தா மார்கோஸ், சாந்திபரமேச், லீலா தாமஸ், பாரதி மங்கேர், காப்டன் இரேனி'' என்று பெருமையுடன் சொன்னுர் விளையாட்டு ஆசிரியை ஸ்ரீமதி மதுரம்.

''நான் 1964ம் வருஷத்திலிருந்து சென்னை சர்வ கலாசாலை கூடைப் பந்தாட்டக் குழுவுக்குக் காப்டனுக இருந்துவருகிறேன். அநந்தபுரத்திலும், பங்களூரிலும் சர்வகலாசாலைப் போட்டிகளில் கலந்துகொண்டு ஆடினேம். முதல் படி, இரண்டாம் படிகளிலே சறுக்கிவிட்டது. 1966ம் வருஷம் சர்வகலாசாலைப் போட்டிகளில் 'ரன்னர்' படியை அடைந்தோம். சென்னை சர்வ கலாசாலைக் கோஷ்டிக்கு 'மாட்ச்' ஆரம்பிக்கவிருக்கும் சமயத்தில் ஆட்டக்காரிகளைத் தேர்ந்தெடுக்கிறர்கள். ஒரு மாதத்துக்கு முன்பே ஆட்டக்காரிகளைத் தேர்ந்தெடுத்து, நல்ல 'கோச்சை'க்கொண்டு அவர்களுக்குப் பயிற்சி அளித்துச் சர்வ கலாசாலைப் போட்டிகளில் கலந்துகொள்ள வைத்தால் நாங்கள் இன்னும் சோபிக்க முடியும்; வெற்றியும் பெற முடியும்.

''நாங்கள் பள்ளிக்கூடம் படிக்கையில் கூடைப் பந்தாட்டம் கற்றுக் கொள்ளவில்லை. கல்லூரிக்கு வந்த பிறகே, அந்த ஆட்டத்தில் பயிற்சி ஏற்பட்டது. சர்வகலாசாலை 'கோச்' பொன்னுராஜ் எங்களுக்கு நல்ல பயிற்சி அளித்திருக்கிறர். 1967ல் சென்னை ராஜ்ய ஆட்டக்காரியாக ஜபல்பூரில் நடந்த தேசிய விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளவிருந்தேன். மொழிச் சண்டை ரகளை என்னைப் போட்டிக்குப் போக விடாமல் தடுத்து விட்டது! பி. எஸ்ஸி. பாஸ் செய்ததும் பம்பாய் போகலாமென்றிருக்கிறேன். வீட்டை அழகுபடுத்தும் கலைப் பயிற்சி ஒரு வருஷம் பயிலப் போகிறேன். என்ன இருந்தாலும் பெண்கள் பெண்கள்தானே?'' என்றுள் மிஸ் இரேனி.

''மிஸ் இரேனிக்குப் பொழுதுபோக்கு வண்ண ஓவியம் தீட்டுவதும், புத்தகம் படிப்பதும்தான். ஆனல் கூடைப் பந்தாட்டத்தில் தமிழகத்துக்கு நல்ல புகழைச் சம்பாதித்துவிட வேண்டும் என்று துடியாய்த் துடிக்கிறள்!'' என்றுர் விளையாட்டு ஆசிரியை மதுரம்.

ஆசையோடு இரேனிக்குத் திறமையும் இருப்பதால் அவள் எண்ணம் கை கூடலாம்.

— குண்டுமணி.



உலக அரங்கில் ஒளி மிகு பாரதம்




உலகத் தொழில் கண்காட்சியின் நுழை வாயில்.

சென்னையில் நடக்கும் கண்காட்சி உலக நாடுகள் பலவற்றுக்கும் ஓர் அரங்கமாகத் திகழ்கிறது. ருமேனியா, ருஷ்யா, பல்கேரியா, போலந்து, ஜெர்மனி, செக்கோஸ்லவாகியா தாய்லாந்து, இலங்கை என்று எத்தனையோ நாடுகள் தங்கள் தங்கள் தேசத்தின் சிறப்பினை எடுத்துக்காட்ட இந்தக் கண்காட்சியினை ஒரு நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளன. இதற்கிடையில் காஷ்மீரம் முதல் விவேகானந்தர் பாறை வரை பரந்து விரிந்து கிடக்கும் பாரதத்தின் பலப்பல ராஜ்யங்களும் மண்டபங்கள் அமைத்துத் தமது சிறப்புக்களை உணர்த்துகின்றன. என்னதான் இனம் மொழி வேறுபட்டாலும் பாரதம் ஒன்று; அதை எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாது என்பதை நிலைநாட்டுகிறது தமிழ் நாடு. தான் வளருவதோடு, தனது சகோதர ராஜ்யங்களும் நாடுகளும் வளருவதைக் கண்டு மகிழும் தமிழ் நாடு தனித்து இயங்குவதை என்றென்றும் விரும்பாது. இதை அனைத்துலக வர்த்தகத் தொழில் பொருட்காட்சியின் அமைப்பு உறுதிப்படுத்துகிறது.

ராஜ்ய அரங்குகளில் எல்லாம் கலைச் சிறப்பில் உயர்ந்து நிற்பது குஜராத் ராஜ்ய மண்டபம். குடைகள் விரித்தாற் போன்ற அழகிய தோற்றம். எடுத்த எடுப்பிலேயே கம்பீரமாக நின்று வரவேற்கும் கிர் காட்டுச் சிங்கம். மண்டபத்துச் சுவர்களில் வெளிப்புறம் வண்ண வண்ண நிறங்களில் கண்கவர் ஓவியங்கள். குஜராத்தில் பிறந்து பாரதத்துக்கே வழிகாட்டிய மகாத்மா காந்தியையும், வல்லபபாய் பட்டேலையும் மறந்து விடுவார்களா? ஏராளமான புகைப்படங்கள் அவர்களது வாழ்க்கை வரலாற்றையே கண்முன் விரிக்கின்றன.

இவ்வளவுக்கும் மேலாக அங்கு கண்ணைக் கவருவது ஓர் இளஞ் சிறுமியின் எழிற் சித்திரம். அந்தப் பேசும் பொற் சித்திரத்துடன்



போலந்து நாட்டு அரங்கின்


பேசாமல் பேசும் மக்கள் இலேசில் நகர மாட்டார்கள்.

மகாராஷ்டிரக் காட்சியோ பெயருக்கேற்ப மகா பெரியது. புகைப்படங்களை மிகத் திறம்படப் பயன்படுத்தியிருக்கிறார்கள். துகாராமையும் ஞானேசுவரரையும், நாமதேவரையும், ஏகநாதரையும் தந்த மகாராஷ்டிரம்தானே சிவாஜியையும் திலகரையும் கோகலேயையும் தந்தது? — இவ்வாறு சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்த்துக்கொண்டே செல்வோமானால் முன்னேறி வளர்ந்திருக்கும் மகாராஷ்டிரம், 'இதோ என்னைப் பார். என்னைப் பார்' என்று அழைப்பு விடும்.

'வழியைக் கண்டு பிடி, பார்க்கலாம்!' என்று குழந்தைகளுக்கான புதிர்களைப் பாப்பா மலர்ப் பகுதிகளில் பத்திரிகைகளில் காணலாம். அப்படி மகாராஷ்டிர மண்டபத்தினுள்ளே பாதை வளைந்து வளைந்து திருப்பத்துக்கு மேல் திருப்பமாக நீண்டு சென்று கொண்டே இருக்கிறது. வழி நெடுக மகா

ராஷ்டிரத்தின் தொழில் வளம் தனியார் துறையிலும் பொதுத் துறையிலும் எப்படி யெல்லாம் வளர்ந்திருக்கிறது என்று பார்த்துக்கொண்டே போகிறோம். காட்ரிஜ் பிரோ முதற்கொண்டு மின்சாரக் கல்லூரல் வரை, டாக்ஸி மீட்டர் முதல் சஸ்திர சிகிச்சைக்கான பல்வேறு உபகரணங்கள் வரை எத்தனையோ பொருள்கள் இங்கே நிரையத் நிரைய அடைந்து கிடக்கின்றன.

'ஆட்டோ காஷியர்' என்று ஒருவரைக் கண்டோம்! மனிதனது உதவியில்லாமல் சில்லறை தரும் இயந்திர உருவில் இருந்தார் அவர். ஆசையோடு அரை மணி கால் கடுக்க நின்று பார்த்தும் அவர் மனம் இளகவில்லை; தம்பிடி தரவில்லை! அப்புறம்



ஒரு தோற்றம்.

தான் புரிந்தது; ரூபாய் நோட்டைப் போட்டால்தான் கணக்காக எண்ணி அவர் சில்லறை தருவாராம்!


இந்தியப் பாதுகாப்புத் துறைக்குள் நுழைந்தால் 'நாட்' விமானம் நின்றுகொண் டிருந்தது! பல விதத்திலும் சிறந்த பாகிஸ்தானிய ஸாபர் விமானங்களை நொறுக்கித் தள்ளிய இவை 'ஸாபர் கொல்லிகள்' என்று பிரசித்தி பெற்றுள்ளன. இத்துடன் நாட் விமானம் பயிற்சி விமானம்தானும். அதன் சாதனை இத்துணை பெரிது என்றால் 'விமானம் பாதி விமானி பாதி' என்று ஒரு புதுமொழியை ஏன் உருவாக்கக் கூடாது?

இமயமலைப் பகுதிகளில் கடும் குளிரில் உயிரைத் திருணமாக மதித்துப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள போர் வீரர்களை இங்கே காண்கிறோம். அவர்களுக்குத் தேவையான உடை முதலியவற்றையும் காண்கிறோம்.

பாண்டிச்சேரியும் தன் பங்கைப் பாருக்கு எடுத்து ஓதுகிறது. உலக நகரமாகத் தயாராகப் போகும் 'ஆரோவில்' இப்போதைக்குக் கனவு நகரமாகத் தோன்றினாலும், ஒருநாள் உலகத்தின் சொர்க்கமாகத் திகழுமோ என்று கற்பனை செய்யக் கூடிய அளவுக்கு நம்மைக் கவருகிறது! பாண்டிச்சேரியின் பல வாசனைத் திரவியங்கள் பலரை 'பீஸ்' கிழிக்க வைக்கின்றன.

போலந்து, பல்கேரியா, ஹங்கேரி, மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி போன்ற பல்வேறு நாடுகள் தங்கள் இயந்திர வளத்தைப் பறைசாற்றுகின்றன. அவை பெரும் பெரும் புகைப்படங்களால் ஓர் அற்புத உலகையே சிருஷ்டித்துக் காட்டுகின்றன. அந்நாடுகளின் வளர்ச்சியையும் கூடவே புகைப்படம் எடுக்கும் உத்தியின் வளர்ச்சியையும் பார்த்து மெய் சிலிர்க்கிறோம்.


மேற்கு ஜெர்மனியின் காட்சிப் பகுதியில், பொங்கு புனல் இசைக்கேற்ப நடனமாடுகிறது—இதைப் பார்க்க




கிழக்குஜெர்மனி அரங்கத்தினுள்ளே காட்சிதரும் இயந்திரங்கள்.


இனி மக்கள் கூட முடியாது. ஏனெனில் பொருட்காட்சி மார்ச் 11ந் தேதி வரை நீடிக்கப்பட்ட போதிலும் மேற்கு ஜெர்மனி போன்ற சில அயல் நாட்டு அரங்குகள் ஆரம்பத் திட்டப்படியே குறித்த தேதியில் மூடுவிழா நடத்திவிட்டன.

வர்த்தகத் துறை ஏற்றுமதிப் பொருள்கள் பகுதி.






கவினுறு மைசூர் அரங்கத்தின் முன்தோற்றம்.



இந்திய சர்க்காரின் கண்காட்சிப் பகுதியான
'இன்றைய பாரதம்!'



பிரும்மாண்டமான இயந்திரங்களைக் கொண்டு
மக்களை மயக்கவைத்த ருஷ்ய அரங்கம்.

ஒரிஸ்ஸா ராஜ்ய மண்டபத்துக்கு நம்மை வரவேற்பவர்கள் அப்ஸர மாதர்கள்! கொனரக் சூரிய தேவன் கோயிலில் உள்ள ஆரணங்குகள். உலகில் உள்ள அழகையெல்லாம் ஒன்று திரட்டிக்கொண்டு வந்து நிற்பது போன்ற இந்தத் தேவ 'மாதர்கள் கொனரக்கில் கல்லாக நிற்கிறார்கள். இங்கே புகைப்படமாக மாறியிருக்கிறார்கள். மண்டபத்தினுள்ளே கைவினைஞர்களின் திறமையைக் காண்கிறோம். வெள்ளியில் வேலைப்பாடுகள் செய்வதில் நிபுணர்கள் கலிங்கத்தில் உண்டு; நுணுக்கமான சித்திர வேலைப்பாடுகளுடன் வெள்ளிச் சாமான்கள் காட்சிப் பொருள்களாகத் திகழ்கின்றன.

ஒரிஸ்ஸாவுக்குப் பக்கத்திலேயே உள்ள உத்தரப் பிரதேசத்துக்குள் நுழையும்போது ''இனி இதை ராஷ்டிரபதிப் பிரதேசம்'' என்றே அழைக்கலாம் என்கிறார் நண்பர்.


சிரித்துக் கொண்டே மேலே செல்கிறோம். குஜராத்தில் சிம்மம் வரவேற்றது என்றால் இங்கே புலி வரவேற்புக் கூறுகிறது. வியாபாரிக்கு உதவும் இரும்பு பீரோ முதல் விஞ்ஞானிக்கு உதவும் மைக்ரோஸ்கோப் வரை உ. பி. யில் தயாராகும் பல பொருள்களை வைத்திருக்கிறார்கள். மனம் லயிப்பது பிரும்மாண்டமான தாஜ் மஹலில். சலவைக் கல்லால் செய்யப்பட்ட சிறிதும் பெரிதுமான பல தாஜ்மஹல்கள், பீங்கான் பொருள்கள், அழகிய வேலைப்பாடுகளுடன்கூடிய பித்தளைச் சாமான்கள், ரத்தினக் கம்பளங்கள் முதலியனவும் காண்போரின் கவனத்தைக் கவருகின்றன.

சிமெண்ட் இந்தக் காலத்தில் வீடு கட்ட அத்தியாவசியமான ஒன்று. ஆனால் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் மொஹஞ்சதாரோவில் கூட சிமெண்டை உபயோகித்தார்கள் என்று சொன்னால் — அது கொஞ்சம் மட்டரக சிமெண்ட்தான் என்றாலும் — பிரமிப்பு அதிகமாக இருக்குமா, பெருமிதம் மீறுமா? எகிப்திய பிரமிட்டுகளின் அமைப்பிலும் எரிக்கப்பட்ட ஜிப்ஸம் சிமெண்டின் பணியைச் செய்திருக்கிறது. இடையில் சிறிது காலம் சிமெண்ட் தயாரிக்கும் கலை

மறைந்து போய் மீண்டும் இங்கிலாந்தில் 19ம் நூற்றாண்டின் மத்தியில் சிமெண்ட் தோன்றியது. இன்று இந்தியாவில் ஐம்பத்தைந்து சிமெண்ட் ஆலைகள் உள்ளன.

சிமெண்ட் தயாரிப்பாளர் சங்கத்தினர் மண்டபத்துக்குள் சென்றால் சிமெண்டின் சரித்திரத்தை மட்டுமின்றி அதை இன்று எவ்வாறு தயாரிக்கிறார்கள் என்ற விவரத்தையும் நன்கு அறியலாம்.

தமிழக அரசின் சாதனைகளை ஒரு காட்சியில் காண்கிறோம். அழகானதொரு கோபுரத்தை அமைத்து வரவேற்கிறார்கள். கோபுரத்தைத் தரிசித்துவிட்டு உள்ளே நுழைந்தால் விவசாயம், மின்சாரம், வர்த்தகம், கால்நடைச் செல்வம் ஆகிய பகுதிகள் செய்து வரும் சாதனைகளைக் காண்கிறோம். பக்தியின் பெயரால் அரிய சிற்பக் கலையை வளர்த்துக் கலைகளில் கோபுரமாகத் திகழும் தமிழ் நாட்டுச் சிற்பங்களும் கண்களை விட்டு அகலாதவை. தமிழகத்தில் தனியார் துறையின் சாதனைகள் அளவிறந்தவை. அவற்றைத் தனித் தனி அரங்குகளில் விரிவாகக் காண்கிறோம், இந்த உலகப் பொருட் காட்சியிலே.



ஆந்திரப் பிரதேசமும் தன் பங்கு சோடையில்லை என்பதை நிரூபிக்கிறது. விவசாய, வியாபார, தொழிற்துறைகளில் ஆந்திரம் கண்டிருக்கும் சாதனைகள் அபூர்வமானவை! உணவுக்குப் பஞ்சமில்லாத ராஜ்யம், உலகத்துத் தொழில்களோடு போட்டி போடுவதில் என்ன அதிசயம்? இயற்கை வளமுள்ள இடத்தை எந்த வளமும் தானாகவே நாடுவது இயல்புதானே? இருந்தாலும் அதன் வளர்ச்சிக்கு இன்னும் வாய்ப்பு இருக்கிறது என்பதைக் கூறாமல் இருக்க முடியாது!

கர்நாடக ராஜ்யம் நீர்வளமும் நிலவளமும் நிறைந்தது. பல சமயங்களில் மின்சாரத்துக்கு அண்டை நாடுகள் அதனிடம் தவம் கிடக்க நேருகிறதே! இது ஒன்று போதாதா, அந்த ராஜ்யத்தின் செழிப்புக்கு! பெரிய பெரிய தொழிற்சாலைகள் இங்கே நிறுவப்பட்டுள்ளன. தனியார் துறையும் பொதுத் துறையும் போட்டி போட்டுக் கொண்டு இங்கு செயல்படுகின்றன! பொன் விளையும் பூமி ஆயிற்றே! வெட்டி எடுக்கப்பட்ட கச்சா பொன் கட்டிகளைப் பார்வைக்கு வைத்திருக்கிறார்கள் இங்கே. பொன்னைப் பார்க்கப் பெண்களின் கூட்டம் குழுமுகிறது. மைசூர், சந்தனத்துக்கும் அல்லவா பெயர் போன பூமி! சந்தனத்தால் செய்யப்படும் சோப்புகள், கலைப் பொருள்கள் ஆகியவற்றையும் குவித்திருக்கிறார்கள்.

இந்திய அரசாங்கம் ஏற்று நடத்தும் பல தொழில் வர்த்தக ஸ்தாபனங்கள் பல கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கி வருவதாகப் பல முறை நாம் குற்றம் சாட்டியிருக்கிறோம். இந்தத் தடவை லாபகரமாக இயங்கும் ஒரு ஸ்தாபனத்தை இங்கு கட்டிக் காட்ட விரும்புகிறோம். அதுதான் இந்திய ஷிப்பிங் கார்ப்பரேஷன் எனப்படும் இந்தியக் கப்பல் நிறுவனம். 1961ம் ஆண்டு காந்தி



அண்டை ராஜ்யமான கேரளத்தின் கலை, தொழில் வளர்ச்சியை இங்கே காணலாம்.

அடையார்
கோயமுத்தூர்
காஞ்சீபுரம்
காஷ்மீர்

வெங்கடகிரி
பனாரஸ்
சின்னாளபட்டி
கத்வால்



கைத்தறி
வாரத்தை
முன்னிட்டு
3-3-68 முதல்

10%

விசேஷ
தள்ளுபடி

எல்லா பட்டு
மற்றும் நூல்
ஜவுளிகளுக்கு
அளிக்கப்படுகிறது.

ஹாண்ட்லூம் ஹவுஸ்
9, ரட்டன் பஜார், மதராஸ்-3.

PDS HH 742 TM

ஞாயிற்றுக்கிழமைகளில் விற்பனை உண்டு

எழும்பூர் கைத்தறி பொருட்காட்சியிலுள்ள ஹாண்ட்லூம் ஹவுஸ் பெவிலியனுக்கும்
உலக வர்த்தகத் தொழில் பொருட்காட்சியில் பிளாட் 43-A யிலுள்ள
எங்கள் ஸ்டாலுக்கும் விஜயம் செய்யுங்கள்!

மகான் பிறந்த அக்டோபர் 2ந் தேதி இந்த ஸ்தாபனம் 19 கப்பல்களுடன் தொடங்கப் பட்டது. இது படிப்படியாக லாபகரமாக வளர்ந்து இப்போது 48 கப்பல்களுடன் பணி புரிந்து வருகிறது. கூடிய சீக்கிரம் இன்னும் 32 கப்பல்களைச் சேர்த்துக்கொள்ளும்.

இந்த நிறுவனத்தின் மற்றொரு சிறப்பு வெளியிலிருந்து கடன் வாங்காமல், தான் சம்பாதிக்கும் லாபத்தைக் கொண்டே வளர்ந்திருப்பது. இதன் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருப்பவர்களின் திறமையையே இது காட்டுகிறது.

1966–67ம் ஆண்டு இந்த நிறுவனம் 14 கோடிக்கு அதிகமாகவே அந்நியச் செலாவணி சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது.


வர்த்தகக் கண்காட்சியில் கப்பல் கார்ப்பரேஷனின் பெவிலியன் அழகும் வனப்பும் மிக்கதாக உள்ளது. ஒருபுறம் ராமர்—சீதை—லட்சுமணர்களைப் படகில் ஏற்றிக் கொண்டு குகன் கங்கையைக் கடக்கும் காட்சியையும், மற்றொருபுறம் தேவாசுரர்கள் அமிர்தம் கடையும் காட்சியையும் வெகு நேர்த்தியாகக் கலையழகுடன் அமைத்திருக்கிறார்கள். கடல் மார்க்கமாக நமது வர்த்தகம் வளர எவ்வளவோ வாய்ப்பிருக்கிறது என்பதை நன்கு புலப்படுத்தியுள்ளார்கள்.

சென்னையிலே வெகு விரைவில் எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிற்சாலை உருவாகப் போகிறது. இந்தத் தொழிற்சாலை வருஷம் 2.5 மில்லியன் டன் எண்ணெயைச் சுத்தப்படுத்தித் தருமாம். தேசிய இரானிய எண்ணெய்க் கம்பெனி, அமெரிக்க சர்வதேச எண்ணெய்க் கம்பெனி ஆகியவற்றுடன் இந்திய சர்க்கார் தொழில் கூட்டுறவு பெற்று இந்தச் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவப்படுகிறது. இந்திய எண்ணெய்க் கார்ப்பரேஷன் அரங்கில் இது பளிங்கெனப் படம் பிடித்துக் காண்பிக்கப்படுகிறது.

மத்திய அரசின் வர்த்தகத் துறை அரங்கில் நுழைந்தால், கைத்தறித் துணிகள், சில்க், வகைகள், விளையாட்டுக் கருவிகள், இரும்பு மாங்கனீஸ் போன்ற கனிப்பொருள்கள் ஆகியவற்றின் ஏற்றுமதியைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். இந்தியாவிலிருந்து ஒவ்வொரு நாளும் நாலு கப்பல்கள் கனிப் பொருள்களை ஏற்றிக்கொண்டு செல்கின்றன. சென்னைத் துறைமுகத்திலிருந்து 2,00,000 டன் கனிப் பொருள்கள் ஒரே மாதத்தில் ஏற்றுமதியாயிற்று என்பது ஒரு ரிகார்டு.

'முந்திரிக்கொட்டை மாதிரி நடந்துகொள்ளாதே' என்கிறோம். ஆனால் இந்த முந்திரிக் கொட்டை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகி 450 மில்லியன் ரூபாய்களைக் கொண்டு வந்து சேர்க்கிறதே! எனவே, நாம் நமது அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள வேண்டியதுதானே? பலப்பல நாடுகளுக்குப் பலப்பல பொருள்களும் செல்கின்றன. எனினும் ஐரோப்பாவுக்கு யானைகள் ஏற்றுமதியாகின்றன என்பது 'பெரிய' விஷயமல்லவா?

அரசினரின் வர்த்தகக் கார்ப்பரேஷன் தனது ஏற்றுமதிகளை எந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறது என்று வரைபடமே



கோவை ஏ. ஆர். லக்ஷ்மி, ஏ. ஆர். லலிதா, ஏ. ஆர். லோகாம்பாள் ஆகிய மூன்று சகோதரிகளின் கைத்திறனில் உருவான 'ரங்கோலி' வர்ணக் கோலத்தில் 'விசுவேசுவரய்யா டவர்!'

போட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலான ஏற்றுமதிகளை ஏகபோக உரிமையாக்கிக் கொண்டிருக்கும் அரசினர் வர்த்தகக் கார்ப்பரேஷன் இப்படி வரைபடம் போட்டுக் காட்டுவது வேடிக்கையாக இருக்கிறது. தனியார் துறைக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்திருந்தால் ஏற்றுமதிகள் இன்னும் பலமடங்கு அதிகமாகியிருக்குமே!

வோல்டாஸ் அரங்கில், அவர்கள் தயாரிக்கும், அறையைக் குளிர்விக்கும் குளுகுளு சாதனங்களைப் பார்க்கிறோம். கடுமையான வெய்யில் காலத்தில் விநாடி நேரத்தில் 'வாட்டர் கூலர்' குழாயைத் திருப்பியதும் சுத்தமான 'ஐஸ் வாட்டர்' கிடைப்பது பெரிய சௌகரியம் அல்லவா? இது தவிர, பல ரகப் பொறி இயல் கருவிகளையும் கிரேன்களையும் பாரம் தூக்கிச் செல்லும் சிறு வண்டிகளையும் வோல்டாஸ் ஸ்தாபனம் தயாரிக்கிறது. மருந்துகள், அமுல் பால் பவுடர் போன்றவற்றின் விநியோகத்தையும் கவனித்துக் கொள்கிறது.

''என் மனைவிக்கு ஓர் உஷா வாங்கிக் கொடுத்தேன். அதன் விலையைக் காட்டிலும் மூன்று மடங்கு பணத்தை இந்த ஐந்து வருஷங்களுக்குள் மிச்சம் பிடித்துவிட்டோம்'' என்றார் உஷா அரங்குக்குள் புகுந்து வெளியே வந்த நண்பர். தையல் கூலி மிச்சமானதைச் சிரத்தையுடன் டைரியில் குறித்து வந்து கணக்குப் பார்த்தாராம் அவர். உஷா என்ற பெயரைத் தையல் மிஷின்களுடன் இணைத்துப் பார்க்கும்போது உஷா ஃபான்களும் உண்டு என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். அவற்றில் மேஜை விசிறி, ரயில் விசிறி, கூரை விசிறி போக, சினிமா தியேட்டர்கள், தொழிலகங்களில் பயன்படும் 'எக்ஸாஸ்ட்' விசிறிகளும் உண்டு.

லதாக் குட்டியும் — சிறுத்தைக் குட்டியும்

"குட்டிப் பாப்பாவாகிய நான் சிறுத்தைக் குட்டியைத் தூக்கி மடியில் வைக்கிறேன்; பெரியவாளான நீங்க பெரிய சிறுத்தையை மடியில் வைச்சுக்குங்கோளேன், பார்ப்போம்!"

இவ்விதழ் பொருளடக்கப் பகுதியில் இடம் பெறும் குட்டிப் பாப்பா: லதா.

அவள் மடியில் இருக்கும் குட்டிச் சிறுத்தை: கடிஜு.

தாய்ச் சிறுத்தை ஆடுகளைக் கொன்று வந்தது என்பதால் அதனைச் சுட்டுவிட்டார்கள். ஒரு மாதக் குட்டி பக்கத்தில் ஒரு புதரில் ஒளிந்து கொண்டிருந்தது. வடக்கு மலபாரில் ஒரு 'எஸ்டேட்'டில் நிகழ்ந்தது இச்சம்பவம்.

சகோதரி மிஸஸ். சாண்டியின் மூன்று வயதுக் குழந்தை லதாவின் படத்தை அனுப்பியவர்: டாக்டர் (மிஸஸ்) ராசெல் டிமாத்தி.

சினிமாக் கொட்டகையில் உள்ளே இருக்கும் அசுத்தக் காற்றை வெளியேற்றும் பணியைச் செய்கிறது இது.

எஸ்கார்ட் ஸ்தாபனத்தினர் டிராக்டர்கள், ராஜதூத் மோட்டார் சைக்கிள்கள், அமெரிக்க வெஸ்டிங் ஹவுஸ் கம்பெனியின் கூட்டுறவுடன் எக்ஸ்ரே சாதனங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கிறார்கள். இதைத் தெரிந்து கொண்டு மேலே நடக்கிறோம். மெர்க் ஷார்ப் அண்டு டோம் என்று ஒரு மண்டபம் ஒரு மூலையில் யார் கண்ணிலும் படாமல் ஒளிந்து கொண்டிருக்கிறது. இந்த உலகப் பொருட்காட்சியில் ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட ஒரே அரங்கம் இதுதான். இந்த அமெரிக்கக் கம்பெனி டாட்டா நிறுவனத்துடன் சேர்ந்து பம்பாயில் மருந்துகள் தயாரிக்கிறது.

இது ஆண்டொன்றுக்கு நாலு கோடி டாலர்களை ஆராய்ச்சிக்காகவே செலவழிக்கிறது என்பதையும் இக்கம்பெனியின் ஆராய்ச்சிகளுடன் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள் நால்வர் சதா சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அறியும்போதே நமது உடலில் இருக்கிற ஓரிரு சிறு கோளாறுகளும் பயந்து ஓடிவிட்டாற் போன்று ஓர் ஆரோக்கியமான உணர்ச்சி உண்டாகிறது!

பெ னி ஸி லி ன், ஸ்டெப்டோமைஸின் போன்ற நவீன மருந்துகளை முதன் முறையாகப் பெரிய அளவில் விற்பனை நோக்கில் தயாரித்தது இந்தக் கம்பெனியே. மாந்தருக்கான மருந்துகள் தவிர கால்நடைகளுக்கான மருந்துகளும் விவசாயத் துறைக்குத் தேவையான ரசாயனப் பொருள்களும் இந்த ஸ்தாபனத்தில் தயாரிக்கப்படுகின்றன.

மத்திய அரசினரின் 'இன்றைய இந்தியா' அரங்கில் நாடு அடைந்துள்ள பலவித முன்னேற்றங்களை உணர்த்திய கையோடு மேலும் முன்னேறத் தடையாக இருப்பது எது என்பதையும் அவர்கள் நோக்கில் சொல்கிறார்கள். ஜனத் தொகைப் பெருக்கமே காரணமென்ற மத்திய அரசினரின் கருத்துக்கு இசைவாகக் குடும்பக் கட்டுப்பாடு திட்டப் பிரசாரமும் நடக்கிறது. 'இன்றைய இந்தியா' மண்டபத்திலும் புகைப்படங்கள் பெரிய அளவில் கலைமெருகுடன் பயன் படுத்தப்பட்டுள்ளன.

கண்காட்சி முழுவதும் சுற்றியதில் காலணிகளில் தூசி படிந்து போயிருக்கும்.

பொருட்காட்சியை விட்டு வெளியேறு முன் காலணிகளுக்கு இலவசமாகப் பாலிஷ் போட்டுக் கொள்ளலாம், டாட்டா மண்டபத்தின் எதிரே. "சிறுவர் சிறுமியருக்குக் காலணிகளை வாங்கும் போது கவனமாக இருக்க வேண்டும். சில குழந்தைகளுக்கு ஒரு பாதம் சற்றுப் பெரிதாக இருக்கும்; அப்போது பெரிய பாதத்துக்குத் தகுந்த அளவிலேயே இரண்டு கால்களுக்கும் வாங்கிப் போடுங்கள்" என்பது போன்ற உபயோகமான தகவல்கள் பலவற்றைத் தருகிறது டாட்டா அரங்கு. சிறிய விஷயம்தான். ஆனால் கவனிக்காமல் போனால் சிறுவருக்கு ஏற்படும் வேதனை எவ்வளவு பெரிது!

பொருட்காட்சியை வெய்யிலில் சுற்றி அலைந்து பார்த்துத் தலைவலியை வருவித்துக் கொண்டவர்களுக்கு அபயம் அளிக்க அமிர்தாஞ்சன் அரங்கும் வெளியே செல்லும் வழிக்கு அருகிலேயே பொருத்தமாக அமைந்துள்ளது.

அமிர்தாஞ்சன் என்ற பெயரில் இப்போது குழந்தைகளுக்கான 'கிரைப் வாட்ட'ரும் தயாராகிறது.

அனைத்துலகப் பொருட்காட்சி, பொறாமையற்ற போட்டி மனப்பான்மையுடன், நம் நாட்டின் பல்வேறு ராஜ்யங்களிலும் தொழில் வளம் பெருக உதவும், மற்ற நாடுகளைப் பின்பற்றி நவீன சகாப்தத்தை உருவாக்க நம் நாட்டுக்கும் ஓர் ஊக்கம் தரும்.

ஆனால் சிறப்பான இந்தப் பொருட்காட்சிக்குத் திருஷ்டிப் பரிகாரமாகத் தமிழகப் போக்குவரத்துத் துறையினர் நடந்து கொள்கிறார்கள். அதாவது, பொருட்காட்சியில் மக்கட் சமுதாயத்தை இறக்கி விட்டுப் பூந்தமல்லி நெடுஞ்சாலை வழியே திரும்பிச் செல்லும் பஸ்கள் காலியாக இருந்தாலும் நிற்பதில்லை. அப்படியே நின்றாலும் காத்திருக்கும் மக்களை ஏற்றிச் செல்வதில்லை. 'பஸ் எங்கே போகிறது?' என்று கேட்டால், 'நீங்கள் எங்கே போகிறீர்கள்?' என்று கேட்பார்கள். போகும் இடத்தைச் சொன்னால், 'பஸ் அங்கே போகவில்லை' என்று கூறி 'டபிள் விசில்' கொடுப்பார்கள். காரணம், டிக்கெட் கிழித்துக் கொடுக்க வேண்டுமே என்ற அலுப்புத்தான். எந்த பஸ் எங்கே போகிறது என்பதற்கு நம்பரைப் போட்டிருந்தாலாவது விவரமறிந்த ஓரிருவர் ஏறிச் செல்லவோ மற்றவர்களை ஏற்றி விடவோ முயல்வார்களோ?

மகாபாரதம்

ராஜாஜி

15. பாண்டவர்கள் தப்பியது

பெரியோர்கள் அனைவருக்கும் நமஸ்காரம் செய்து, சமமான வயதாயிருந்தவர்களைத் தழுவி விடைபெற்றுக் கொண்டு பாண்டவர்கள் வாரணாவதம் சென்றார்கள். நகரத்து ஜனங்கள் பாண்டவர்களுடன் வெகு தூரம் நடந்து சென்று திரும்பிப் போக மனமில்லாமல் திரும்பினார்கள். விதுரன், யுதிஷ்டிரனுக்கு மர்மமாக அந்நிய பாஷையில் எச்சரிக்கை செய்தான்.

''ராஜ நீதியில் நிபுணனான எதிரியின் யோசனையை அறிந்தவன்தான் ஆபத்தைத் தாண்டுவான். உலோகத்தினால் செய்யப்படாத கூர்மையான ஆயுதமும் உண்டு. அதைத் தடுக்கும் உபாயத்தை எவன் அறிந்து கொள்கிறானோ அவன் பகைவர்களால் கொல்லப்பட மாட்டான். காடுகளை அழிப்பதும் குளிரைப் போக்குவதுமான ஒரு பொருள், வளைக்குள் வாசம் செய்யும் எலியைத் தீண்டாது. முள்ளம் பன்றி பூமியைத் தோண்டிக் காட்டுத் தீயிலிருந்து தப்பித்துக் கொள்ளும். அறிவாளி நட்சத்திரங்களினால் திசையை அறிகிறான்.''

இவ்வாறு மறைவாகப் பொருளை ஏற்றி விதுரன், யுக்தியாகப் பாண்டவர்களுக்குத் துரியோதனனுடைய சதியாலோசனையையும் ஆபத்திலிருந்து தப்பும் வழியையும் பக்கத்திலிருந்தவர்களுக்குத் தெரியாத அந்நிய மொழியில் சொன்னான். யுதிஷ்டிரனும் 'தெரிந்தது' என்று சொன்னான். பிறகு குந்தி தேவி யுதிஷ்டிரனைக் கேட்டு விதுரன் சொன்னதை யெல்லாம் தெரிந்து கொண்டாள். சந்தோஷமாகப் புறப்பட்டவர்கள் மிகுந்த கவலையுடன் சென்றார்கள்.

வாரணாவதத்து ஜனங்கள் பாண்டவர்கள் தங்கள் நகரத்துக்கு வருகிறார்கள் என்று கேட்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் எதிர் கொண்டு வரவேற்றார்கள். அவர்களுக்கென்று ஏற்படுத்திய விடுதிகளில் பாண்டவர்கள் சில நாட்கள் இருந்து வந்தார்கள். பிறகு புதிதாகக் கட்டி முடிந்த ''சிவம்'' என்ற மாளிகையில் புரோசனன், பாண்டவர்களை அழைத்துப் போய் இருக்கச் செய்தான். ''சிவம்'' என்றால் மங்களம். அமங்களமான அந்த மாளிகைக்குச் ''சிவம்'' என்று பெயரிட்டிருந்தது. விதுரன் சொன்னதை நினைவில் வைத்துக் கொண்டு வீட்டை யெல்லாம் யுதிஷ்டிரன் கவனித்துப் பார்த்தான். தீக்கு இரையாவதற்கே கட்டியது என்பது சந்தேகமறத் தெரிந்தது. யுதிஷ்டிரன் பீமனிடம் சொன்னான்:

''ஆபத்தான இடம் என்று நன்றாகத் தெரிந்தபோதிலும் நாம் சதியாலோசனையைத் தெரிந்து கொண்டு விட்டோம் என்பதைப் புரோசனனுக்குக் காட்டாமலிருக்க வேண்டும்.




சமயம் பார்த்து நாம் வெளியேற வேண்டும். இப்போது சந்தேகத்துக்கு இடம் தரக்கூடாது.''

இவ்வாறு தீர்மானித்து அந்த வீட்டிலேயே இருந்தார்கள். இதற்குள் விதுரன் ஒரு சமர்த்தனான சுரங்கக்காரனை அனுப்பினான். அவன் பாண்டவர்களை ஏகாந்தமான ஓர் இடத்தில் சந்தித்து, ''உம்முடைய நன்மையை உத்தேசித்து விதுரன், யுதிஷ்டிரனிடம் அந்நிய பாஷையில் மறைபொருள் வைத்துச் சொன்னாரே, அதுவே என்னை நீங்கள் நம்புவதற்கு அடையாளம். உங்களுடைய சகாயத்துக்காகச் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்து தரவே வந்திருக்கிறேன்'' என்றான்.

அதன் மேல் அந்தச் சுரங்கக்காரன் புரோசனனுக்குத் தெரியாமல் பல நாட்கள் ரகசியமாக வேலை செய்து, அரக்கு மாளிகைக்குள்ளிருந்து மதிலையும் அகழியையும் அபாயமில்லாமல் தாண்டி வெளியே போவதற்குச் சுரங்கம் வெட்டி முடித்தான்.

புரோசனன் மாளிகையின் வாயிலிலேயே வசித்து வந்தான். பாண்டவர்கள் இரவு முழுவதும் ஆயுதபாணிகளாகவே ஜாக்கிரதையாகத் தூக்கமில்லாமல் இருந்து வந்தார்கள். வெளியே சென்று வனத்தில் வேட்டையாடித் திரிந்து வந்தனர். அவ்வாறு சுற்றுப் பக்கத்துத் தேசத்தையும், பாதைகளையும் நன்றாகத் தெரிந்து கொண்டார்கள். புரோசனனை முற்றிலும் நம்பினவர்களைப் போலவும், சந்தோஷமுள்ளவர்களைப் போலவும், தங்களுடைய கவலையையும் சந்தேகத்தையும் மறைத்துக் கொண்டு பாண்டவர்கள் அங்கே வாசம் செய்தார்கள். புரோசனனும் ஜனங்களிடம் எவ்விதச் சந்தேகமும், பழியும் தோன்றாதபடி



வீட்டுக்குத் தீ வைக்க வேண்டும் என்ற நல்ல சமயத்துக்காக ஒரு வருஷம் காத்துக் கொண்டிருந்தான்.

பிறகு ஒரு நாள் இதுதான் சமயமென்று புரோசனன் எண்ணினான். புத்திசாலியான யுதிஷ்டிரனுக்கும் புரோசனனுடைய மனத்திலிருந்தது புலப்பட்டது. தன் சகோதரர்களை நோக்கி, ''இந்தப் பாபிஷ்டன் நம்மைக் கொல்லும் காலம் வந்தது என்று எண்ணுகிறான். நாம் ஓடித் தப்புவதற்கு இதுதான் சமயம்'' என்றான்.

குந்திதேவி அன்று ஓர் அன்னதானம் செய்வதாக ஏற்பாடு செய்து மாளிகையில் இருந்த பணியாளர்கள் எல்லோரும் நன்றாகச் சாப்பிட்டு இரவில் மயக்கமுற்றுத் தூங்கிவிட ஏற்பாடு செய்தான்.

நடு ஜாமத்தில் பீமன் அந்த மாளிகையில் அநேக பாகங்களில் தீப் பற்ற வைத்துவிட்டு வந்தான். குந்திதேவியும் பாண்டவ சகோதரர்களும் சுரங்கத்தின் வழியாக இருட்டில் சுவரைத் தடவித் தடவி வழி தெரிந்து கொண்டு வெளியேறி விட்டார்கள். தீயானது உடனே வீட்டை நாலு பக்கமும் சூழ்ந்து கொண்டது. புரோசனன் இருந்த இடமும் பற்றிக் கொண்டது. ஊரார் எல்லாரும் வந்துசேர்ந்து தீப்பற்றி எரியும் மாளிகையைக் கண்டு '' ஹா! ஹா!'' என்று கதறினார்கள். '' துரியோதனாதியர்கள் குற்றமற்ற பாண்டவர்களை இம்மாதிரி மோசம் செய்து கொன்றார்களே '' என்று கௌரவர்களைக் கோபாவேசத்துடன் பலவிதமாகப் பழித்தார்கள். மாளிகை எரிந்து சாம்பலாயிற்று. புரோசனனும் எதிர்பாராதபடி தீக்கிரையானான். வாரணாவதத்து ஜனங்கள், ''பாண்டவர்கள் இருந்த மாளிகை தீக்கிரையாயிற்று. யாரும் உயிருடன் தப்பவில்லை'' என்று ஹஸ்தினாபுரத்துக்குச் சொல்லி அனுப்பினார்கள்.

திருதராஷ்டிரனுடைய மன நிலையை வியாசர் வெகு அழகாக வர்ணிக்கிறார். ''கோடை காலத்தில் ஆழமான ஒரு மடுவில் நீர் அடியில் குளிர்ச்சியாகவும் மேலே உஷ்ணமாகவும் இருப்பது போலத் திருதராஷ்டிரனுடைய உள்ளத்தில் மகிழ்ச்சியும் துக்கமும் கலந்திருந்தன'' என்கிறார்.

பாண்டவர்கள் இறந்து போனார்கள் என்று திருதராஷ்டிரனும் அவன் மக்களும் ஆபரணங்களைக் களைந்துவிட்டு ஒற்றை ஆடை உடுத்திக் கொண்டு கங்கைக்குச் சென்று தர்ப்பணம் செய்தார்கள். எல்லோரும் சேர்ந்து பெரும் கூக்குரலிட்டுப் புலம்பினார்கள்.

விதுரன் மட்டும் பிறப்பும் இறப்பும் விதிப்படி நடக்கும் என்ற வேதாந்த உணர்ச்சியோடு துக்கத்தை அதிகமாகக் காட்டிக் கொள்ளவில்லை போல் இருந்தான். ஆனால் அதற்குக் காரணம் பாண்டவர்கள் இறக்கவில்லை, தப்பியோடிப் பிழைத்திருக்கிறார்கள் என்றே விதுரன் நிச்சயமாக இருந்தான். ஜனங்களோடு ஓரளவு புலம்பினவனானாலும் இந்த நேரத்தில் பாண்டவர்கள் எவ்வளவு தூரம் போயிருப்பார்கள், எங்கே இருப்பார்கள் என்று ஊகித்துக் கணக்கிட்டுக் கொண்டே இருந்தான். பீஷ்மர் துக்கசாகரத்தில் மூழ்கினதைக் கண்டு அவருக்கு விதுரன் ரகசியமாகத் தான் செய்த ஏற்பாடுகளையெல்லாம் சொல்லிச் சந்தோஷப் படுத்தினான்.

இரவெல்லாம் விழித்திருந்தபடியாலும், கவலையினாலும், பயத்தினாலும் சகோதரர்களும் குந்தி தேவியும் களைத்திருப்பதைப் பார்த்த வாயுபுத்திரனான பீமசேனன் தாயாரைத் தோளின் மேலும் இடுப்பில் நகுல சகாதேவர்களையும் தூக்கிக் கொண்டு, யுதிஷ்டிரனையும் அருச்சுனனையும் இரண்டு கைகளால் பிடித்துக் கொண்டு யானையைப் போல் காட்டில் செடிகளையும் புதர்களையும் விலக்கி வழி செய்து கொண்டு சென்றான். கங்கைக்கு வந்ததும் அங்கே விதுரன் அனுப்பியிருந்த ஓடம் தயாராக இருந்தது. ஓடக்காரன் ரகசியம் தெரிந்த நண்பன் என்பதைச் சோதித்துத் தெரிந்து கொண்டார்கள். பிறகு காட்டில் ஒரு பகலெல்லாம் வேகமாக நடந்தார்கள். மாலையில் இருட்டு மூடவும் பயங்கரமான காட்டு மிருகங்களின் சத்தங்கள் கிளம்ப ஆரம்பித்தன.

தாகத்தினாலும் களைப்பினாலும் நித்திரையினாலும் பீடிக்கப்பட்டு ஓர் அடி வைக்கக்கூடச் சக்தியில்லாமல் கீழே உட்கார்ந்தார்கள். ''திருதராஷ்டிரப் புத்திரர்கள் என்னைத் தூக்கிக்கொண்டு போகட்டும். நான் இங்கேயே கிடப்பேன்'' என்று குந்தி படுத்துப் பிரக்ஞை இழந்தான். பீமன் பயங்கரமான இருட்டில் எங்கிருந்தோ தன்னுடைய மேலாடையைத் தண்ணீரில் நனைத்தும் தாமரை இலைகளினால் தொன்னைகள் செய்தும் தண்ணீர் கொண்டு வந்து குந்திதேவிக்குக் கொடுத்தான். பிறகு எல்லாரும் மெய்ம்மறந்து அங்கேயே தூங்கிவிட்டார்கள். பீமன் மட்டும் சிந்தனை செய்து கொண்டு விழித்திருந்தான். ''இந்தக் காட்டில் செடிகளும் கொடிகளும் ஒன்றையொன்று காப்பாற்றிக் கொண்டு பிழைக்கவில்லையா? ஏன் இந்தத் துராத்மா திருதராஷ்டிரனும் துரியோதனனும் இவ்வாறு எங்

களைப் பகைக்கிறார்கள்?'' என்று பாவம் அறியாத பீமன் மனம் கொதித்து வருந்தினான்.

பிறகு அநேக கஷ்டங்களைத் தாண்டிக் கொண்டும் ஆபத்துக்களைத் தாண்டிக் கொண்டும் பாண்டவர்கள் காட்டில் சென்றனர். சில இடங்களில் வேகமாகச் செல்வதற்காகத் தாயாரைத் தூக்கிச் சென்றனர். சில இடங்களில் களைத்து நின்றனர். சில இடங்களில் துக்கத்தை மறக்க ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு நடந்தனர்.

வழியில் வியாச பகவானைக் கண்டார்கள். எல்லோரும் நமஸ்கரித்து அவரிடம் தைரியத்தையும் உபதேசத்தையும் பெற்றார்கள். தங்களுக்கு நேர்ந்த துக்கத்தைச் சொல்லிக் கொண்ட குந்திக்கு, வியாசர், ''எந்த மனிதனும் தருமத்தை மாத்திரமே செய்ய முடியாது. எந்தப் பாபியும் பாபத்தையே செய்து கொண்டிருக்கவும் முடியாது. புண்ணிய பாவங்கள் இரண்டையும் செய்யாதவன் உலகத்தில் எவனுமில்லை. செய்த காரியங்களின் பலனை எல்லோரும் அடைவார்கள். விசனத்தில் உள்ளத்தைச் செலுத்தாதே!'' என்று சொல்லிச் சமாதானப்படுத்தினார்.

பிறகு வியாசர் சொல்லியபடி பிராமண வேஷம் பூண்டு ஏகசக்ர நகரத்தில் ஒரு பிராமணன் வீட்டில் இருந்து கொண்டு, பிராமண பிரம்மசாரிகளைப் போல் தினமும் அன்னம் பிக்ஷை எடுத்துக் கிடைத்ததைத் தாயாரிடம் கொடுத்துப் பங்கிட்டு எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டு காலம் கழித்து வந்தார்கள்.

16. பகாசுரன் வதம்

பாண்டவர்கள் ஏகசக்ர நகரத்தில் பிராமண வேஷம் பூண்டு வசித்து வந்தார்கள். பிராமணர்களுடைய தெருவில் உபாதானம் எடுத்துக் கிடைத்ததைத் தாயார் குந்தியிடம் கொடுப்பார்கள். பிக்ஷைக்குப் போனவர்கள் வீட்டுக்குத் திரும்பி வரும் வரையில் குந்தி கவலையோடு காத்திருப்பாள். நேரத்தில் திரும்பி வராமல் போனால் என்ன நடந்ததோ என்று பயப்பட்டுக் கொண்டிருப்பாள்.

கிடைத்த அன்னத்தைக் குந்திதேவி இரு சம பங்காகச் செய்து ஒரு பாதியைப் பீமனுக்குக் கொடுத்துவிடுவாள். மற்றப் பாதியைத் தாயாரும் நான்கு சகோதரர்களும் சேர்ந்து ஐந்து பங்காகச் செய்து சாப்பிட்டு வந்தார்கள். பீமன் வாயு பகவானுடைய அம்சமானபடியால் அவனுக்குப் பலமும் அதிகம், பசியும் அதிகம். பீமனுக்கு விருகோதரன் என்றும் ஒரு பெயர். ஓநாயின் வயிற்றைப் போல் சிறியதும் எளிதில் திருப்திப்படாததுமான வயிற்றை உடையவன் என்று இதற்குப் பொருள். பீமசேனனுக்கு ஏகசக்ரபுரத்தில் அகப்பட்ட பிக்ஷான்னம் எவ்விதத்திலும் திருப்தியாக இருக்கவில்லை. நிறம் மாறியும் இளைத்தும் போனான். இதைக் கண்டு குந்திதேவிக்கும் யுதிஷ்டிரனுக்கும் மிகுந்த துக்கம். சில நாட்கள் கழித்து, பீமன் ஒரு குயவனிடம் சிநேகம் செய்து அவனுக்கு வேண்டிய களிமண்ணை வெட்டி எடுத்துக் கொண்டு வந்து கொடுக்கலானான். அவன் ஒரு பெரிய மண்பாண்டம் செய்து பீமனுக்குக் கொடுத்தான். அதை எடுத்துக் கொண்டு பீமன் பிக்ஷைக்குப் போவான். தெருவில் குழந்தைகள் எல்லாம் பீமனையும் அவன் பானையையும், பார்த்து வேடிக்கை செய்வார்கள்.

ஒரு நாள் மற்ற சகோதரர்கள் பிட்சைக்குப் போயிருந்த காலத்தில் பீமசேனன் மட்டும் வீட்டில் குந்தியுடன் இருந்தான். அப்போது அவர்கள் குடியிருந்த பிராமணன் வீட்டில் ஏதோ துக்க சமாசாரம் நிகழ்ந்தது போல், உள்ளே அழும் குரல் குந்தி காதில் பட்டது. உடனே குந்தி என்னவென்று விசாரிக்க வீட்டுக்குள் சென்றாள். பிராமணனும் அவன் மனைவியும் அடிக்கடி அழுத வண்ணம் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''துர்ப்பாக்கிய ஸ்திரீயே! நான் சொன்னதை நீ கேட்கவில்லை. நான் உன்னைப் பலமுறை வேண்டியும் இந்த ஊரைவிட்டுப் போக நீ சம்மதிக்கவில்லை. இங்கு பிறந்தேன். இங்கு வளர்ந்தேன். இங்கேயே இருக்கலாம் என்று பிடிவாதம் செய்து வந்தாய். உன் தந்தையும் தாயும், பந்துக்களும் இறந்த பின்னும் இது பிறந்த ஊர் என்று இங்கேயே இருக்க ஆசைப்பட்டாய். எனக்குச் சகதர்மிணியாகவும், தாயாகவும், சிநேகிதியாகவும், புத்திர சந்தானம் தந்த பாரியையாகவும் எல்லாமாகவும் உள்ள உன்னை நான் எப்படி இழக்கச் சம்மதிப்பேன்? என் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு உன்னை யமனுக்கு அனுப்ப என்னால் முடியாது. இந்தச் சிறுமி நம்முடைய சொத்து அல்ல. வரப்போகும் அவள் கணவனுக்காக ஆண்டவன் நம்மிடம் ஒப்புவித்திருக்கிறான். வம்ச விருத்திக்கென்று ஆண்டவன்

கொடுத்த இவளைச் சாக விடுவதும் அதர்மம். மகனுகிய சிறு பிள்ளையைச் சாக அடிப்பதும் முடியாது. எனக்கும் உனக்கும் நம்முடைய முன்னேருக்கும் பிண்ட தர்ப்பணங்கள் கொடுக்கும் அருமைப் புதல்வனை எவ்வாறு யம னுக்கு அனுப்பிவிட்டு நாம் பிழைத் திருக்க முடியும்? ஐயோ! என் சொல்லை நீ கேட்கவில்லையே! பலனை இப்போது அனுபவிக்க வேண்டும். நான் என் சரீரத்தை விட்டு யமனுலகம் சென் ருல் இந்தச் சிறுவனும் சிறுமியும் உல கத்தில் ஜீவித்திருக்க முடியாது. நான் என்ன செய்வேன்? எல்லோருடனும் கூட இறந்துபோவது சிலாக்கியம்'' என்று பிராமணன் சொல்லி விம்மி விம்மி அழுதான்.

பிராமணனுடைய மனைவி சொன் ஞன்: ''மனைவியைப் புருஷன் எதற் காகக் கொள்ளுகிருனே அந்தப் பிர யோஜனம் நீர் என்னுல் பெற்ருகி விட்டது. ஒரு புத்திரியையும் ஒரு புத்திரனையும் நீர் என்னிடம் அடைந் தீர். என் கடனை நான் தீர்த்து விட்டேன். குழந்தைகளை வளர்ப்ப தற்கும் காப்பதற்கும் உமக்குச் சக்தி உண்டு. நீர் இல்லாமல் என்னுல் அது செய்ய முடியாது. வெளியில் போடப் பட்ட மாமிசத்தைப் பறவைகள் தூக்கிப் போக எவ்வாறு காத்துக் கொண்டிருக்கின்றனவோ அவ்வாறே புருஷனில்லாத ஸ்திரீயை எல்லா ஜனங் களும் ஏமாற்ற விரும்புகின்றனர். துஷ்ட ஜனங்கள் நிறைந்திருக்கும் இவ்வுலகத் தில் அநாதையான பெண் வாழ்வது கஷ்டம். நெய்யில் நனைக்கப்பட்ட துணியை நாய்கள் எப்படிப் பிடித் திழுக்குமோ அப்படி நாதனில்லாத பெண்கள் துஷ்டர்கள் கையில் சிக்கிக் கொண்டு நாலு பக்கத்திலும் இழுக் கப்பட்டு அலைவார்கள். நாதன் அற்றுப் போன நான் இந்தக் குழந்தைகளைச் சரியாக வளர்த்துக் காப்பாற்றுவது முடி யாத காரியம். குளத்தில் ஜலம் வற் றிப் போனுல் மீன்கள் எவ்வாறு அழி யுமோ, அவ்வாறு இந்தக் குழந்தைகள் இருவரும் நாசமடைவார்கள். அரக் கனுக்கு என்னைக் கொடுத்து விடுவது மேலாகும். புருஷன் இருக்கும்போது ஸ்திரீயானவள் பரலோகமடைவதே பெரும் பாக்கியம். இதுவே சாஸ் திரம். எனக்கு விடை கொடும். என் குழந்தைகளைக் காப்பாற்றும். நான் விரும்பினவற்றை அனுபவித் தாயிற்று. தருமானுஷ்டானம் செய் தேன். உமக்குப் பணிவிடை செய்த தினுல் புண்ணிய லோகமும் பெறு வேன். மரணம் எனக்குப் பயம் தர வில்லை. நான் போன பின் நீர் வேருெரு ஸ்திரீயை அடைய முடியும். நீர் சந்தோஷமாய் என்னை அரக்க னிடம் அனுப்பிவிடும்.''

இவ்வாறு மனைவி சொல்லவும், பிராமணன் அவளைத் தழுவிக்கொண்டு ஸ்திரீயைப் போல மெல்லிய குரலில் தானும் கண்ணீர் விட்டழுதான்.

''அன்புள்ளவளே! சுந்தரி! இவ்வாறு பேசாதே. இத்தகைய ஞானமுள்ள மனைவியை ஒருபோதும் விடத் தகாது. புத்தியுள்ள புருஷன் இவ்வுலகில் ஸ்திரீயை ரட்சிக்க வேண்டியது முதல் கடமை. எக்காலத்திலும் விடத்தகாத ஸ்திரீயை நான் அரக்கனுக்குத் தந்து விட்டு ஜீவிப்பேனுயின் மகா பாவி யாவேன்'' என்ருன்.

தாயும் தகப்பனும் பேசிக் கொண் டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த மகள், ''நான் சொல்லுவதைக் கேளுங்கள். கேட்டுவிட்டுப் பிறகு உசிதப்படி செய்யுங்கள். நான்தான் உங்களால் இழக்கத் தக்கவள். என்னை அரக்கனிடம் அனுப்பி விடுங்கள். என் ஒருத்தியைக் கொண்டு எல்லாவற்றை யும் காப்பாற்றிக் கொள்ள முடியும். ஓடத்தைக் கொண்டு தண்ணீரைத் தாண்டுவது போல் என்னைக் கொண்டு ஆபத்தைத் தாண்டுங்கள். நீங்கள் பரலோகம் சென்ருல் என் சகோதர னை இந்தக் குழந்தை சீக்கிரம் இறந்து போவான். தந்தையே! நீர் இறந்தால் சிறுபெண்ணுகிய நான் அநாதையாகி விசனத்தில் சிக்கிக் கஷ்டப்படுவேன். இந்தக் குலத்துக்கு விமோசனம் தரக் கூடிய நிலையில் தான் இருக்கிறேன். நான் சொல்லிய படி செய்தீர்களானுல் என் பிறவி பய னுள்ளதாகும். என்னுடைய நன்மை யைக் கருதியே நீர் என்னை அரக்கனுக்கு அனுப்ப வேண்டும்.''

இவ்வாறு பிரியமான பெண் சொல்லத் தந்தையும் தாயும் இருவரும் அவளைத் தழுவி முத்தமிட்டு அழுதார்கள். எல்லா ரும் அழுவதைக் கண்டு குழந்தையாகிய மகன் மலர்ந்த கண்களுடன் ''அப்பா! அழாதே! அம்மா அழாதே! அக்கா, அழாதே!'' என்று ஒவ்வொருவரிடமும் போய்ச் சொல்லி அவர்கள் மடியில் உட்கார்ந்தான். பிறகு அவன் எழுந்து அங்கிருந்த ஒரு விறகுக் குச்சியைக் கையில் எடுத்து, ''அந்த ராக்ஷசனை நான் இதனுல் கொன்று போடுவேன்'' என்று மழலை மொழியில் சொல்லவும் எல்லோரும் சேர்ந்து பெருந் துக்கத் துக்கிடையில் சிரித்தார்கள். அதுதான் நல்ல சமயம் என்று குந்தி தேவி பேச ஆரம்பித்தாள். **(தொடரும்)**

தமிழ் வலம் வந்த ஆய்வர்கள்

ஹென்ரி எம். எம். ஃபோர்ட்மன்

நெதர்லாண்ட்ஸ் நாட்டைச் சார்ந்த ஃபோர்ட்மன் அங்குள்ள நெய்மேகன் சர்வ கலாசாலையில் மனோதத்துவ சாஸ்திரத்துக்கான டாக்டர் பட்டம் பெற்றிருப்பவர். இப்போது அந்தச் சர்வகலாசாலையிலேயே பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். 'இளைஞர் மனோதத்துவம்' என்ற சஞ்சிகையின் மேற்பார்வையாளராகவும் இருக்கிறார்.

பாரதத்துக்கு இப்போது மூன்றும் தடவையாக வந்திருக்கிறார். ஒரு சந்தர்ப்பத்தில் தொடர்ந்தாற்போல் ஆறு மாத காலம் தங்கியிருந்துவிட்டும் போயிருக்கிறார். இந்திய கலாசாரத்தை வெகுவாகப் போற்றுகிறார்; ரசிக்கிறார். ஆனால் தமிழில் சில வார்த்தைகளையாவது துணிந்து பேச இன்னும் தைரியம் வரவில்லை என்றும் சொல்கிறார்.

'மாநாட்டுக் கருத்தரங்கு பரவசமூட்டுவதாக இருக்கிறது. ஆனால் அதில் போதுமான அழுத்தம் இல்லை. ஏற்பாடுகள் கவர்ச்சிகரமாக இருக்கின்றன. அந்த அளவுக்குக் கவர்ச்சி ஆராய்ச்சிக்கான விஷயங்களில் இல்லை! இது என் சொந்த அபிப்பிராயம்' என்றார் ஃபோர்ட்மன்.

மாநாட்டை ஒட்டி 'யார் — எவர்?' என்று ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டிருந்த கைப் புத்தகத்தில் இவருடைய படத்துக்கு நேராக புட்னென் என்பவரின் வாழ்க்கைக் குறிப்பை வெளியிட்டிருந்தது வேடிக்கையாகவே இருந்தது.



ஹென்ரி எம். எம். ஃபோர்ட்மன்



பெர்நோர்த் கொல்ஃபெர



செம்பியன் ருதியன்
(Semyon G. Rudin)
11.1.68.

எஸ். ஜி. ருதின்

சோவியத் நாட்டுப் பிரதிநிதிகளில் ஒருவராக மாநாட்டுக் கருத்தரங்குக்கு வந்திருந்த ருதின் தமிழ் நாட்டுக்குப் புதியவரல்ல! சென்னை சர்வகலாசாலையிலேயே மாணவராக இருந்து தமிழ் ஆராய்ச்சி செய்தவர். தமிழ் ஆர்வத்தின் காரணமாக செமியோன் ருதின் என்ற தம் பெயரைச் செம்பியன் என்று சுத்தத் தமிழில் மாற்றிக் கொண்டிருப்பவர்.

நன்றாகத் தமிழ் பேசவும் எழுதவும் தெரிந்த வெளிநாட்டார்கள் வெகுசிலரில்

இவரும் ஒருவர். இல்லாவிடில் இவரால் தமிழ் — ருஷ்ய அகராதி தயாரித்திருக்க முடியுமா என்ன? தமிழ்மொழியைக் கற்றது போலவே ஹிந்தி மொழியையும் கற்றிருக்கிறார். இப்போது லெனின்கிராட் சர்வ கலாசாலையில், தமிழ், ஹிந்தி மொழிகள் போதிப்பவராகப் பணியாற்றுகிறார்.

பெர்நார்த் கோல்ஃபேர்

பாரதத்துக்கு, கருத்தரங்கை ஒட்டி முதல்தடவையாக வந்திருந்த ஜெர்மானியப் பேராசிரியர் இவர். ஃப்ராங்ஃபர்ட் சர்வ கலாசாலையில் இந்திய வேதாந்த சாஸ்திரத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். இப்போது கோலோன் சர்வகலாசாலையில் இந்தியப் பிரிவில் ஆசிரியராக இருக்கிறார். இவருக்குத் தமிழ், சம்ஸ்கிருதம், காஷ்மீரி முதலிய மொழிகளில் நல்ல பரிச்சயம் உண்டு. தமிழில் சீக்கிரமே பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று நம்புகிறார். தமிழ் எழுதவும் படிக்கவும் ஓரளவு பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்.

திராவிட மொழிக் கதைகளைப் பற்றிய ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையை இவர் சமர்ப்பித்திருந்தார்.

லி. ஜி. ஹார்ட்மன்

கடோபநிஷத்தையும் தைத்ரேயோப நிஷத்தையும் கரைத்துக் குடித்திருக்கும் டாக்டர் லார்ஸ் கஸ்டேவ் ஹார்ட்மன் பின்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். ஹெல்சிங்கி சர்வகலாசாலையில் டாக்டர் பட்டம் பெற்றவர். இந்திய வேதாந்த தத்துவங்களிலும், தென்னிந்திய கலை நுணுக்கங்களிலும் பெரிதும் ஈடுபாடுடையவர்.

இந்த நாற்பத்தி ஐந்து வயதுப் பேராசிரியர் கலகலப்பான பேர்வழி என்று சொல்லிவிட முடியாது. கொஞ்சம் ஒதுக்கம்தான். ஆனால் தென்னாட்டுச் சிற்பக் கலைகளைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் உற்சாகமும் கூடவே வந்து விடுகிறது. மதுரை, காஞ்சிபுரம், மாமல்லபுரம் கோவில்களை நினைத்து நினைத்துப் பார்த்து மகிழ்பவர் இவர்.

பதின்மூன்று பிரதான உபநிஷதங்களிலுள்ள ஒருமைப்பாடுகளை ஆராய்ச்சி செய்து நூலாக வெளியிட்டிருக்கும் இவர் இப்போது சங்கரர், மாத்வாசாரியார் ஆகியோரின் கோட்பாடுகளையெல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்.

இவருக்குத் தமிழ் எழுதவோ, படிக்கவோ தெரியாது. தமிழின் சிறப்பைப் பற்றி இவர் தெரிந்து கொண்டிருப்பதெல்லாம் ஆங்கிலத்தின் மூலம்தான்.

திருமதி சந்திரா முருகேசன்

ஃபிஜித் தீவுகளிலிருந்து பிரதிநிதியாக வந்திருந்தவர் திருமதி சந்திரா முருகேசன். ஃபிஜித் தீவுகளில் தமிழர் என்ற இனப் பாகுபாடு கிடையாதாம். இந்தியர், இந்தியரல்லாதார் என்ற பிரிவுதான். சமீபத்தில் தென்னிந்திய ஐக்கிய சன்மார்க்க சங்கம் என்ற நிறுவனத்தைத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஹிந்தியும் ஆங்கிலமும்தான் நடைமுறையில் இருக்கும் மொழிகள். அரசாங்க மொழி ஆங்கிலம். ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் இருக்கும் தீவுகள் இவை.

நடுவில் ஒரு சமயம் பள்ளிகளில் தமிழ் மொழி போதனை இருக்கக் கூடாது என்று சட்டம்கூடக் கொண்டு வர முயற்சி இருந்ததாம். ஆனால் நல்ல வேளையாகச் சரியான நேரத்தில் ஆட்சேபணை எழுப்பி அந்த முயற்சியைத் தகர்த்து விட்டார்கள்.

இப்போது இந்தத் தீவுகளில் 'சங்கம் ஹைஸ்கூல்' என்ற பெயருடன் இருபத்தி ஆறு பள்ளிகள் இயங்கி வருகின்றன. தமிழ் மொழி இன்றைய இளம் தலைமுறையினருக்குப் போதிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் தமிழ் உச்சரிப்பில் இன்றையச் சிறுவர் சிறுமியிடம் ஆஸ்திரேலிய வாசனை நிறைய வீசுகிறது. ராமசாமியை ரமாசமி என்றுதான் கூப்பிடுகிறார்கள். தமிழக அரசு தமிழ் ஆசிரியர்களை அங்கு அனுப்பி உதவ வேண்டும் என்று சொல்கிறார் திருமதி சந்திரா முருகேசன்.

பலதேவ் ராஜ்குப்தா

பாட்டியாலாவில் உள்ள பஞ்சாப் சர்வ கலாசாலையில் மொழி இயல்துறை ஆசிரியராக இருக்கிறார்.

இவருக்கு, ஆங்கிலம், பஞ்சாபி, உருது, சம்ஸ்கிருதம், ஹிந்தி முதலிய பாஷைகளில் நல்ல ஞானம் உண்டு. சம்ஸ்கிருதத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவர். அண்ணாமலை சர்வகலாசாலையில் இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்து தமிழ் மொழியின் அமைப்பைப் பற்றிக் கற்றுக் கொண்டு போயிருக்கிறார். ஆகவே, தமிழ் எழுதவும் படிக்கவும் இவருக்குத் தெரியும்.

ஆனால் பாட்டியாலாவில் உள்ள சர்வ கலாசாலையில் இன்னும் தமிழ் போதிப்பதற்கான வசதிகள் இல்லை. பக்கத்திலுள்ள சண்டிகாரில் அந்த வசதி இப்போது இருக்கிறது.


'ஒரு புதிய பாஷையைக் கற்றுக் கொள்வதில் அலாதி இன்பம் இருக்கிறது' என்று கூறும் குப்தா மாநாட்டின் ஏற்பாடுகளைக் கண்டு பிரமித்துப் போய் விட்டார்.

சரவணப் பெருமாள்

தென்னாப்பிரிக்காவின் பிரதிநிதியாக டர்பன் நகரத்திலிருந்து வந்திருந்தவர் சரவணப் பெருமாள். பாரதத்துக்கு முதல் தடவையாக வந்தவர். 'மாநாடு, மந்திரிகள் மகாநாடு' எல்லாமே அவருக்குப் பிரமிப்பூட்டுவனவாக இருந்தனவாம். 'முதலமைச்சரைச் சந்தித்தேன். மெய்யப்ப செட்டியாரைப் பார்த்தேன். சிவாஜி கணேசனோடு பேசினேன்' என்ற வெவ்வேறு விஷயங்களை ஒரே மூச்சில் ஒரே உற்சாகத்துடன் கூறினார் சரவணப் பெருமாள்.

டர்பன் நகரத்தில் நடத்தப்படும் 'சைவ மலர்' என்னும் திங்கள் இதழுடன் சம்பந்தப்பட்டவர் இவர். சைவ மலர் பாதி ஆங்கிலத்திலும் பாதி தமிழிலும் அச்சிடப்படுகிறது.

மனைவி திருமதி அமராவதியின் துணையோடு வந்திருந்தார் இவர். — மேனு



திருமால் பெருமை

பக்தியுணர்வைப் பரப்பும் பரமன் அடியார்களில் மதிப்புக்குரிய பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் ஆகிய மூன்று பக்த சிரோமணிகளின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளின் தொகுப்பே ''திருமால் பெருமை''.


பெரியாழ்வாராகத் தோன்றிக் கண்ணன் பெருமையைக் குழந்தை ஆண்டாளுக்கு எடுத்துக்கூறும்போதே சிவாஜியின் நடிப்புத் திறமை நன்கு ஒளிவிடுகிறது. நீலன் என்ற திருமங்கையாழ்வாரின் வாழ்க்கை — தளபதியாக, மன்னனாக, வழிப்பறிக் கள்வனாக வளர்ந்து கடைசியில் பக்தியில் சிறந்த மகாபுருஷராக உயர்ந்துவிடுவது போலவே நடிகர் திலகத்தின் நடிப்பும் மெச்சத் தகுந்த விதத்தில் படிப்படியாக உயர்ந்து சிகரமாக விளங்குகிறது. தொண்டரடிப் பொடியாழ்வார் சரித்திரத்தில் பக்தியோடு காதலுக்கும் இடம் இருக்கிறது. அவ்விரண்டு உணர்வுகளையும் அற்புதமாகக் கையாண்டு ''திருமால் பெருமை'' திரைப்படத்துக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் சிவாஜி. பிறர் வாழ்த்தக் கேட்கின் தம்மைத் தாழ்த்திக்கொண்டு எளியாருக்கு எளியவர்களாக வாழ்ந்த தனித்தன்மைதான் ஆழ்வார்களின் தலையாய சிறப்பு. அத்தன்மையை நடிகர் திலகத்தின் தோற்றம், பேச்சு, நடை யாவும் அதியற்புதமாக வெளிப்படுத்துகின்றன.

குழந்தை ஆண்டாள் — குட்டி பத்மினி தன் கட்டித்தனமான நடிப்பினால் எளிதில் யாவரையும் கவர்ந்துவிடுகிறாள். குமாரி ஆண்டாளாக வரும் கே. ஆர். விஜயா, பாத்திரத்தின் சிறப்புத் தோன்ற நடித்திருக்கிறார். துறவி விப்ரநாராயணரை இல்லறத்தில் ஈடுபடுத்திய நடன நங்கை தேவதேவியின் பாகத்தைப் பத்மினி பொருத்தமாகச் செய்திருக்கிறார். மங்கை மன்னனின் மனைவி குமுதவல்லியின் பாத்திரம் சௌகார் ஜானகிக்கு மிக மிகப் பொருத்தமானது. பொன்மலருக்கு மணம் ஊட்டியது போல் ஏ. பி. நாகராஜனின் வசனம் சிறப்பாக அமைந்திருக்கிறது.

ஈஸ்ட்மென் கலரில் அழகாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் இப்படம் வெளிப்புறக் காட்சிகளே இடம் பெறாமலும், திரைப்பட உத்திகள் எதுவும் இல்லாமலும் நாடகம் பார்ப்பது போல் இருப்பது பெரும் குறை. சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் கதையை மாற்றியதன் காரணம் என்னவோ! பாசுரங்கள் சில பயன்படுத்தப்பட்டிருக்கலாம். கோதையின் உடையலங்காரம் வேதனை தருகிறது. நாகேஷ் 'ட்விஸ்ட்' நடனம் ஆடுவதுபோல் அபிநயம் பிடிப்பது நன்றாயில்லை.

''மலர்களிலே பல நிறம் கண்டேன்'' என்னும் பாடலும், ''திருமால் பெருமைக்கு நிகரேது'' என்னும் ராகமாலிகைப் பாட்டும், பாரதியின் ''காக்கைச் சிறகினிலே'' பாட்டும் கேட்க இனிமையாயிருக்கின்றன.

நல்ல நடிப்புக்காக யாவரும் பார்க்கத்தக்க படம்.



[சென்னையிலுள்ள கல்லூரிகளில் மாலைக் கல்வி பயில்வோரில் சிலர் 45 வயதைக் கடந்தவர்கள்! இவர்களுக்குக் கல்வியின்பால் உள்ள ஆர்வம் நம்மை வியப்பிலாழ்த்துகிறது. அந்த மாணவ மாணவியர் சிலரது சுவையான அநுபவங்களைப் பார்க்கலாமே!]

இவர்கள் இன்னும் படிக்கிறார்கள்!

என் பிள்ளைக்குப் போதிக்கவே நான் படிக்கிறேன்



திரு சாமாச்சாரி

திரு கே. எம். சாமாச்சாரி, சீனியர் கிளார்க், தக்ஷிண ரயில்வே (ஸ்டோர்ஸ் — பெரம்பூர்) கூறுகிறார்:

''எனக்கு வயது நாற்பத்தைந்து ஆகிறது. இருபது வருடங்கள் சர்வீஸ் ஆகியிருக்கிறது, ரயில்வே இலாகாவில். இந்த வேலையில் சேருமுன், இண்டர்மீடியட் படித்துக் கொண்டிருந்தேன். ஆனால், படிப்பைப் பூர்த்தி செய்ய முடியாமற் போய்விட்டது. சென்னை பல்கலைக் கழகம் மாலைக் கல்லூரி வகுப்புக்கள் தொடங்கியதும், முன்பு விட்ட குறையை நிறைவேற்றிக் கொள்ளத் தீர்மானித்தேன். கலைக் கல்லூரியில் சேர்ந்து பயிலத் தொடங்கினேன். புகுமுக வகுப்பு ஒரு வருடம் ஓடிவிட்டது. இப்போது இரண்டாவது ஆண்டு படிப்பு முடியும் தறுவாயில் உள்ளது.''

''பட்டம் பெற்றால் உங்களுக்கு உத்தியோக உயர்வு கிடைக்குமா? நீங்கள் மீண்டும் கல்லூரியில் சேர்ந்து படிப்பதன் நோக்கம்?''

''உத்தியோகத்தில் உயர் பதவி கிட்டும் என்பதற்காக அல்ல. எனக்கு ஆறு குழந்தைகள். மூத்த பெண் டெலிபோன் இலாகாவில் பணியாற்றுகிறாள். இரண்டாவது மகள் கமர்ஷியல் டாக்ஸ் அலுவலகத்தில் எல். டி. சி. (லோயர் டிவிஷன் குமாஸ்தா). எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் அந்தப் பெண்ணுக்கு 60 சத விகிதம் மார்க் கிடைத்திருந்தால் நான் பணியாற்றும் ரயில்வே இலாகாவில் அவளுக்கு வேலை கிடைத்திருக்கும். சம்பளமும் சற்றுக் கூடுதலாகக்கிடைக்கும். ஆனால் துரதிர்ஷ்ட வசமாகப் போதிய மார்க் கிடைக்காததால் குறைந்த சம்பளத்தில் பணியாற்ற வேண்டியிருக்கிறது. நானும் வது உயர் கல்வி பயின்றிருந்தால் என் மகளுக்கு வீட்டில் பாடங்களைச் சொல்லிக் கொடுத்திருக்க முடியும். அவளுக்கு அதிகத் தேர்வு எண் கிடைக்கும் வகையில் என்னால் உதவி செய்ய முடியவில்லை! அடுத்த பெண் இந்த வருடம் எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுதுகிறாள். அடுத்த இருவரும் பிள்ளைகள். வயது



தாத்தாக்கள் ஓட்டப்பந்தயம்!

ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் (மேற்கு ஜெர்மனி) தாத்தாக்களுக்கான ஓட்டப்பந்தயம் அண்மையில் நடைபெற்றது. இந்த 5000 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் ஆஸ்திரியா, ஸ்விட்ஸர்லாந்து, ஸ்வீடன், கொலம்பியா, ஜெர்மன் குடியரசு ஆகிய நாடுகளிலிருந்து பல தாத்தாக்கள் பங்கேற்றனர்! 55லிருந்து 78வரை வயதான தாத்தாக்களின் ஓட்டப் பந்தயத்தை யடுத்துப் பாட்டிமார்களின் ஓட்டப் பந்தயமும் இவ்வாண்டு நடைபெறும்! (பு.பி.எஸ்.)

னுறையே 13, 11. நான் படித்துப் பட்டம் பெற்ருல் என் இரு பிள்ளைகளுக்குமாவது நானே வீட்டில் கல்வி போதிக்க முடியுமல்லவா? அந்த ஒரே காரணத்துக்காகத்தான் நான் சிரமத்தைப் பொருட்படுத்தாமல் மாலைக் கல்லூரியில் சேர்ந்தேன். என் பிள்ளைகள் இருவரும் உயர் கல்வி பயில வேண்டும் என்பதே என் ஆசை. இரவு 11, 12 மணி வரை நான் கல்லூரிப் பாடங்களைப் படிக்கிறேன்'' என எடுத்துரைக்கிருர் திரு சாமாச்சாரி. இவர் ஹோமியோபதி வைத்திய முறையையும், இரண்டு ஆண்டுகள் படித்திருக்கிருர்.

வழக்கறிஞராக விரும்புகிறேன்

''சட்டக் கல்வி பயின்று பட்டம் பெற்ருல் என்னுடைய இப்போதைய உத்தியோகத்தில் உயர்வு பெற உதவியாக இருக்கும் என்பதுடன், நான் பிற்காலத்தில் விரும்பினுல் வழக்கறிஞராகவும் தொழில் புரியலாம். வாழ்க்கையே சிக்கல்கள் நிறைந்தது தானே? நமது அன்ருட வாழ்க்கையில் ஒரு சட்டப் பிரச்னை எழும்போது இன்னொருவரின் - அதாவது ஒரு வழக்கறிஞரின் உதவியை நாடுவானேன்? நமக்கே சட்ட நுணுக்கங்கள் பற்றிய அறிவு இருந்தால் நல்லதுதானே? இது தான் நான் சட்டக் கல்வி பயில முன் வந்ததன் நோக்கம். சென்னை பல்கலைக் கழகம் கல்லூரிகளில் மாலை வகுப்புக்கள் நடத்த முன்வந்தது என் போன்றவர்களுக்கு — அதாவது உத்தியோகத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.



திரு நில்லைநாயகம்



திருமதி ஜகதாகணபதி

அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு சட்டக் கல்லூரியில் சேர்ந்து இப்போது பி. எல். படித்துக் கொண்டிருக்கிறேன்'' என்கிருர் திருமதி ஜகதா கணபதி பி. ஏ.

சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பதவி வகித்த காலஞ் சென்ற திரு ஏ. எஸ். பி. அய்யர் அவர்களின் குமாரி திருமதி ஜகதா. மௌண்ட் ரோட்டில் உள்ள பிரிட்டிஷ் கவுன்சில் அலுவலகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிருர்.

''இண்டர்மீடியட், பி. ஏ. இரண்டுமே நான் 'பிரைவேட்'டாகத்தான் படித்துத் தேர்வு பெற்றேன். இரண்டிலும் முதல் வகுப்பில், அரசியல் பொருளாதாரப் பாடங்களில் சிறப்புடன் (Distinction) தேர்வு பெற்றேன்.''

''சென்னை பல்கலைக் கழகத்திலா?''

''இல்லை. கல்கத்தா பல்கலைக் கழகத்தில். எனக்குத் திருமணம் நடந்த பிறகுதான் என் கணவர் அளித்த ஊக்கம் காரணமாக இண்டர்மீடியட் படிக்கத் தொடங்கினேன். என் ஆர்வம் வீண் போகவில்லை. இப்போது அலுவலக வேலை, வீட்டு வேலை இரண்டையும் கவனிப்பதுடன், குழந்தைகளையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. வீட்டு வேலைக்கு நான் வேலைக்காரர்கள் யாரையும் அமர்த்திக் கொள்ளவும் இல்லை. இந்த நிலையில் மாலையில் கல்லூரிக்குச் சென்று பயிலுவது ஓரளவு சிரமமாகத்தான் இருக்கிறது. ஆனல் சிரமத்தைப் பார்த்தால் கிடைத்தற்கரிய கல்வியை இழக்க நேரிடுமே?



திரு ஆர். ஜோதிராமன்



திரு எஸ். கனகசபை

காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பதுபோல படிப்பதற்கு ஆர்வம் இருக்கிற சமயத்தில் அவசியமாயிராமல் கல்வி பயின்ருல் நல்லதல்லவா? ஆனல் நேரம்தான் போதவில்லை. படிப்பதற்கு இன்னும் சிறிது அவகாசம் கிடைத்தால், பி. எல். பரீட்சையில் சிறப்பாகத் தேர்வு பெற முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.''

''உங்கள் வயது....?''

''ஏன் தயங்குகிறீர்கள்? ஓ!....பெண் மணிகளிடம் வயதை விசாரிக்கலாமா என்று? யாராயிருந்தாலும் ஆண்டுக்கோர் வயது ஏறிக்கொண்டேதானே போகிறது?'' என்று சிரித்தவாறு கூறிவிட்டு, ''என் முதல் பெண்ணுக்கு

இரண்டு மாதங்களுக்கு முன்புதான் திருமணம் நிகழ்ந்தது. அடுத்த குழந்தைகள் இருவருக்கும் 12, 10 வயது ஆகிறது. படிக்கிறார்கள். என் மூத்த பெண் பி. யூ. சி. தேர்வு பெற்றிருக்கிறாள். அவள் மேலும் படிக்க வேண்டும் என்பதுதான் அவளது கணவரின் விருப்பமும். நானே இன்னும் படித்துக் கொண்டிருக்கையில், என் மகள் படித்துப் பட்டம் பெற வேண்டுமென்று அவள் கணவர் விரும்புவது நியாயம்தானே?'' என்று கேட்கிறார் திருமதி ஜகதா கணபதி.

என்றும் இளமையோடிருக்கவே படிக்கிறேன்!

''பரீட்சை எழுதித் தேர்வு பெறும் கண்ணோட்டத்துடன் மாத்திரம் நான் சட்டக் கல்வியைப் பயிலவில்லை. என் அலுவலகத்தில் அவ்வப்போது எழும் பிரச்னைகளுக்கெல்லாம் சட்டத்தின் துணை கொண்டு எப்படித் தீர்வு காணலாம் என்பதை முக்கியமாகக் கவனிப்பேன். உதாரணமாக காண்ட்ராக்ட் பற்றிய விதிகள் (Law of Contract) நன்கு தெரிந்திருந்தால் என் உத்தியோக அலுவல்களுக்கு அது மிகவும் உபயோகமாயிருக்கும். முக்கியமாக இந்த நோக்கத்துடன்தான் நான் சட்டம் பயில மாலைக் கல்லூரி வகுப்புக்களுக்குப் போய் வருகிறேன். எஃப். எல். முடித்து விட்டேன். பி. எல். முடிந்தால் என் முயற்சிக்குப் பலன் கிட்டியதுபோலாகும். தவிரவும் நான் வேலையிலிருந்து ஓய்வு பெற்றதும் வழக்கறிஞராக 'பிராக்டீஸ்' செய்யவும் முடியுமே?'' எனக் கூறுகிறார் திரு ஆர். தில்லைநாயகம், B.E. (Civil) C. E., B.E. (Highways) B. Lib., Sc. Dip. Traffic Engineering, Dip. Statistics, Dip. Geography, Dip. Politics and Public Administration M. ASCE, M. INST. H.E., MITE., AMIE (India) A. M. I. R. T. துணைத் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை மாநிலம். இவருக்கு இப்போது 45 வயது. சர்க்கார் விதிகளின்படி இன்னும் 10 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றலாம். அதன் பிறகு, அரசு விரும்பினால் மேலும் 3 ஆண்டுகளுக்குப் பதவிக் காலத்தை நீடிக்க இயலும்.

''நீங்கள் இதுவரை பெற்றுள்ள பட்டங்களையும் டிப்ளோமாக்களையும் ஒரு தடவை சொல்லிப் பார்க்கவே மூன்று நிமிடங்களுக்கு மேல் ஆகும்போலிருக்கிறதே! மேலும் தொடர்ந்து கல்லூரிக்குச் சென்று பாடங்களைப் படிப்பது தங்களுக்கு அலுப்பாக இல்லையா?''

''கல்வி பயிலுவதில் எனக்கு அலுப்போ சலிப்போ ஏற்படுவதில்லை. படித்துக் கொண்டே இருப்பது ஒரு தனி மகிழ்ச்சி. என்னைவிட இளைஞர்களான மாணவர்களுடன் சேர்ந்து பழகி, கல்வி பயிலும்போது எனக்கும் இளமைக்குரிய உற்சாகம் பிறக்கிறது. என்றும் இளமையோடிருப்பதை யார்தான் விரும்ப மாட்டார்கள்? வாரம் ஒரு முறை அளகப்பா டெக்னலஜி கல்லூரிக்குச் சென்று இரண்டு மணி நேரம் மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடத்துகிறேன்...''

''உங்கள் சட்டக் கல்வி சம்பந்தமான பாடங்களைப் படிக்க எப்போது நேரம் கிடைக்கிறது?''

''காலையில் நான்கு மணி முதல் ஏழு மணி வரை பாடங்களைப் படிப்பேன். இரவிலும் 9 மணி முதல் 10 மணி வரை படிக்கிறேன்.''

''உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?''

''மூன்று பெண்களும் ஒரு மகனும். மூத்த மகள் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் புகுமுக வகுப்பில் படிக்கிறாள். நானும் ஒரு மாணவனாக இருந்து படித்துக் கொண்டிருக்கிறேன்'' என்று முகத்தில் புன்னகையோடு பதிலிறுத்தார் திரு தில்லை நாயகம். அரசாங்கத்தில் பொறுப்புள்ள ஒரு பதவியை வகித்து வரும் இவர், இவ்வளவு அலுவல்களுக்கிடையே பொறியியல் சம்பந்தப்பட்ட, ''சென்னை நெடுஞ்சாலை'' என்ற ஒரு சஞ்சிகையின் (மூன்று மாதங்களுக்கொரு முறை வெளியாகும் இதழ்) ஆசிரியராகவும் பணியாற்றி வருவது குறிப்பிடத் தக்கது.

உள்ளூரிலேயே ஒரு கல்லூரி இல்லையே?

திரு எஸ். கனகசபை கூறுகிறார்:

''எஸ்.எஸ்.எல்.சி. படிப்பை முடித்ததும் தொடர்ந்து என்னால் கல்லூரியில் படிக்க முடியவில்லை. காரணம், பொதுவாக எல்லோருக்குமே இருக்கக்கூடிய பிரச்னைதான்—பொருளாதார நெருக்கடி! என் குடும்பம் அப்போது கடலூரில் இருந்தது. உள்ளூரில் ஒரு கல்லூரி இருந்திருந்தால், எப்படியோ சிரமப்பட்டு நான் மேற்படிப்பைத் தொடர்ந்திருக்கலாம். வெளியூருக்குச் சென்று படிக்க வசதியில்லை. ஹாஸ்டல் செலவு இருக்கிறதே? குடும்ப நிலை அதற்கு இடம் கொடுக்காததால் சென்னைக்கு வந்து ஃபார்மஸி படிப்பை மேற்கொண்டேன். டிப்ளோமா கிடைத்ததும் உடனடியாக ஒரு வேலை கிடைக்குமல்லவா?''

''போர்ட் டிரஸ்டில் வேலை கிடைத்ததாக்கும்?''

''இல்லை. முதலில் சென்னை அரசாங்கத்தில் ஸ்டோர் கீப்பராகவும், ஃபார்மஸிஸ்டாகவும் ஐந்து ஆண்டுகள் பணியாற்றிய பின் அதை விட்டு விட்டு போர்ட் டிரஸ்டில் சேர்ந்தேன். இப்போது எனக்குப் பத்து வருடங்கள் 'சர்வீஸ்' ஆகியுள்ளது.''

''உங்கள் வயது?''

''ஜூன் வந்தால் 35 வயது முடிவடையும். இப்போது புகுமுக வகுப்பு படிக்கிறேன். படிப்பில் பிரமாதம் என்றும் கூறமுடியாது; மோசம் என்றும் கூறுவதற்கில்லை. காலையில் சுமார் ஆறு மணிக்கு பெரம்பூரிலுள்ள என் வீட்டை விட்டுப் புறப்பட்டு 7—30க்கு போர்ட் டிரஸ்ட் வந்து சேர்ந்து விடுகிறேன். மாலையில் 5—30க்கு வேலை முடியும். இடையில் எனக்கு இரண்டரை மணி நேரம் ஓய்வு. அந்த ஓய்வு நேரத்தில்தான் கல்லூரிப் பாடங்களைப் படிக்கிறேன். பரீட்சை சம

யத்தில் 'லீவு' கேட்டு வாங்கிக் கொண்டு கொஞ்சம் மும்முரமாகப் படிப்பேன்.''

''இரவில் படிக்க முடியாதா?''

''எட்டரை மணிக்குக் கல்லூரியில் கடைசி வகுப்பு முடியும். ராயப்பேட்டையி லிருந்து நான் பெரம்பூர் போய்ச் சேரும் போது ஒன்பதரை, பத்து மணி கூட ஆகி விடும். சாப்பிட்டுவிட்டுப் பத்தரை மணிக் குப் படுத்து விடுவேன். மறுநாள் ஐந்து மணிக்கு எழுந்தால்தானே ஒழுங்காக வேலைக்குக் கிளம்ப முடியும்? நான் கல் லூரியிலிருந்து வீடு திரும்பும்போது என் இரு குழந்தைகளும் தூங்கிக் கொண்டிருப் பார்கள்!'' — வகுப்புக்கள் ஆரம்பமாவ தற்கான மணி ஒலிக்கவும் திரு கனகசபை விடைபெற்றுக் கொண்டார்.

புதுமுக வகுப்புத் தேர்வு முடிந்ததும் இவருக்கு பி ஃபார்மஸி சேர்ந்து பட்டம் பெறவேண்டுமென்று கொள்ளை ஆசை.



''இன்று என்ன கிழமை ?''

''வந்து.....இரு சொல்றேன்! திங்கள் - வெள்ளை. செவ்வாய் - பச்சை. புதன் - சாம்பல். வியா ழன் - கருப்பு. வெள்ளி - சிவப்பு. சனி - மஞ்சள் என்கிற கணக்குப் படி நம்ம டைப்பிஸ்டம்மா புடவை கட்டிட்டு வருவது வழக்கம். இன்று என்ன கலர்னு பார்! கிழ மையைக் கண்டுபிடிச்சிடலாம்!''

பட்டம் பெறுவதற்கு எட்டு மைல் சைக்கிள் சவாரி

திரு ஆர். ஜோதிராமன், எலெக்ட்ரிகல் ஃபோர்மேன், தென் பிராந்திய ரயில்வே, பெரம்பூர் — சென்னை தியாகராய கல்லூரி யில் பி. எஸ்ஸி. (கணிதம்) படிக்கும் மாண வர் கூறுகிறார்:

''நான் குடந்தை அரசினர் கல்லூரியில் படித்து 1940ல் இன்டர்மீடியட் தேர்வு பெற்றேன். குடந்தைக் கல்லூரியில் 'கானு' (Canoe) போட் கிளப் இருக்கிறதல்லவா? அது மற்ற எந்தக் கல்லூரியிலும் கிடையாது. மாலை நேரங்களில் படகு விடுவதிலும் பல வேறு விளையாட்டுக்களிலும் பொழுதைக் கழித்து வந்ததால் படிப்பில் அப்போது தீவிரக் கவனம் செலுத்தவில்லை. பட்டப் படிப்புக்கு முயற்சி செய்யாமல் வேலை தேடிக் கொண்டு விட்டேன். பின்னர் அப் போது பிராட்வேயிலிருந்த 'பாலிடெக்னிக்' கில் சேர்ந்து பயின்று 1945ல் எல். இ. இ. டிப்ளோமோ பெற்றேன். என்ன இருந் தாலும் பட்டம் பெற்றால் அதற்குள்ள மதிப்பே தனி. அப்போது அந்த வாய்ப்பினை நழுவ விட்ட குறையை ஈடு செய்யவே இப் போது பி. எஸ்ஸி. மாலை வகுப்பில் சேர்ந்து பயில்கிறேன். தவிர, ஏ. எம். ஐ. இ. பரீட்சைக்கும் பிரத்தியேகமாகப் படித்துக் கொண்டிருக்கிறேன். அதற்கும் உதவியாக இருக்கிறது இந்த பி. எஸ்ஸி. படிப்பு. சம்பளம் ரூ. 640 கிடைக்கிறது. என்னுடைய மூன்று பெண்களும் ஒரு மகனும் பெரம்பூர் கான்வெண்டில் படிக்கிறார்கள். அவர்களுக் கெல்லாம் நானே வீட்டில் பாடம் சொல்லிக் கொடுக்கிறேன். நானும் படித்து வருவதால் அவர்களுக்குக் கணிதம், ஆங்கிலம் இவை போதிப்பது எளிதாகிறது. டியூஷன் செலவு மிச்சம்!''

''நீங்கள் இப்போது படிப்பதன் முக்கிய நோக்கம் அதுதானா?''


''நான் ஒரு கெஜட்டட் (Class II) அதிகாரி யாக ஆசைப்படுகிறேன். நான் வேலையில் சேர்ந்த புதிதில் எனக்கு நாள் ஒன்றுக்குப் பத்தணாதான் சம்பளம்! இப்போது மாதம் அறுநூறு ரூபாய்க்கு மேல் சம்பளம் வருகிற தென்றாலும் கெஜட்டட் அதிகாரியாகப் பதவி கிட்டவில்லை. அது விரைவில் கிட்டும். இன்னும் 12 வருட சர்வீஸ் இருக்கிறதே! அதற்கு என்னுடைய இந்தக் கல்வி முயற்சி பெருவாக உதவும்!''

''தொழிற்சாலையில் நாள் முழுவதும் வேலை செய்துவிட்டு, மாலையில் கல்லூரிக்குச் சென்று படிப்பது கஷ்டமாயில்லையா?''

''அந்தக் காலத்தில் விளையாட்டுக்களில் அதிகமாக ஈடுபட்டதன் காரணமாக என் உடற்கட்டு இன்னும் உறுதியாக உள்ளது. காலை 7மணி முதல் மாலை 4-30வரை தொழிற் சாலையில் பணியாற்றுகிறேன். தொழிற்சாலை அருகில் அய்யனாவரத்தில் வீடு. மாலை வீடு திரும்பி டிபன் சாப்பிட்டு விட்டு ஐந்து மணிக் குக் கிளம்பி வண்ணாரப்பேட்டையில் உள்ள கல்லூரிக்குச் சைக்கிளில்(4மைல் தூரம்) வந்து சேர்ந்து விடுகிறேன். இரவு 8—30 மணிக்குக் கல்லூரி வகுப்புக்கள் முடிந்ததும் சைக்கிளி லேயே வீடு திரும்பி, சாப்பிட்டு விட்டுத் தூக் கம் வருகிறவரை பாடங்களைப் படிக்கிறேன். படிப்பை முடித்துப் பட்டம் பெறவேண்டும் என்ற உறுதி மனத்தில் இருப்பதால் நான் சோர்வை உணரவில்லை'' எனக் கூறுகிறார், இந்த 46 வயது மாணவ இளைஞர் திரு ஆர். ஜோதிராமன். —பேட்டி: **ரா. பா.**

சுவர்

அனுபவம் புதுமை



நமது சுற்று வட்டாரத்தில் நூற்றுக் கணக்கான சுவர்களைத் தினந்தோறும் காண்கிறோம். அகில உலகிலும் கோடானு கோடி சுவர்கள் உள்ளன. என்றாலும் 'சுவர்' என்றதும் நமக்கு நினைவுக்கு வருவது பெர்லின் சுவர். ஆங்கிலத்திலும் "தி வால்" (The Wall) என்றால் பெர்லினிலுள்ள, அந்நகரை இரண்டாகப் பிளக்கிற சுவரையே அது குறிக்கும்.

நாற்பது லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கிழக்கு ஜெர்மனியிலிருந்து மேற்கு ஜெர்மனிக்கு ஏன் ஓடினார்கள்? சுவர் எழுப்பி அவர்களைத் தடுத்து நிறுத்தும்படியான நிலை எதனால் ஏற்பட்டது? சுவர் எழுப்பிய பிறகும் சாவுக்கும் அஞ்சாமல் அதைக் : கடந்து மேற்கு ஜெர்மனிக்குச் சென்றுவிடவே பல ஆயிரக் கணக்கானவர்கள் முயன்றது எதற்காக? இந்த முயற்சி


மேலே: கிழக்கு பெர்லின் நகரில் வெறிச்சோடிக் கிடக்கும் பிரதான வீதி யொன்றின் தோற்றம்.

வலதுபுறம்: பெர்லின் சுவர்.

கீழே: ஜெர்மனியின் குறுக்கே நீண்டு செல்லும் இரும்பு வேலியை ஒட்டி சோவியத் தரப்பினர் வரிசையாக விளக்குக் கம்பங்களை நட்டு வைத்திருக்கின்றனர், இரவில் யாரும் தப்பி ஓடாமல் தடுக்க.

இடது பக்கம்: பெர்லின் நகரில் சில காட்சிகள்.





கி.ராஜேந்திரன்

யில் பிடிபட்டுக் கைதான பலப்பலரை மேற்கு ஜெர்மானிய அரசாங்கம் அபராதத் தொகை செலுத்தி விடுவிக்கும்படியான சூழ்நிலை எப்படி உருவாயிற்று?

கம்யூனிஸ ஏகாதிபத்தியத்தை விரும்பாமல் சுதந்திர வாழ்க்கையை விரும்பி லட்சோப லட்சம் மக்கள் வீடு வாசலைத் துறந்து வந்தார்கள்.

ஒரே இனத்தவர், ஒரே நாட்டவராய் விளங்கியவர், ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஒரே இரத்தம் — அப்படிப்பட்டவரை இரு கூறுகப் பிரித்துக் கிழக்கு ஜெர்மானியர் என்றும் மேற்கு ஜெர்மானியர் என்றும் வாழும்படியான நிலைக்குக் கொண்டு வந்து வைத்து விட்டதே காலம்! அந்தத் துயரம் போதாதென்று அதை உறுதிப்படுத்துவதே போன்று

இரும்பும், கருங்கல்லும், சிமெண்டும் கலந்த இந்த உறுதியான 'கான்கிரீட்' சுவர் வேறு வேண்டுமா? அதன் உச்சியில் பதிக்கப்பெற்றுள்ள இந்த முள் கம்பிகள் சிறைச்சாலைச் சுவரையல்லவோ நினைவூட்டுகின்றன! என்ன பயங்கரம் இது!


சுவர் எழுப்பப்பட்ட பிறகு மேற்கு பெர்லினுக்கு வந்த அயல்நாட்டவர்களின் எண்ணிக்கை பல மடங்காகப் பெருகியுள்ளது. சுவரைப் பார்க்கவென்றே வந்தவர்கள் பலர். சுவருக்கு அப்பாலுள்ள கம்யூனிஸ ராஜ்யத்தை எட்டிப் பார்ப்பதிலே ஒரு திருப்தி. இரும்புத் திரை என்று பெயரளவில் இருந்த ஒரு சொற்றொடருக்கு உருவம் கொடுத்த பிறகு அந்தத் திரையின் பின்னால் இருப்பதையும் கண்டு கொள்ளும் ஆவலும், பார்த்துவிட்டால் ஒரு திருப்தியும் ஏற்படுவது மனித இயல்புதானே!

இந்த ஆவலைப் பூர்த்தி செய்ய — இரண்டாள் உயரத்துக்கு இருக்கும் சுவருக்கு மேலாக எட்டிப் பார்க்க வசதியாக மேற்கு பெர்லினில் பல இடங்களில் மேடை கட்டியுள்ளார்கள். 'டூரிஸ்டு'கள் படிகளில் ஏறி மேடை மீது நின்று மறுபுறம் பார்க்கலாம்.

அவ்விதம் நோக்கும்போது, ஆச்கச்சு!; ஹா ஹா ஹா!; உஷ்ஷு! என்பன போன்ற அனுதாபக் குரல்கள் எழும். சுவருக்குப் பின்னும் சற்று இடைவெளி விட்டு இன்னொரு இரும்பு வேலி பத்திரத்துக்காக இருப்பதைக்கண்டு ஒருவர் மனம் நோவார். அந்த வேலியை யாரும் தாண்ட முடியாதபடி அதில் சதா மின்சாரம் பாய்ந்து கொண்டே இருக்கும் என்பதை உணர்ந்து இன்னொருவர் வருத்தத்தோடு தலையசைப்பார். சுவரை யொட்டினாற்போல் உள்ள வீடுகளின் ஜன்னல்களெல்லாம் செங்கல்லும் சிமெண்டும் கொண்டு அடைக்கப்பட்டிருப்பது கண்டு ஒருவர் அங்கலாய்ப்பார். யாரேனும் ஜன்னல் வழியாகக் குதித்துச் சுதந்திரத்தைத் தேடிக் கொண்டு விடக் கூடாதே என்ற பயம் அதிகாரிகளுக்கு. ஜனநடமாட்டம் அதிகமாயிராது அந்தப் பக்கத்தில். கிழக்கு ஜெர்மானிய போலீஸார் மட்டும் (வோபோக்கள்) துப்பாக்கிகளுடன் ரோந்து சுற்றிக் கொண்டிருப்பார்கள். இன்னொருபுறம் மிக உயரமான ஒரு மேடை. அதில் பிரகாசமான சர்ச் லைட்டுகள் பொருத்தப்பட்டிருக்கும். போலீஸார் அதன் மீதும் மிஷின் கன்களுடன் நின்று நாலா புறமும் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஒன்றிரண்டு ருஷ்ய ராணுவ அதிகாரிகளும் சில சமயங்களில் தென்படுவார்கள். இரவு நேரங்களில் சுவரை யொட்டியுள்ள பகுதி முழுவதையும் ஜகஜ்ஜோதியான விளக்குகளால் ஒளி வெள்







ளத்தில் ஆழ்த்தி விடுகிறது கிழக்கு பெர்லின் கம்யூனிஸ ஆட்சி. இருட்டைத் துணை கொண்டு யாரேனும் ஆன்ம விடுதலை ஒளியை நாடிச் சென்றுவிடப் போகிறார்களே என்ற பயம் அதற்கு!

நாம் பார்த்துக் கொண்டே யிருக்கையில் சுவரின் மறுபுறம் ஒரு தொழிலாளி வருகிறான், ஒற்றைச் சக்கர வண்டியொன்றைத் தள்ளிக் கொண்டு. வண்டியில் குழிதோண்டுவதற்கான சாதனங்கள் சில உள்ளன. அந்தப் பக்கத்தில் ஏதோ வேலை நடக்க வேண்டியிருக்கிறது போலும். தொழிலாளி தன் காரியத்தில் கண்ணாயிருக்கையில் அவனுக்குப் பின்னாலேயே வந்த இரண்டு துப்பாக்கி ஏந்திய வீரர்கள் அருகிலேயே நிற்கிறார்கள்.

சுவரையொட்டினாற்போல் எந்தக் காரணம் பற்றியும் வருகின்ற கிழக்கு ஜெர்மானியர் எவரும் போலீஸ் துணையுடன்தான் வர வேண்டும்! ''இந்த ஒரு தொழிலாளியைப் பாதுகாக்க இரண்டு போலீஸ்காரர்களா?'' நம்மையுமறியாமல் கேள்வி உரக்கவே பிறந்து விடுகிறது.

''ஆமாம். இரண்டு காவல்காரர்கள்தான். ஒரு போலீஸ்காரரை மட்டும் நம்பி அனுப்பக் கம்யூனிஸ சித்தாந்தம் இடம் தரவில்லை. அந்த ஒரு போலீஸ்காரர் தொழிலாளியுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு இருவருமாகத் தப்பிவிட்டால்? அதற்காகத்தான் காவலுக்குக் காவல் போட்டிருக்கிறார்கள்!''

''இதென்ன விந்தை!''

''விந்தைதான்! விந்தையான நிகழ்ச்சிகளுக்குப் பெர்லினில் பஞ்சமே யில்லை. முன்பு ஒரு வேபோ (கிழக்கு பெர்லின் போலீஸ்) தனியாக இங்கே ரோந்து சுற்றிக் கொண்டிருந்தார். திடீரென்று ஒரு ஓட்டம்; கத்தி முனை பொருத்தப்பட்ட துப்பாக்கியைத் தரையில் எறிந்துவிட்டு ஒரு துள்ளல்! உயரம் தாண்டலில் எத்தனை நாள் பயிற்சியோ அவருக்கு, லாகவமாகச் சுவரின்மேல் பரப்பைப் பற்றி ஓர் எம்பு எம்பி இப்பால் வந்து விழுந்து விட்டார். அதன் பிறகு எந்த ஒரு போலீஸ்காரரும் தனியாக இங்கு விடப்படுவதில்லை. அதோடு சுவருக்கு மேல் முள் வேலியும் மின்சாரம் பாய்கிற புது வேலியும் வேறு உருவாகிவிட்டன.''

ஏதோ ஒரு சினிமாக் காட்சிபோல் தோன்றும் நமக்கு. ஆனால் கிழக்கு பெர்லினிலிருந்து தப்பி மேற்கு ஜெர்மனிக்கு வந்து சேர எத்தனை எத்தனை விதமான உபாயங்கள் கையாளப்பட்டன என்பதை விவரிக்க ஒரு கண்காட்சி சாலையே இருக்கிறது பெர்லினில். சுரங்கப் பாதை சமைத்து வந்தவர் சிலர்; மாறு வேடத்தில் மறைந்து வந்தவர் சிலர்; பெட்டிக்குள் புகுந்து வந்தவர் சிலர் — இன்னும் எத்தனை எத்தனையோ யுக்திகள் கையாளப்பட்டுள்ளன. பிடிபட்டு அழிந்தவர்களும் சுடப்பட்டு இறந்தவர்களும் பலப் பலர்.

இத்தனை பந்தோபஸ்துக்களுடன் கூடிய சுவரைத் தாண்டி அப்பால் கிழக்குப் பெர்லினுக்கும் போய் வந்தேன் நான். தாண்டிக் குதித்து ஓடவில்லை. காரிலேதான் போய் வந்தேன்! நெடுஞ்சுவருக்கும் வாயில்கள் உண்டு. ஒரு இடம் ''செக் பாயிண்ட் சார்லி'' என்று அழைக்கப்படுகிறது. 'ஸி' என்ற ஆங்கில எழுத்தை அடையாளக் குறியாகக் கொண்ட மூன்றாவது வாயில் அது.

மேற்கு ஜெர்மானியர் யாரும் இந்த வாயிலைத் தாண்டி அப்பால் கிழக்கு பெர்லினுக்குள் நுழைய முடியாது. ஆனால் அயல் நாட்டவருக்கு மட்டும் அனுமதி யுண்டு. என்னை அழைத்துப் போனவர் ஸிரியா தேசத்தவர். மேற்கு பெர்லின் சர்வகலா சாலையில் உயர் கல்வி பெற்றுவரும் மாணவர்.

கிழக்கு பெர்லினுக்கு மக்கள் அதிகமாக வருவதைக் கம்யூனிஸ சர்க்கார் விரும்பாது போனாலும் ஜனநாயக ஜெர்மனியின் 'மார்க்' நாணயம் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. அத்துடன் ஸ்டெர்லிங்கும் டாலர்களும் வந்தாலும் ரொம்ப நல்லதுதான். ஆகவே அயல் நாட்டவரைக் கிழக்கு பெர்லினுக்குள் சென்று திரும்ப அனுமதிக்கிறார்கள், ஒரு நிபந்தனையோடு—

செக் பாயிண்ட் சார்லியில் ஒரு குறிப்பிட்ட குறைந்தபட்சத் தொகையை அவர்கள் கிழக்கு ஜெர்மனியின் நாணயமாக மாற்றிக் கொள்ள வேண்டும். அந்தத் தொகை முழுவதையும் அவர்கள் அங்கேயே செலவழித்துவிட வேண்டும். திரும்பும்போது மீண்டும் அதை மேற்கு ஜெர்மானிய நாணயமாக மாற்றிக் கொள்ள முடியாது!

இந்த நிபந்தனைக்குட்பட்டே எத்தனையோ பல நூற்றுக்கணக்கான அந்நியர்கள் நாள்தோறும் கிழக்குப் பெர்லினுக்குப் போய்த் திரும்புகிறார்கள். ஒரு கம்யூனிஸ நாடு எப்படி இருக்கிறது என்று பார்த்துவிட்டு வருகிறார்கள்.

செக்பாயிண்ட் சார்லியில் உரிய இடத்தில் காரை நிறுத்தினார் ஸிரிய நண்பர். அரை மணி நேரம் மழைச் சாரலில் வெளியில் நின்று இரண்டு ஃபாரங்களையும் பூர்த்தி செய்து கொடுத்த பிறகு பாஸ்போர்ட்டை ஆராயப் பதினைந்து நிமிடம் எடுத்துக் கொண்டார்கள். பாஸ்போர்ட்டை ஆராய்வது யார் என்பது கூட நமக்குத் தெரியாது. மரச் சுவரில் உள்ள இடுக்கு வழியாக ஒரு தபால் பெட்டியில் கடிதம் போடுவதுபோல் பாஸ்போர்ட்டைப் போட்டு விடுவார்கள். சிறிது நேரம் கழித்து இன்னொர் இடுக்கு வழியாகத் திரும்பி வந்து சேரும். சுவருக்குப் பின்னால் உள்ள ஓர் உயர் அதிகாரி இந்த பாஸ்போர்ட் உண்மையானதுதானா அல்லது மோசடியா என்பதை நவீன சாதனங்களின் துணையுடன் ஆராய்கிறார் என்பதைப் புரிந்து கொள்வது கடினமாயில்லை.

ஒருவழியாக பாஸ்போர்ட் விவகாரம் முடிந்ததும் காருக்கு வந்து சேர்ந்தோம். காரில் பின்னால் சாமான்கள் வைக்கும் அறையைத் திறந்து காட்டினார் ஸிரிய நண்பர். ஒரு வோபோ அதனுள்ளே யாரும் பதுங்கியிருக்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்டதும் முன்னால் வந்து காரின் இயந்திரம் உள்ள பாகத்தைத் திறந்து காட்டச் சொன்னார். இஞ்ஜினுக்கு இடையில் யாரும் ஒளிந்து கொண்டிருக்கவில்லை என்பது ஊர்ஜிதமானதும் காரோட்டியும் பிரயாணிகளும் அமரும் ஆசனங்களைத் தூக்கி அவற்றின் அடியில் ஆராய்ந்தார். இன்னும்

என்ன பாக்கி என்று நான் நினைக்கையி லேயே அவர் காருக்கடியில் அடிவாரத்தில் யாராவது ஒண்டிக் கொண்டிருக்கிறார்களோ என்று குனிந்து பார்த்தார். அப்புறம்தான் எங்களைப் போக விட்டார்!

கிழக்கு பெர்லின் நகரச் சாலைகளில் கார் ஓட்டுவது மிகச் சுலபம். ஏனென்றால் அந்தச் சாலைகளில் ஆள் நடமாட்டம் கிடையாது! வண்டி வாகனங்களின் போக்குவரத்து இல்லை. ஈ காக்காய் கிடையாது என்றே சொல்லி விடலாம். அப்படி வெறிச்சோடிக் கிடக்கின்றன சாலைகள். ஜே ஜே என்று இருந்த மேற்கு பெர்லின் சாலைகள் எங்கே, 'அம்போ' என்று கிடக்கும் இந்தச் சாலைகள் எங்கே?

இரண்டுமே ஜெர்மனிதானா? இரண்டுமே ஒரே நகர்தானா? இரண்டிலுமே ஒரே இனத் தவர்தானா? ஜெர்மானியர்தானா? என் கண்களையே நம்ப முடியவில்லை என்றால் அது கதைகளில் வருவது போன்ற விஷய மல்ல, நூற்றுக்கு நூறு உண்மை!

"கிழக்கு பெர்லின் மக்களெல்லாம் எங்கே? சாலைகளில் யாரையும் காணோமே?"

"ரொம்பப்பேர் சுதந்திர வாழ்வை விரும் பிச் சுவர் எழும்புவதற்கு முன்பாகவே தப்பி ஓடி விட்டார்கள் மேற்கு பெர்லினுக்கு. மிகுதியாக உள்ள லட்சக்கணக்கானவர்களும் வாழ்க்கையில் எந்த ஒரு பிடிப்பும் இல்லா மல் வீட்டுக்குள்ளேயோ அல்லது அலுவ லகத்திலோ அடைந்து கிடந்து இயந்திரம் போன்ற வாழ்க்கை நடத்துகிறார்கள்."

"மேற்கு பெர்லின் நகரில் ஐந்தடி தூரம் நகர, ஐந்து நிமிஷங்கள் ஆகுமே காருக்கு சந்தடி மிகுந்த வேளையில். இங்கே கார் களையே காணோமே? இதோ முந்நூறு கார்கள் நிற்பதற்காக ஏற்பட்ட பரந்த திறந்த வெளியில் எண்ணி இரண்டு கார்கள் கூட இல்லையே!"

"மேற்கு ஜெர்மனியில் நிமிஷத்துக்கு ஒரு கார் வீதம் ஃபோக்ஸ் வாகன் தொழிற்சாலை யில் மோட்டார் கார்கள் உற்பத்தியாகின் றன. மெர்ஸிடஸ் பென்ஸ் போன்ற பெரிய கார்களும் உண்டு. இங்கே அப்படிப் பெரு மளவில் தயாராகும் கார்கள் இல்லை."

"அது சரி. இந்தக் கட்டிடங்கள் ஏன் இப் படி அழுது வடிகின்றன? வர்ணப் பூச்சு கண்டு யுகமாகியிருக்கும் போலிருக்கிறதே! மேற்கு பெர்லின் கட்டிடங்கள் புது மெருகு குன்றாது இருக்கின்றனவே!"

"அடிக்கடி வர்ணப் பூச்சுக் கொடுக்கக்கூடிய அளவுக்கு இங்குள்ள மக்களின் பொருளாதார வளம் பெருகவில்லையே, என்ன செய்ய?"

கிழக்கு பெர்லினில் பிரும்மாண்டமான புதிய கட்டிடங்களும் பலப்பல உள்ளன. சமீப காலத்தில் கம்யூனிஸ அரசாங்கம் எழுப்பியுள்ள பல மாடிக் கட்டிடங்கள் இவை. ஆயினும் இந்தப் பெரிய பெரிய புதிய கட்டிடங்களும் நம் மனத்தைக் கவராமல் போவதற்குக் காரணம் ஏதோ மக்கள் நடமாட்டமே இல்லாத பாலைவனத்தில் மயன் சிருஷ்டித்த மாளிகைகளைப் போல் இவை நிற்பதுதான். இங்கும் அங்குமாகக் கண்களுக்குத் தென்படுகிற ஒருசில மக்களின் முகத்திலும் உற்சாகம் என்பதை லவலேச மும் காண முடியாதபோது வெறும் கட்டி



"உம்....உம்.... படம் ஆரம்பிச்சுடுவாங்க! சீக்கிரம் ஓடுங்க தியேட்டருக்கு!"

டங்கள் நம் மனத்தில் என்ன சந்தோஷத்தை ஏற்படுத்திவிடப் போகின்றன?

செக்பாயின்ட் சார்லியில் மறுபடியும் கார்ப் பரிசோதனை யெல்லாம் முடிந்து மேற்கு பெர்லினுக்கு வந்து சேர்ந்தோம்.

மரண அமைதியிலிருந்து விடுபட்டு வந்து புதுக் குழந்தையின் உயிர்த் துடிப்பு மிகுந்த அழுகைக் குரலைக் கேட்பது போல் ஒரு பிரமை ஏற்பட்டது எனக்கு.

நாலா பக்கமும் விரையும் ஜன நட மாட்டம், மோட்டார் கார்களின் நெரிசல், ஹாரன் ஒலி, திரும்பிய திக்கெல்லாம் கடை கண்ணிகள், வண்ண விளக்கொளிகள், கலகலப்பு, சிரிப்பு, ஜனக்கம்! அப்பப்பா! எத்தனை வித்தியாசம்!

பெர்லினுக்கு நான் போயிருந்த சமயத் தான் மேற்கு ஜெர்மனி முழுவதற்குமாக கலர் டெலிவிஷன் முதன் முதலாக அங்கு ரார்ப்பணம் ஆகியிருந்தது. இதையொட்டி ஒரு பெரிய ரேடியோ டெலிவிஷன் கண் காட்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். கலர் டெலிவிஷன் எப்படி இயங்குகிறது என் பதைக் காண்பித்ததோடு இந்தக் கண் காட்சியில் விதம் விதமான ரேடியோக்கள், ரேடியோ கிராம்கள், டேப் ரிகார்டர்கள், டெலிவிஷன்கள் ஆகியவை இடம் பெறச் செய்திருந்தார்கள். மேற்கு ஜெர்மானியரின் இல்லங்களில் இடம்பெறக் கூடிய பல்வேறு சாதனங்களையும் கண்காட்சியாக வைத் திருந்த இன்னொரு பொருட்காட்சியையும் ஹாம்பர்க் நகரில் பார்த்தேன் நான். ஜன நாயக ஜெர்மனியில் மக்களின் வாழ்க்கைத் தரம் எந்த அளவுக்கு உயர்ந்துள்ளது என் பதைக் கணிப்பது எளிதாக இருந்தது. இதற்குப் பின்னால் அமெரிக்காவையும் பார்த்துவிட்டு வந்ததால் அமெரிக்க வாழ்க் கைத்தரத்துக்கு ஒரே ஒரு படி கீழேதான் மேற்கு ஜெர்மானியர் உள்ளனர் என்று துணிந்து கூறலாம் நான்.

இவை யெல்லாவற்றையும் விடக் கண்காட்சி யில் என்னை மிகவும் கவர்ந்த ஒரு விஷயம்

ஒரு டிரான்ஸிஸ்டர் ரேடியோ. அதுவும் தீயிலே வெந்துபோன ஒரு ரேடியோ! பள பளப்பான புதுப் புது ரேடியோ டெலி விஷன்களுக்கு இடையில் விகாரமான இந்த ரேடியோ என்ன செய்கிறது என்று ஆவல் குறுகுறுப்புடன் அருகே சென்று பார்த்தேன். டிரான்ஸிஸ்டருக்குப் பக்கத்தில் ஓர் அமெரிக்கர் எழுதிய கடிதமும் அதன் ஜெர்மன் மொழிபெயர்ப்பும் இருந்தன. கடிதம் ஒரு கதையைக் கூறிற்று.

டிரான்ஸிஸ்டர் ரேடியோவின் சொந்தக்காரரான அந்த அமெரிக்கர் பொழுது போக்குக்காக மீன் பிடிக்கப் போகும்போது படகில் அந்த டிரான்ஸிஸ்டரையும் எடுத்துச் சென்றார். தவறிப் போய் ரேடியோ நீரில் விழுந்து விட்டது. கொஞ்ச நேரத்துக்குப் பிறகு நீரில் மூழ்கி மூழ்கி ரேடியோவை மீட்டு வந்தார், அவர். அதன் பிறகும் அது பாடியது!

இதற்குச் சில தினங்களுக்குப் பிறகு அந்த அமெரிக்கரின் வீடு தீப்பிடித்துக் கொண்டது. சமயத்தில் நெருப்பணைக்கும் படையினர் வந்து தீயை அணைத்தனர். அவருக்குச் சேதமான பொருள்களுக்கு நஷ்டஈடு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி கொடுத்துவிட்டது.

சேதமான பொருள்களில் டிரான்ஸிஸ்டரும் ஒன்று. தீயில் வெந்து கருகிப் போயிருந்தது. தூக்கி எறிய இருந்தவர் சும்மா விசையைத் திருப்பினார். ரேடியோ பாடியது! அவருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. "இத்தனை அற்புதமான ரேடியோவைச் செய்த நீங்கள் வாழ்க! கூடியமட்டிலும் இதனைப் புதுப்பித்துத் தர முடியுமா?" என்று கேட்டுக் கடிதம் எழுதியிருந்தார் அந்த அமெரிக்கர்.

அவருக்குப் புதிய ரேடியோ ஒன்றை அனுப்பிவிட்டு, தீயில் வெந்து கருகிய இந்த ரேடியோவைத் தங்களிடமே வைத்துக் கொண்டார்கள் கம்பெனிக்காரர்கள்.

இந்தக் கதை, தொழில் துறையில் போட்டி மனப்பான்மை இருந்தால் தரமான பொருள்கள் உற்பத்தியாகும் என்ற உண்மையை மட்டுமின்றி ஜெர்மானியரின் தொழில் நுணுக்கத் திறனையும் எடுத்து இயம்புகிறது அல்லவா?

உலகின் வேறு எந்த நாட்டினரையும் விட வலலேசமும் திறமையிலோ அறிவாற்றலிலோ குறைந்து விடாத ஜெர்மானிய மக்களும் அவர்களது நாடும் இரண்டாகப் பிரிந்துதான் என்றென்றும் வாழ வேண்டுமா? அவர்கள் ஒன்றாக இணைய வழி வகையே கிடையாதா? இதற்குத் தடையாக நிற்பது என்ன?

லட்சிய நோக்கிலே பார்க்கும்போது அவர்கள் இணைந்து ஒரே நாட்டின் மக்களாக வாழ்ந்து, உயர வேண்டும் என்றுதான் ஜெர்மானியரும் சரி, மேற்கத்திய ஜனநாயக நாட்டவரும் சரி என்னுகின்றனர். ஆனால் யதார்த்த நோக்கிலே பார்க்கும்போது இந்த ஜன்மத்திலே ஜெர்மனி ஒன்றாக இணைந்து நாம் பார்க்கப் போவதில்லை என்பது புலனாகும். தடையாக நிற்பது என்ன என்றால் 'அரசியல்' என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லி விடலாம்.

ஜெர்மனியின் ஐக்கியத்தை விரும்பும் மேற்கு ஜெர்மனியும் மற்ற மேற்கத்திய நேச நாடுகளும் அந்த ஐக்கியம் மக்கட் சுதந்திரத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் என்று விரும்புகின்றனர். ருஷ்யாவோ ஜெர்மனி ஒன்றாக இணைந்தாலும் அந்நாடு முழுதும் கம்யூனிஸ சித்தாந்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதையே விரும்புகிறது. இடையில் உணர்ச்சி மிகுதியால் யுத்தம் மூண்டுவிடக் கூடாதே என்ற கவலை எல்லோருக்குமே இருக்கிறது. இரண்டு சாராருமே அடிப்படைக் கொள்கையை விட்டுக் கொடுக்கச் சித்தமாக இல்லை என்பது தெளிவு. இந்நிலையில் ஜெர்மனியின் ஐக்கியம் என்று பேசுவதோடும் எழுதுவதோடும் சரி. என்றாலும் பிளவுபட்ட ஜெர்மனி உள்ளவரையில் ஜெர்மானிய ஐக்கியத்துக்குப் பாடுபடுவதை நிறுத்தவும் கூடாது என்று மேற்கு ஜெர்மானிய அரசாங்கம் கருதுகிறது. இதற்காக அவர்கள் மேற்கொண்டுள்ள முயற்சிகள் எத்தனை எத்தனையோ. பலன்தான் பூஜ்யம்.

ஜெர்மானிய மக்கள் யுத்தத்தின் கொடுமைகளை நன்றாக உணர்ந்தவர்கள். போரின் பயங்கரத்தை உணர்த்துவதற்காகவே போல் மற்ற எல்லாக் கட்டடங்களையும் புதுப்பித்து விட்ட போதிலும் மேற்கு பெர்லின் நகரின் பிரதான சதுக்கத்தில் ஒரு மாதா கோயிலை மட்டும் இடிபாடடைந்த நிலையிலேயே விட்டு வைத்திருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலேயே மிக நவீன பாணியில் புத்தம் புதியதொரு தேவாலயத்தைக் கட்டியிருக்கிறார்கள்.

இரவு நேரத்தில் மின் விளக்குகள் ஏற்றப்பட்டதும் ஊதா நிறத்தில் புதிய கோயிலும் அருகேயே இடிபாடடைந்த மாதா கோயிலும் நிற்பது நம் இதயத்தில் இன்பமும் துன்பமும் அமைதியும் கிலேசமும் ஒன்று கலந்த விநோத உணர்வுகளை உண்டாக்குகின்றது.

ஜெர்மனியை விட்டுக் கிளம்புவதற்குமுன் நான் கேட்ட கடைசிக் கேள்வி: "ஜெர்மனியில் நாஸிஸம் மீண்டும் புத்துயிர் பெற்று வருகிறதா?"

இதற்குக் கிடைத்த ஆணித்தரமான பதில் : "கிடையவே கிடையாது; ஆனால் தேசிய உணர்வு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்பது உண்மையே. தரைமட்டமாகிவிட்ட ஜெர்மனி மீண்டும் புது வாழ்வு பெற பிரிட்டனும் அமெரிக்காவும் பிரான்சும் பெருமளவுக்கு உதவின என்பதை ஜெர்மானியர் உணர்ந்திருந்த போதிலும் இன்று அமெரிக்கருக்குத் தாங்கள் எந்த விதத்திலும் தாழ்ந்தவரல்லர்; பொருளாதார ரீதியில் அமெரிக்கா அளவுக்குத் தாமும் உயர முடியும் என்ற நம்பிக்கையும் நிச்சயமும் நாளுக்கு நாள் ஜெர்மானியரிடம் பெருகி வருகிறது. யுத்தத்துக்குப்பின் வாழ்ந்த தலைமுறையினர் குற்றமிழைத்த மனப்பான்மையுடன் குன்றிப் போயிருந்தனர். இன்றையத் தலைமுறை வேறு. முன்னோர்கள் செய்த தவறுகள் பற்றி இவர்களுக்கு அக்கறை இல்லை. இவர்கள் உலக அரங்கிலே ஜெர்மனி பெற்றுள்ள முக்கிய ஸ்தானம் பற்றி நினைத்துப் பெருமிதத்துடன் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றனர்."


கம்ப்யூட்டரின் சாதனைகள்

"எலெக்ட்ரானிக் கம்ப்யூட்டர் என்றதும் அது ஏதோ அமெரிக்காவிலிருந்து கருவிக்கப்பட்ட யந்திர சாதனம் என்று எண்ணிவிட வேண்டாம். இந்தியாவில் பம்பாயிலுள்ள தொழிற்சாலையில் இந்தியத் தொழிலாளிகளைக் கொண்டு தயாரிக்கப் பெறும் சாதனங்களே அவை. அமெரிக்கா மூலதனம் வழங்கியுள்ளது. இங்கே — பெரம்பூர் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையில் இயங்கும் ஐ.பி எம். (International Business Machine) 1401 இந்தியாவில் தயாரிக்கப்பட்டதுதான். அதை மாதம் ரூ. 50,000 வாடகைக்கு வாங்கி இங்கே இயக்கி வருகிறோம். இவ்வளவு பெருந் தொகை வாடகையா என்று பிரமிக்கிறீர்களா? அதைப்போல் ஐந்து மடங்கு கம்ப்யூட்டரால் லாபம் கிடைக்கிறது. அதாவது ஐந்து பங்கு தொகை மீதமாகிறது! வாடகை கொடுப்பதற்குப் பதில் அதனை விலைக்கு வாங்கிவிடலாமே என்று கேட்கத் தோன்றும். வாடகைக்கு வாங்குவதில் ஒரு பெரிய அனுகூலம் இருக்கிறது. இந்த ஐ.பி.எம். — 1401 இப்போது அமெரிக்காவில் பழைய மாடலாகி விட்டது. மேலும் புதிய வசதிகள் உள்ள யந்திரங்கள் இங்கு [தயாரிக்கப்படுகையில், இந்தக் கம்ப்யூட்டருக் குப்பதில் நவீன யந்திரத்தை வாடகைக்கு வாங்கிக் கொள்ளலாம். விலைக்கு வாங்கினோமானால், இது பழைய மாடல் ஆன பிறகும் இதையே உபயோகித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமல்லவா? விலைக்கு வாங்குவதிலும் வாடகை கொடுப்பதே நமக்கு ஆதாயம். கம்ப்யூட்டரினால் விளையும் நன்மைகளைக் கவனித்தால் நாம் கொடுக்கிற வாடகை ஒரு பொருட்டல்ல என்பது புலப்படும்'' எனக் கூறுகிறார் பெரம்பூர் இ. பெ. தொழிற்சாலையின் கம்ப்யூட்டர் அதிகாரி (System Analyst) திரு ஆர். நரசிம்மன்.

கம்ப்யூட்டரின் சாதனைகள் பற்றி அவர் விளக்குகிறார்:

இ. பெ. தொழிற்சாலையில் பணியாற்றும் 11,000 தொழிலாளிகள், அதிகாரிகள் ஆகியோருக்கு இந்த கம்ப்யூட்டர் இங்கு செயல்படத் தொடங்குவதற்கு முன்பு 5ம் தேதிதான் சம்பளம் கிடைத்து வந்தது. கம்ப்யூட்டர் இயங்க ஆரம்பித்ததும் பிரதி மாதமும் முதல் தேதியே அனைவருக்கும் சம்பளம் கிடைத்து விடுகிறது. வரவேற்கத் தக்கது தானே? 11,000 பேர்களுக்குச் சம்பளப் பட்டியல் தயாரிப்பது இலேசான காரியமா? சம்பளம், கிராக்கிப் படி முதலிய பல்வேறு அலவன்சுகள், ஆண்டுதோறும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் (பல்வேறு மாதங்களில், பல்வேறு தினங்களில்) கிடைக்கும் சம்பள உயர்வு இவைகளை யெல்லாம் கணக்கிட்டு அதிலிருந்து பிராவிடெண்ட் நிதி, வருமான வரி, கூட்டுறவுச் சங்கத்துக்குச் செலுத்த வேண்டிய தொகை இவைகளைக் கழித்து மீதியைக் கணக்கிடும் வேலைக்கு எத்தனை

பெரம்பூர் ரயில்வே பெட்டி கட்டும் தொழிற்சாலையில் இயங்கும் கம்ப்யூட்டரும் அதன்] அதிகாரி திரு நரசிம்மனும்.





'' துண்டு விழுந்துவிட்டதய்யா !''

'' அதான் தெரியுதே ! கொட்டை எழுத்தில் போட்டிருக்கானே !''

குமாஸ்தாக்கள் எவ்வளவு நாட்கள் வேலை செய்ய வேண்டியிருக்கும் என்று கணித்துப் பாருங்கள்! அப்படி உழைத்தும், கைத்தவறுதலாகப் பல பிழைகள் நேர்ந்துவிடுவதுண்டு. மனிதர்கள் கணக்கில் தவறு செய்வது சகஜந்தானே? ஆனால், இதே வேலையை கம்ப்யூட்டர்கள் செய்யும்போது தவறே ஏற்படுவதில்லை! யார் யாருக்கு எந்த மாதம், எந்தத் தேதி சம்பள உயர்வு கிடைக்க வேண்டும் என்பன போன்ற விவரங்களைப் பிழையின்றித் தருகின்றது கம்ப்யூட்டர். இவ்வளவு பெருக்கும் சம்பளப் பட்டியல் தயாரிக்கக் கம்ப்யூட்டருக்குத் தேவைப்படும் மொத்த அவகாசம் 40 மணி நேரம்தான்! இதில், கம்ப்யூட்டரின் எலக்ட்ரானிக் மூளை இயங்கும் நேரம் 29 மணிதான்! மற்ற 11 மணி நேரத்தில் யந்திரத்துக்குத் தேவைப்படும் விவரங்களை அளிப்பது, கார்டுகளைப் பொருத்துதல், மாக்னடிக் டேப்புகளைப் பொருத்துவது முதலிய சில்லறை வேலைகள் கவனிக்கப்படுகின்றன.

சம்பளப் பட்டியல் தயாரிப்பது மட்டும் தான் என்பதில்லை. தொழிற்சாலை நிர்வாகத்துக்குத் தேவையான பல புள்ளி விவரங்களை விரைவில் இந்த யந்திரம் அளிக்கிறது. புதிய திட்டம் ஒன்று உருவாக்கும்போது இதே போன்ற ஒரு திட்டத்துக்கு முன்னர் எவ்வளவு செலவாயிற்று, எவ்வளவு பேர் எவ்வளவு மணி நேரம் உழைத்தார்கள், என்ன என்ன சாமான்கள்—உறுப்புக்கள் எந்த அளவில் தேவைப்பட்டன என்ற விவரங்களையெல்லாம் நினைத்த மாத்திரத்தில் கம்ப்யூட்டரின் 'டேப்'பிலிருந்து பெற முடியும். பழைய காகிதப் பைல்களைத் தேடி இந்தத் தகவல்களைச் சேகரிப்பதென்றால் எவ்வளவு காலதாமதமாகும்?

இந்த 'மாக்னடிக் டேப்' இருக்கிறதே—அதில் பதிவு செய்து வைக்கக் கூடிய தகவல்கள் வியப்பூட்டுபவை. 'டேப்'பின் அகலம் சுமார் அரை அங்குலம். ஒரு டேப் சுருள் 2400 அடி நீளம். இதில் 13 மில்லியன் எண்கள் அல்லது சங்கேதக் குறிகளைப் பதிவு செய்து பத்து ஆண்டு காலத்துக்கு அப்படியே வைத்திருக்கலாம். எப்போது வேண்டுமானாலும் அதிலுள்ள தகவல்களை நாம் யந்திர மூளையின் உதவியால் திரும்பப் பெறலாம். இதற்குக் காகிதக் கட்டுக்களை நம்புவதாயிருந்தால், அவ்வளவுக்கு எத்தனை இடம் தேவைப்படும்? காகிதங்கள் செல்லரித்துப் போகாமல் காப்பாற்ற வேண்டும். அப்படியே பாதுகாத்தாலும் எழுத்துக்கள் மங்கிவிடும். காகிதமும் மக்கிப் போய்விடும். 'டேப்'புகளைக் காப்பாற்றுவதில் இது போன்ற சிரமங்கள் ஏதுமில்லை. எந்த விஷயத்தையும் நாம் சிரமப்பட்டு நினைவில் தேக்கி வைத்துக் கொள்ள வேண்டியதில்லை. அதை இந்த யந்திர மூளை பிழையின்றித் திரும்பச் செய்கிறது. இந்த யந்திரத்தின் பல்வேறு உறுப்புக்களும் இயங்கும் வேகம்—தகவல்களைப் பதிவு செய்வது, திரும்பத் தருவது இவற்றின் வேகம் நமது கற்பனைக்கும் அப்பாற்பட்டது...''

''இதுவரையில் நீங்கள் கூறிய புள்ளி விவரங்களே போதும் — இந்தக் கம்ப்யூட்டரின் திறமையையும், இயங்கும் வேகத்தையும் புரிந்து கொள்ள. ஆனால் இவ்வளவு அபாரசக்தி படைத்த இந்த கம்ப்யூட்டர் யந்திரத்துக்கு ஏன் இவ்வளவு எதிர்ப்பு? இதைப் புகுத்த வேண்டாம் என்ற கிளர்ச்சி ஏன்?''

''எந்தப் புதிய கண்டுபிடிப்புக்கும் எதிர்ப்பு இருந்தே வந்திருக்கிறது. நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு அது உபயோகத்துக்கு வந்த புதிதில், பிரிட்டனில் விவசாயிகள் எல்லாம் இனிமேல் குதிரைகள் இனமே அழிந்துவிடும் என்று அஞ்சிக் கூக்குரலிட்டனர். குதிரைகள் இனம் இன்று அழிந்தா போய்விட்டது?'' என்று கேட்கிறார் திரு நரசிம்மன்.

அமெரிக்காவில் ரயில்வேயிலும் பல்வேறு நிறுவனங்களிலும் எலக்ட்ரானிக் கம்ப்யூட்டர் இயந்திரங்களை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை நேரில் கண்டு வந்தவர் திரு நரசிம்மன். இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி எவ்வாறு பலன் அடையலாம் என்பதில் இவர் அமெரிக்காவில் பயிற்சி பெற்றுள்ளார். 60°(டிகிரி) உஷ்ணமுள்ள குளிர்பதன அறையில் பொருத்தப்பட்டுள்ள கம்ப்யூட்டரின் செயல் திறமையை விளக்கும்போது அவருக்கு அலாதி உற்சாகம். 'இ. பெ. தொழிற்சாலைக்கு அது பெரிதும் பயன்படுகிறது' என்று கூறுகிறார்.

பேட்டி: **பாணன்**

யந்திரமயமாக்கும் திட்டத்தின் தீமைகளை அடுத்த இதழில் விளக்குகிறார் திரு என். எம். சுந்தரம் (எல். ஐ. சி. ஊழியர் சங்கச் செயலாளர்.)

பொன்னிவனத்துப் பூங்குயில்

ஒன்பதாம் அத்தியாயம்

"அறம் வளர்த்த அன்னை"

கொத்தமங்கலம் சுப்பு

காவிரிக் கரையில் பீதாம்பரத்தை விரித்துப் படுத்துக்கொண்டார் ஏகோஜி. அந்தச் சமயத்தில் தூரத்திலிருந்த தேவாலயத்திலிருந்து,

"கற்றுணைப் பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே"

என்ற தேவாரப் பண் அந்தக் காற்றிலே மிதந்து வந்தது.

காற்று கண்ணை மயக்கியது. ஓர் அரிய கனவு கண்டார்.

'கணீர் கணீர்' என்று மணிகள் முழங்கின. குபீரென்று சாம்பிராணி மணம் கமழ்ந்தது. அவருக்கு எதிரிலே கையிலே வீரவாளைப் பிடித்துக் கொண்டு துளஜா பவானி பிரசன்னமானாள். "மாதா! பவானி!" என்று ஏகோஜி வணங்கினார். அம்பிகை வினவினாள்:

"ஏகோஜி உன்னுடைய அண்ணன் யார்?"

"சிவாஜி மன்னர்."

"சிவாஜிக்கு எதனால் புகழ்?"

"இந்து தர்மத்தைக் காப்பதற்காகவும், இந்நாட்டின் கலைகளைக் காப்பதற்காகவும், இந்நாட்டின் பழம் பெரும் பண்பைக் காப்பதற்காகவும் போரிட்டதனால்...."

"நீ இப்போது எதற்கு இங்கே வந்திருக்கிறாய்?"

"பீஜப்பூர் சுல்தானின் கட்டளையை நிறைவேற்ற வந்திருக்கிறேன்."

"காவிரி நாட்டின் பாதையை நீ அவருக்குக் காட்ட வந்திருக்கிறாயா? ஆலயங்களை அழித்து, அருமறைகளைப் பழித்து, சிலைகளைப் பெயர்த்து, அவர்களில் சிலர் உனது நாட்டில் செய்த கொடுமை உனக்குத் தெரியுமல்லவா?"

ஏகோஜி பிரமித்து நின்றார்.

"தெரியும் அம்பிகையே! ஆனால் நான் அவர்களுடைய தளபதி."

"நீ துரோகம் செய்ய வேண்டியதில்லை. உங்கள் அரசருக்குக் கொடுக்க



வேண்டிய கப்பத்தை நீ அனுப்பிவிடு. அவர்கள் பிரதிநிதியாக இருந்துகொண்டு நீயே ஆட்சி செய்து வா! கலைகள் அழிய வழி வகுக்காதே!'' என்ற உத்தரவு கிடைத்தது.

''மாதா! நீ இதைப் பீஜப்பூரிலேயே சொல்லியிருக்கலாமே?'' என்று கேட்டார் ஏகோஜி. அப்படி அவர் கேட்டபோது துளஜா பவானி தர்மசம்வர்த்தனி ஆக மாறி எதிரே நின்றாள்.


''நான்தான் ஐயாறில் கோயில்கொண்ட அறம் வளர்த்த நாயகி; அறத்தை உன் நெஞ்சில் வளர்ப்பதற்காகவே வந்தேன்'' என்று கூறி மறைந்தாள் அம்பிகை.


ஏகோஜி பரவசத்தில் நின்றார்.

''ஆண் குழந்தை! ஆண் குழந்தை!'' என்று கூறிக்கொண்டே தூதுவர்கள் வந்தார்கள்.

உடனே அவர்கள் கழுத்தில் ஆளுக்கொரு முத்துமாலையைப் போட்டார். இது மழபாடியுள் பிறந்த மாணிக்கம் என்று அவருக்குத் தோன்றியது. இந்தத் தோற்றம் வந்த









அடுத்த கணத்தில் இரண்டு குதிரைகள் வேகமாக வருவதைப் பார்த்தார். வாளை உருவிக் கொண்டார். ''யார்?'' என்று திரும்பினார்.

தஞ்சாவூர் மந்திரியாக ஏகோஜியால் நியமிக்கப்பட்ட நாகப்பட்டினத்துச் செட்டியார்தான் வந்தவர்.

''அரண்மனையிலே கலகம். தஞ்சை அரண்மனையில் ஒரு பகுதி தீக்கிரையாகியது. பத்துப் பதினைந்து பேர்கள் இறந்து விட்டனர்!'' என்றார் செட்டியார் பதற்றத்துடன்.

''யார் கலகம்? யார் படை எடுத்தார்கள்?''

''படை எடுப்பு அல்ல. உட்பகை. ராயசம்வெங்கண்ணாவுக்கும் எனக்கும்.''

''உங்களுக்குள் ஏன் பகை வரவேண்டும்......?''

''மளிகைக் கடைக்காரரை மந்திரி ஆக்குவதா என்று என் பதவிக்குப் போட்டியிடுகிறார் வெங்கண்ணா. இப்போது அவர் திருச்சிக்குச் சென்றிருக்கிறார், அங்குள்ள நாயக்க அரசரிடம் சொல்லிப் படைகளைக் கொண்டு வருவதற்காக.''

ஏகோஜி அறம் வளர்த்த நாயகியின் உத்தரவை எண்ணினார். 'இவர்கள் தங்களுக்குள்ளேயே அடித்துக் கொள்கிறார்கள். பதவி ஆசை இவர்களை விடவில்லை. இந்தப் பதவி ஆசையால் இவர்கள் தர்மத்தை இழந்து விட்டார்கள். நாட்டைப் பலி கொடுத்து விடுவார்கள். இங்குள்ள கலைகள் அழிந்து விடும்' என்ற எண்ணம் வரவே ஏகோஜி அவசரமாக வந்தார். தம் பிள்ளையைப் பார்த்தார். அந்த இரண்டாவது பிள்ளைக்கு 'சரபோஜி' என்ற நாமத்தைச் சூட்டச் சொல்லி உத்தரவிட்டார். உடனே தஞ்சை அரசைத் தம் தலையிலே சூட்டிக் கொண்டார். அரசைச் சூட்டிக் கொள்ளவில்லை; பொறுப்பைச் சூட்டிக் கொண்டார்.

''புறப்படுங்கள், திருவாரூருக்கு!'' என்று உத்தரவிட்டார் ஏகோஜி. திருவாரூர் தியாகராஜனின் சந்நிதிக்கு வந்து சேர்ந்தார். இறைவனை வணங்கினார். ஆரூர் விடங்கப் பெருமான் சந்நிதியில், ''இன்று முதல் நான் சோழப் பேரரசின் மரபைக் காப்பேன். அவர்கள் செய்த தருமங்களைக் காப்பேன். அவர்கள் செய்த கலைகளைக் காப்பேன். இதற்குக் குலதெய்வமாக நீங்கள் இருந்து காக்க வேண்டும்'' என்று இறைவனிடம் வேண்டிக் கொண்டு, வடக்கே எங்கோ பிறந்த ஏகோஜி மன்னர் தமிழ் நாட்டிலே உள்ள திரு ஆரூர் தியாகேசனைத் தம்முடைய குல தெய்வமாக அன்றைக்கே கொண்டார்.

இதுதான் அயலாராகிய மராட்டிய அரசர்கள் தஞ்சையை ஆள வந்த வரலாறு. கி.பி. 1675ல் சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன், நள வருஷம் சித்திரை மாதத்தில் நான்காவது ஏகோஜி தந்தையின் அரசு கட்டிலேறினார்.

அவருக்கு ஷாஜி, சரபோஜி, துக்கோஜி என்று மூன்று புதல்வர்கள். அதில் மூன்றுவதாகிய துக்கோஜி எனும் துளசி மகாராஜாவின் புதல்வரே நமது பிரதாபசிம்மர்.



"எண்ணம் எழுதுகோலாக மாறினல் எழு கடலும் வானமும் என் ஒருநாள் எழுத்துக்கே பற்ருது'' என்ருள் ஒரு காதலி.

சென்ற இரண்டு அத்தியாயங்களில் நாம் கூறியவை எல்லாம் இரண்டே கணங்களில் எண்ணப்பட்டவைதான். இந்த இரண்டு கணங்களுக்குள் மூர்ச்சையுற்றுக் கிடந்த முனிவரின் கையைப் பிடித்து நாடியைப் பரிசோதித்தார் பிரதாப சிம்மர். அவருக்கு மருத்துவக் கலையும் தந்தை வழி வந்த செல்வம். கையைப் பிடித்துப் பார்த்தவுடனே நாடியில் தளர்வு இல்லாததைக் கண்டு. 'முனிவர் ஏதோ உணர்ச்சிவசத்தில்தான் ஆழ்ந்திருக்கிருர்' என்பதை உணர்ந்தார் பிரதாப சிம்மர். விசிறியை எடுத்து முனிவருக்குத் தம் கரத்தால் விசிற ஆரம்பித்தார். முனிவரின் கண்கள் விழித்தன. அவர் முகத்திலும் ஒரு புன்முறுவல் தோன்றியது. பிரதாப சிம்மர் செய்யும் உபசாரத்தைக் கண்டு அந்தப் புன்முறுவல் உடனே ஆத்திரமாக மாறியது. குபீரென்று எழுந்தார். ''இளவரசே! தாங்கள் செய்யக்கூடிய பணியா இது! கேவலம் ஓர் அமைச்சனுக்கு இதைச் செய்கிறீர்களே?'' என்று ஆத்திரத்தோடு விசிறியைப் பிடுங்கினர். ஆனல் பிரதாப சிம்மர் ''ஸ்வாமி! அமைச்சரும் அரசின் குடிகளில் ஒருவர்தானே! 'மன்னன் அரியணையில் இருக்கப் பிறந்தவனல்ல. மக்களுக்கு உழைக்கப் பிறந்தவன்' என்று தாங்கள்தானே சொன்னீர்கள்?'' என்று பயபக்தியுடன் கூறினர். இதைக் கேட்ட முனிவர் தம்மையே மறந்தார். ஆனல் அவர்கள் இருவரும் தம்மை மறக்கலாம். உலகம் தன்னை மறந்திருக்குமா? 'கணகண' வென்று மணி ஒலித்தது. உடனே கனசியாம முனிவர் ''யாரோ அழைக்கிருர்கள்'' என்று சொல்லிவிட்டு அவசரமாக வெளியே வந்தார்.

அந்தப்புரத்தின் வாசலில் அவர் கண்ட காட்சி அவரைத் திடுக்கிட வைத்தது. அங்கே நாலைந்து ஆட்கள் நின்றிருந்தனர். அவர்களுக்கிடையே ஒருவன் பிணமாகக் கிடந்தான். அதற்குப் பக்கத்தில் சர்க்கரை நின்றுகொண்டிருந்தான். ''என்ன இது?'' என்று கேட்டார் முனிவர்.

சர்க்கரை, ''ஸ்வாமி! தாங்களும் இளவரசரும் வாத்திய மகாலுக்குச் சென்றவுடன் நான் சற்று நேரம் வெளியில் காத்திருந்தேன். எனக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. ஆயினும் என் மனம் திடீரென்று கோட்டைச் சுவருக்குள் மறைந்த அந்தப் பூசாரியைத் தேடிக்கொண்டே இருந்தது. அதனல் நான் மறுபடியும் கோட்டையைச் சுற்றி வர ஆரம்பித்தேன். கோட்டையில் ஒவ்வொரு செங்கல்லையும் கண்ணை விரித்துத் தேடிப் பார்த்துக் கொண்டே, செல்லும்போது சுவரில் சிறு பிளவு இருப்பதைப் பார்த்தேன். அது சுரங்க வாயிலாக இருக்குமோ என்று எண்ணி அதைத் திறப்பதற்கு என்னல் ஆன முயற்சிகளெல்லாம் செய்தேன். பிரயோசனப்படவில்லை. எனக்கு அதன் ரகசியம் தெரியவில்லை. 'சரி! இவ்வளவு தூரம் வந்தோம். வெளியே சென்று வருவோம்' என்று மெல்ல நடந்தேன். இராசகோபாலசாமி கோயிலின் வாசலுக்கு நான் செல்லும்போது அங்கு ஓர் ஆள் துப்பட்டியால் தலையில் முக்காடிட்டுக் கொண்டு ரகசியமாய்ச் செல்லுவதைக் கவனித்தேன். அவன் அருகில் சென்று பார்த்தேன். அவன் தான் இந்தப் பூசாரி. 'கோட்டைச் சுவரில் மறைந்தவன் கோயிலுக்குள் எப்படி வந்தான்?' என்பது எனக்குப் புரியவில்லை. கோட்டைச் சுவருக்கும் இராசகோபாலசாமி கோயிலுக்கும் சுரங்கப் பாதை இருக்குமோ என்ற ஐயத்தில் அவனையே பின் தொடர்ந்தேன். அவனும் என்னைப் பார்த்துவிட்டான். பார்த்துவிட்டு ஒன்றும் தெரியாதவன்போல் நடந்துகொண்டே சென்றுன். நானும் ஒன்றும் தெரியாதவனைப் போல் பின் தொடர்ந்தேன். வடவாற்றங்கரையை அடைந்தபோது அங்கு ஒருவன் புல்லாங்குழலை வைத்துக் கொண்டு அருமையாகக் கல்யாணி ராகத்தை வாசித்துக் கொண்டிருப்பதைக் கேட்டேன்.

''அவன் ஒரு சாதாரண ஆடு மேய்ப்போன். ஆடு மேய்ப்பவனின் புல்லாங்குழல் எனக்கு அன்றைய மதுராபுரியில் விளையாடிய கண்ணனையும், கோகுலத்தையும் நினைவுக்குக் கொண்டு வந்தது. 'இப்படி இசைக்கும் ஒருவர், ஆஸ்தானப் புலவளுக இல்லாமல் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கிருரே' என்று நான் வியந்து கொண்டிருக்கையில், நான் இசையை ரசித்துக்கொண்


இதோ: பாரிஸ் போல எழிலின் உறைவிடமான டால்க்
"ஒன் டச் ஆப் பாரிஸ்"
என்றுமே பாரிஸ் உங்கள் அருகில் இருந்ததில்லை! அதைத் தொட்டெடுத்து வருவதே போல் ஆன் பிரெஞ்ச் உங்களுக்கு அளிக்கிறது "ஒன் டச் ஆப் பாரிஸ்"—மேனியிலே பூசி மகிழ உன்னதமான ஒரு டால்க். பாரிஸ் போல் எழில் கூட்டி, உள்ளக் கிளர்ச்சியைத் தூண்டும் டால்க். நறுமணமோ ஆன் பிரெஞ்சுக்கே உரிய பிரெஞ்ச் சுகந்தம். இன்றே பூசி மகிழுங்கள் 'ஒன் டச் ஆப் பாரிஸ்' ✻ ✻
தவிர, கிடைப்பது: தனிப்பட்ட பிரெஞ்சு நறுமணம் கமழும் "லேடி லாவெண்டர்"...
Anne French
TALC
ONE TOUCH OF PARIS
சுகந்தம் போல் உங்கள் மேனி மீது உறவாடும் டால்க்
ஆன் பிரெஞ்சு டால்க்
ரெஜிஸ்டர்டு யூஸர்: ஜெப்ரி மானேர்ஸ் அண்டு கம்பெனி லிமிடெட்.
25-0-TM

டிருக்கிறேன் என்பதை உணர்ந்த பூசாரி ஆடு மேய்ப்பவனை நோக்கி ஓடினான். அவன் ஓடவே என் சந்தேகம் வலுப்பட்டது. 'இவனை விட்டுவிடக் கூடாது. எப்படியும் பிடித்து விட வேண்டும்' என்ற கருத்தில் நான் அவனைத் துரத்தினேன். பிடிக்கப் போகும் சமயத்தில் என் காலில் ஒரு கல் தடுக்கிவிட்டது.

"குழல் ஓசை அபஸ்வரமாகப் பிரிட்டுக்கொண்டு கேட்டது. அதே சமயத்தில் எனக்கு ஓர் அடி முன்னே சென்ற பூசாரி 'ஆ' என்று அலறிக் கீழே விழுந்தான். நான் ஓடிப்போய் அவனைத் தூக்கினேன். அடுத்த கணம் அவன் பிணமாகக் கிடப்பதைக் கண்டேன். ஆடு மேய்ப்பவன் புல்லாங்குழலை நிறுத்திவிட்டுச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் ஏதோ உட்பொருள் இருந்தது.

"'என்ன சிரிக்கிறாய்? வந்து இவரைத் தூக்கி உதவி செய்' என்று கூறினேன் நான்.

'அது என் வேலையல்ல' என்றான் அவன்.

"மறு கணம் எங்கோ புதருக்குள் மறைந்து சென்று விட்டான். நான் பக்கத்திலிருந்தவர்களைக் கூப்பிட்டேன். எல்லோரும் ஓடி வந்தார்கள். அவனைத் தூக்கிக் கொண்டு வந்து இங்கே போட்டு விட்டு உங்களை அழைப்பதற்காக நானே மணியை அடிக்கச் சொன்னேன்" என்று நடந்ததை விவரித்தான் சர்க்கரை.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த பிரதாப சிம்மர் ஆச்சரியத்துடன் நின்றார். ஆனால் முனிவரோ சிறிது நேரம் யோசித்தார். "சர்க்கரை! நீங்கள் சொல்லும் கதைக்கு யாரேனும் சாட்சி உண்டா?" என்று கேட்டார்.

"இது கதையல்ல ஸ்வாமி! என் கண் முன் நடந்தது."

"நடந்திருக்கலாம்; நடவாமலும் இருந்திருக்கலாம். இதற்கு யாரேனும் சாட்சிகள் உண்டா என்றுதான் கேட்கிறேன்" என்று கேட்டார் முனிவர்.

"நான்தான் சாட்சி. அவனைத் துரத்தியதற்கும் நான்தான் சாட்சி. அவன் ராஜகோபாலசாமி கோயிலிலிருந்து வெளியே வந்ததற்கும் நான்தான் சாட்சி. அவன் திடீரென்று கீழே விழுந்ததற்கும் நான்தான் சாட்சி."

முனிவர் கடகடவென்று சிரித்தார். அவருடைய கைகள் இரண்டும் ஓங்கி ஒரு தட்டுத் தட்டின. அருகிலிருந்த நான்கு சிப்பாய்கள் ஓடி வந்தனர்.

"இவரைப் பிடித்துக் காவலில் வையுங்கள்" என்றார் முனிவர்.

பிரதாப சிம்மரின் இள மீசை துடித்தது. கை உடைவாளின் மேல்

காய்ச்சல் கணக்கு

ஒரே சமயத்தில் முப்பது நோயாளிகளுடைய ஜுரத்தின் அளவை நர்ஸுக்குச் சுட்டிக் காட்டி விடக்கூடிய கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் ருஷ்யாவிலே. தேவையானால் ஜுர வேகத்தை—ஏற்ற இறக்கத்தை வரைபடமாகவும் தந்துவிடும் இந்தக் கருவி.

— 'ஸ்புட்னி'கில் படித்து எழுதியவர்:
வி. ந. ஸ்ரீதர்

போயிற்று. ஆனால் முனிவர் பார்த்த பார்வையிலே அவரும் அடங்கும்படி ஆயிற்று.

"என்னையா? ஏன்?" என்று திடுக்கிட்டு அலறினான் சர்க்கரை.

"குடிமகன் ஒருவர் மீது ஐயம் கொண்டு, கூடவே சென்று அவரைக் கொலை செய்ததற்காக" என்றார் முனிவர்.

"ஸ்வாமி! நான் புலவரின் மகன். ஒரு குற்றமும் செய்யவில்லை."

"நீர் புலவரின் மகனாக இருக்கலாம். ஆனால் நான் நீதியின் காவலன். வீரர்களே! இவரைக் காவலில் வைத்து, விசாரணைக்கு என்முன் அழைத்து வாருங்கள். இந்தப் பிணத்தைக் கொண்டு போய் ஜாக்கிரதையாக அரண்மனை மருத்துவ மகாலில் படுக்க வையுங்கள்" என்று சொல்லிவிட்டு, அவர் விரைந்து உள்ளே சென்றார். மாறுகண் சிப்பாய் தலைமையில் நான்கு வீரர்கள் விரைந்து சென்று சர்க்கரையைக் கைது செய்தார்கள். சர்க்கரை பிரதாப சிம்மரைப் பார்த்தான். பிரதாப சிம்மரோ தரையைப் பார்த்துக்கொண்டே முனிவரைப் பின் தொடர்ந்து உள்ளே சென்றார்.

ஃ ஃ ஃ

மதிப்புடையவர்களுக்கு முன்னே மனச்சாட்சி கூட அடங்கி விடுகிறது. தன் சிற்றன்னையினால் இழுத்துச் செல்லப்பட்ட குயிலி அடங்கி நடந்தாள். அவளுடைய துடுக்கு எங்கோ மறைந்து விட்டது. வெடித்த பேச்சு மௌனமாகி விட்டது. ஆடிக்கொண்டே நடக்கும் அவள் சிற்றன்னையுடன் தலையைக் குனிந்து கொண்டே நடந்தாள். ஆனால் தலை குனியலாம். துடுக்கு இல்லாமலிருக்கலாம். வெடித்த பேச்சு அடங்கி விடலாம். மனம் அடங்குமா? அவள் மனத்தில் ஏதேதோ யோசனைகள் தோன்ற ஆரம்பித்தன. 'சே! ஏனடா நாம் பெண்ணாய்ப் பிறந்தோம்? பெண்

ளுகத்தான் படைத்தான் இறைவன்! பிறிதோர் இடத்தில் படைத்திருக்கக் கூடாதா? உலகத்தார் எல்லோரும் வெறுக்கின்ற ஒரு குலத்தில், ஏன் நம்மைப் படைத்தான்?

''இப்போது வீட்டுக்குச் செல்கிறோம். அங்கு யாரை அழைத்து வைத்துக் கொண்டு என் மாமன் என் வருகையை எதிர்பார்த்திருப்பானோ? சே! மாமனு அது? வெட்கமில்லேயே! நமக்குக் கிடைத்த மாமன் நாட்டுக்கே மாமனுக விளங்குகிறுன்' என்றெல்லாம் படிக்காத அந்த உள்ளம், பறந்து திரிகின்ற அந்த உள்ளம் எண்ணியது. ''வீட்டுக்குச் சென்ருல் அங்கே மாமன் காத்திருப்பான். 'எங்கு சென்ருய்?' என்று அடிப்பான். அடித்தாலும் பாதகமில்லே. வீதியிலே நின்று கொண்டு திட்டுவான். இதைக் கேட்டுப் பஞ்சாயத்து செய்யப் பத்துப் பேர்கள் வருவார்கள். நம் தெருவில் இருப்பவர்கள் எல்லோரும் நம் இனத்தவர்கள். சே! இதற்கென்றே ஒரு தெருவையும் அமைத்து விட்டார்கள். இந்தச் சமூகத்தை என்ன செய்தால்தான் என்ன?'' என்று எண்ணி நகைத்தாள்.

அவள் கற்பனே தொடர்ந்தது. ''ராஜாங்கத்திலும்கூட நம்மைச் சீதனம் கொடுக்கிருங்க. பெண்ணேக் கலியாணம் பண்ணிக் கொடுத்தால் நானூறு பசுக்களேயும் நம்மவரில் நாற்பதுபேரையும் சீதனமாகக் கொடுக்கிருங்க. இந்தத் தஞ்சாவூரைப் பார்த்தால் ரத்னகிரி ராஜம்மாள், சதாரா சண்பகம், பட்டிணம் பாலாமணி, காக்கினடா கோகிலவள்ளி, நெல்லூர் ராமபத்ரம்மாள் என்று எத்தனே ஊர்க் கலேச் செல்விகள் இங்கே இருக்கிருர்கள்! இத்தனே பேர்களேயும் இங்கே குடியேற்றி விட்டு இந்தக் குலத்தைப் பற்றிக் கேவலமாகப் பேசறது தான் எனக்குப் பிடிக்கவில்லே! வீட்டுக்குப் போனுல் மாமன் காத்திருப்பான். 'ஏன் என்னேடு கூட வந்து துத்தி ஊதக் கூடாது?' என்று கேட்பான். எங்கேனும் சின்ன மேளம் நடந்தால் அங்கு போய் நான் ஒத்து ஊதவேண்டுமாம். ஒத்து ஊதவா நான் பிறந்தேன்? என் குரல் போல் ஒருத்திக்காவது இனிய குரல் இருக்கா? இவர்களுக்குப் பின்னுல் போய் நின்றுகொண்டு ஒத்து ஊதுவது என் தொழிலா? நல்ல வேலே! கடவுள் என்னே அழகாகப் படைக்கவில்லே. கறுப்பாக வேறு படைத்து விட்டான். போதாததற்குக் கையில் தழும்பு வேறு! என் முகத்தையும், என் தலேயில் தொங்கும் குழலேயும் எவன் விரும்பப் போறுன்? ஐயோ! அழகா இருந்தா கொத்திட்டுப் போயிடுவானே! சாமி காப்பாத்தினுர்'' என்று சிரித்துக் கொண்டாள் குயிலி.

மெல்லச் சிற்றன்னேயிடமிருந்து தப்பி விடவேண்டும் என்ற எண்ணம் வந்தது. எப்படித் தப்பலாம்? இலேசில் விடக் கூடியவளா அவள்? இப்படி எண்ணும் போதே மூளே பரபரவென்று வேலே செய்தது. மிட்டாய்க் கடைக்காரன் கொடுத்த மீதிக் காசு அவள் கவனத்துக்கு வந்தது. இதைப் பார்த்தால் சிற்றன்னே பிடுங்கிக் கொண்டு விடுவாள். என்ன செய்யலாம்? என்று யோசித்தாள். சிற்றன்னேக்குத் தெரியாமல் ஒரு வேடிக்கை செய்ய ஆரம்பித்தாள். மெல்ல அந்தப் பையிலிருந்த ஒரு நாணயத்தைச் சத்தமின்றிக் கீழே போட்டாள். சற்றுத் தூரம் நடந்த பிறகு இன்னெரு நாணயத்தைப் புல் மீது போட்டாள். இன்னும் சற்றுத் தூரம் சென்றவுடனே மற்றெரு நாணயத்தை ஒரு கல் மீது எறிந்தாள். அது கணீர் என்ற சத்தத்துடன் விழுந்தது. சிற்றன்னே குனிந்தபடி ''ஏது, காசு சத்தம் கேட்குது?'' என்ருள்.

''இன்னிக்குக் காசு மழை பெய்யுமாம் சின்னம்மா! பஞ்சாங்கத்திலே போட்டிருக்குது'' என்ருள் குயிலி. சிற்றன்னே ஆகாயத்தையே பார்த்தாள். ''இதோ கிடக்குதம்மா'' என்று ஓடி எடுத்தாள் குயிலி. 'இங்கே கொண்டா' என்று கையிலிருந்து பறித்தாள் அன்னே.

''நான்தானே கண்டெடுத்தேன்?'' என்ருள் குயிலி கோபமாக. இதற்குச் சிற்றன்னே பதில் சொல்லவில்லே. தலேயில்தான் குட்டினுள். குயிலி முகத்தைக் கோணிக் கொண்டு காசைக் கொடுத்து விட்டு ''அதோ பாருங்க இன்னும் ஒரு காசு'' என்ருள். ஓடிப்போய் அதை எடுத்துச் சிற்றன்னேயிடம் எறிந்தாள். சிற்றன்னே அதைப் பொறுக்கிக் கொண்டாள். ''அதோ ஒன்று கிடக்கிறது, அதையும் எடு'' என்ருள் அவள். மறுபடியும் குயிலி அவளே விட்டு விலகிப் போய் அதையும் எடுத்து எறிந்தாள். இன்னும் சற்று விலகிப் போனுள். ''அதோ ஏதோ பளபளவென்று தெரிகிறது'' என்று சொல்லிக் கொண்டே சிற்றன்னேயை விட்டு நெடுந்தூரம் சென்று, கீழேகிடந்த ஒரு கல்லே எடுத்துச் சிற்றன்னேயின் தலேக்குக் குறி பார்த்து எறிந்தாள். சிற்றன்னே நல்லவேளேயாகக் குனிந்து கொண்டாள். உடனே இனி இங்கிருந்தால் ஆபத்து என்று எண்ணிக் குயிலி ஓடினுள். ஓடும்போது மடேர் என்று ஒரு கனத்த கல்மீது மோதிக் கொண்டாள். ''ஐயோ!'' என்று அலறிக் குயிலி விழித்துப் பார்த்தாள். அது கல் அல்ல; மாமன்! **(தொடரும்)**




9
ஓநாய்க் கோட்டை
கதை: வாண்டுமாமா
அபாயங்களிலிருந்து விலகி வந்ததும் நண்பர்கள் வழி நெடுகப் பல விஷயங்களைப் பரிமாறிக் கொண்டார்கள். கந்தனிடம் ஓநாய் மனிதர்களைப் பற்றிக் கேட்டான் ஆனந்தன்.
அந்தக் கொடியவர்களிடம் என் அழகு மனைவி சிறைப்பட்டிருக்கிறாள் கந்தா.
ஓநாய் மனிதர்களிடமா? தங்களிடம் சிறைப்பட்டவர்களைக் குரூரமாக்கி மகிழும் குணம் படைத்தவர்களல்லவா அவர்கள்!
அந்தக் கொலைபாதகர்களின் இருப்பிடத்தை அடைவது அத்தனை சுலபமல்ல. உறுமி ஓலமிட்டுக் கொல்லும் சுழல் காற்றுச் சமவெளியைக் கடந்து நச்சுப் பொய்கைகளையும்...
...நாண்டிறுல் அவர்கள் இருப்பிடம்.
ஆனந்தா, அதோ, அதோ! அந்தச் சூறாவளிக் காற்று, புழுதியை எப்படி உருவாக்குகிறது பார். அதன் பயங்கர ஓசையைக் கேட்டாயா? இந்த உறுமும் சுழல் காற்றுக்குப் பலியானவர் பலர். இதன் வலிமையோ அபாரம்.
கண்ணைப் பறிக்கும் மின்னல் ஒளி, காது செவிடுபட வைக்கும் இடியோசை, மூச்சுத் திணறவைக்கும் அனல் காற்றின் வேகம். நம்மை நோக்கிச் சுழன்று வருகிறது பார். துர்மரணமடைந்தோரின் ஆவிகள் தான் இப்படி ஓலமிடுவதாகக் கூறுகிறார்கள்.
குதிரைகள் முன்னேற மறுக்கின்றன.
எப்படியும் இந்தப் பாழ்வெளியைக் கடந்தேயாக வேண்டும், கந்தா!
எதையுமே என்னால் காணமுடியவில்லை. அப்படியொரு ஒளி. அனல் காற்றின் வெப்பம், மூச்சு முட்ட வைக்கிறது.
சுழல்காற்றின் மையப் பகுதியைக் கடந்துவிட்டோம் கந்தா. இனி அபாயமில்லை என்று எண்ணுகிறேன்


கந்தா, இது ஆவிகளின் செயலில்லை. இதோ பார். பூமியின் வெடிப்பிலிருந்து பீறிட்டுக் கொண்டு எழும் ஒருவகைக் காற்றுத்தான் இது. பூமியின் நடுமையம் இன்னும் அக்கினிக் குழம்பாகத்தான் இருக்கிறதாம். அதிலிருந்து கிளம்பும் வெப்பக் காற்றுத்தான் இந்தச் சூறா வளிச் சுழல்.
இருக்கலாம். ஆனால் நம் உடலை இந்தத் தணல் காற்று கருக்கிவிடுமுன் நாம் இதன் பிடியிலிருந்து விடுபட வேண்டும்.... குதிரையை விரட்டும்.
சூழல்காற்றின் பிடியிலிருந்து தப்பிவந்தவர்களை மறுபக்கத்துக் காட்சி திகைக்க வைக்கிறது.
கருகித் தீய்ந்து பட்டுப் பாழடைந்த பிரதேசம். பார்க்கவே அச்சமாக இருக்கிறது
இதை அடுத்துத்தான் அந்த நச்சுப் பொய்கை. சதுப்பு நிலக் காட்டின் நடுவே உள்ளது.
நச்சுப் பொய்கைக் கரையில் குதிரைகளைத் தனியே அவிழ்த்துத் துரத்தி விட்டுப் பொய்கையில் இறங்கினார்கள் இருவரும். அதே சமயம் சதுப்பு நில அரக்கன் என்று கூறப்படும் பயங்கரப் பாம்புகள் நீரிலிருந்து சீறிக் கொண்டு கிளம்பின.
ஆயுதமின்றி இதில் இறங்கியது நாம் செய்த மிகப் பெரிய தவறு.
கந்தா! இத்தனை பெரிய கோரமான பாம்புகளும் உலகில் இருக்கின்றனவா?
தொடரும்..

மரக் கலப்பைகட்டி உழுத இடத்திலே டிராக்டர்

ஆம். கூடவே வேறு பல கருவிகள்-உயரிய உரங்கள், விதைகள். உழவருக்கு இன்று இவையனைத்தும் வேண்டும்; வேளாண்மையை நவீன மயமாக்கி, பொருளாதாரத்தின் பிற துறைகளுக்கு ஈடாக முன்னேற வைப்பதற்காக அவை வேண்டும்.



கிளைபரவியிருக்கும் அலுவலகங்கள் மூலம் ஸ்டேட் பாங்க்...விவசாய வளர்ச்சி, நில அபிவிருத்தி, நீர்ப் பாசன, எந்திர சாதன வசதிகளை வழங்கல் ஆகியவற்றுக்கு நிதி உதவியளித்து வருகிறது. தவிர, தோட்டக்கலை, விதைப் பண்ணைகள் கால்நடைப் பராமரிப்பு, பால் பண்ணை, கோழிப் பண்ணை, மீன் பண்ணை, தோட்டப் பண்ணைகள் ஆகியவற்றுக்கும் நிதி வழங்கி வருகிறது ஸ்டேட் பாங்க்.

சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்

S. 349TM



அல்டாப் அப்பாசாமி

இரும்பன்

"நாடகக் கலை மேம்படக் கொஞ்ச நாட்களாகக் குருகுல வாசம் செய்கிறேன். இந்த மீல்ஸ் காரியர் குருநாதர் வீட்டுக்குத்தானடா போகிறது!"

"என்ன, குருகுல வாசமா? யாரிடம்?"

"முத்தமிழ் மேதை நாடக நவரசம் நல்லையாவைக் கேள்விப் பட்டிருக்கிறாயா?"

"நல்லாக் கேட்டியே! அந்த மூன்று பெண்டாட்டிக் காரனிடமா? ஏதாவது நடிப்பு வந்திருக்கோ?"

"அதென்ன, அப்படிக் கேட்டுட்டே? நல்லையாவைப் போல நாடகக் கலைக்குச் சேவை பண்றவங்க இந்த உலகத்திலேயே கிடையாதுடா. அவருக்கு வாழ்வே நடிப்புடா, நடிப்பே வாழ்வடா. இப்படி நடிப்பையும் வாழ்வையும் ஒன்னுக்கிக் கொண்ட அவர் மூணு மனைவிகளைக் கட்டிக்கிட்டதே கலைக்காகத்தான். 'அவங்கதானப்பா என் கலை குரு. அவங்களை வழிபடலேன்னு பசிச்ச வயிற்றுக்குச் சோறு கிடைக்காதப்பா!' இதைச் சொல்றபோது அவருக்குத் தொண்டையை அடைச்சிது. என்னன்னு கேட்டேன். சோக ரசம்னாரு!"

"ஐயோ!"

"என்னடா 'ஐயோங்'கிறே! ஒரு நாளைக்குப் பாரு. நான் கூட இருக்கிறபோதே ஒருத்தி, 'அவள் கிட்டே கூடறீங்க,' இவள் கிட்ட கூடறீங்க. என்னை என்னன்னு நினைச்சீங்க?'ன்னு சீறினா. குருநாதர் பயந்து நடுங்கினாரு. அதைப் பார்த்து நான் என்னையறியாமல் 'ஹிஹி'ன்னு சிரிச்சுட்டேன்!

குருநாதர் கோவிச்சுக்கலே.

'டேய், சிரிக்காதேடாலே! இதுவரை கைவராத ரசமும் இன்னிக்குக் கைவந்துட்டதடா! இந்த சாந்தத்துக்காகத்தானடா இவ்வளவு நாளும் நான் தவம் கிடந்தேன்!' அப்படின்னவர் மேலே சொன்னார்: 'டேய், இப்போ புரிஞ்சுக்கடா! என் சம்சாரங்களிலே ஒருத்தி ஊடல்சொல்லித் தரா. இன்னொருத்தி கூடலுக்கு வழி காட்டறா. இதென்ன ரசம்? இதுதான் சிருங்காரம்! இதைக் கண்டு மற்றொருத்தி கொதித்தெழறா — இது என்ன? கோபம்! இரண்டு பெண்கள் சேர்ந்துட்டா 'மோதல்' ஏற்படுது. அது வீரம்! மூணு பேரு சேர்ந்தா வயத்திலே புளியைக் கரைக்கிறது. அதென்ன பயங்கரம்! எங்களை வச்சிண்டு இந்தப் பத்திரிகைக்காரனுவ சரடு விடறானுவளே, அது அசிங்கம், பீபத்ஸம்! — இப்போ புரிஞ்சுக்கடா, இப்போ புரிஞ்சுக்க! நவரசம் நல்லையா என்கிற பேரு எனக்குச் சும்மா வரல்லே!'ன்னார். அவர்கிட்டப் படிச்சுக்கிட்டதை மேடையேறிக் காட்ட இன்னும் வாய்ப்பு ஏற்படவில்லையடா!"

—இப்படிச் சொன்ன அப்பாசாமிக்கு, அன்று மாலையே அமெச்சூர் நாடகமொன்றில் அவனோ, அவன் குருநாதரோ அல்லது வேறு யாருமோ அறியாமலே அரியதொரு வாய்ப்புக் கிடைத்தது.

நடந்தது 'பூகைலாஸ்' நாடகம். ஒவ்வொரு காட்சிக்கும் பாத்திரங்களுக்குத் தேவையான பொருள்களை மறக்காமல் எடுத்துக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றிருந்தான் அப்பாசாமி. ஆனால் அவனும் மறந்து விட்டான், ராவண வேஷதாரியும் மறந்து விட்டான். அட்டைத் தலைகளில் ஒன்பதை — பதினெட்டுக் கைகளோடுதான் — எடுத்து மாட்டிக் கொண்டு கையில் கதையுடன் புறப்பட, டைரக்டரிடம் பாட்டுக் கேட்கக் கூடாதே என்பதற்காகப் பக்கத்தில் இருந்த விதூஷக உடையை மாட்டிக் கொண்டு கையில் கதையும் அட்டைத் தலைகளுமாகப் புறப்பட்ட அப்பாசாமி மெதுவாக மேடையில் தலை நீட்டினான். ராவணன் விழித்தான். கொட்டகை அதிர்ந்தது கைதட்டலில். கரகோஷத்துக்குக் காரணத்தை விளங்கிக் கொள்ள நிமிர்ந்தால் முதல் ஆசனத்தில் அப்பாசாமியின் குருநாதர் அமர்ந்திருந்தார். அவர் தலைமை என்பது நினைவுக்கு வந்ததும் உதறலெடுத்தது அப்பாசாமிக்கு. 'மன்னிக்கணும், மன்னிக்கணும்' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டே ராவணனையும் மகாஜனங்களையும் மிரள மிரளப் பார்த்தவண்ணம் பின்னோக்கி நடந்து சென்று மறைந்தான்.

மேடையேறித் தலைமை வகித்த நல்லையா, "ஒரு காட்சியில் ஒருசில விநாடிகளுக்கே தோன்றினாலும் கொட்டகையை அதிர வைத்த அந்த இளம் நடிகருக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது! விழிகளில்தான் என்ன மிரட்சி! நடையில்தான் என்ன பயம்! 'மன்னிக்கணும்' என்ற அந்தச் சொல்லில் தான் என்ன நயம்! ஒரு நிமிஷமே வந்தாலும் விதூஷக பாத்திரம் நம் மனக்கண்ணை விட்டு அகலவில்லை" என்றார்.

அப்பாசாமி விதூஷக உடையுடனேயே மீண்டும் மேடையில் தோற்றுவிக்கப்பட்டான். அருகில் பார்த்ததும்தான் நவரசம் நல்லையாவுக்கு அடையாளம் புரிந்தது. "அட நம்ம சிட்பின்னே!" என்றார்.

அப்பாசாமி தலை வணங்கி நின்றான். காட்சிக்குக் காட்சி வரவேண்டிய விதூஷகப் பாத்திரத்தை வரவொட்டாமல் அடித்த பெருமை நாடக ஆசிரியருக்கோ, டைரக்டருக்கோ இல்லை; நாடகத்துக்காக வந்திருந்த அந்த ஒரே விதூஷக உடையை அப்பாசாமி அணிந்து கொண்டு கடைசி வரை கழற்றாமல் இருந்து விட்டதும், எத்தனை தேடியும் அது யார் கண்ணிலும் படாமல் இருந்து விட்டதுமேதான்! அல்டாப்புக்கும் ஓர் அதிர்ஷ்டம் உண்டு என்பது இதிலிருந்து தெரியவில்லையா?



வெளிப்புறக் காட்சி- வெங்குவின் சாட்சி!

காந்தன்

"என்னப்பா வெங்கு, நாளைக்கு 'அவுட்டோர்' ஷூட்டிங்குக்குப் புறப்படுகிறோமே! காமெடியன் வேணு வரவேயில்லே. அவர் நடிக்கிற முக்கியமான, காட்சிகளெல்லாம் பம்பாய் டவுனிலேயும், ஜூஹூக் கடற்கரையிலேயும் எடுத்தாக வேண்டுமே. நீ அவர் வீட்டுக்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்தாயா ?"

"டைரக்டர் ஸார்! இது ரொம்ப பேஜாரான வேலே. எப்போ போய்ப் பார்த்தாலும் அவர் இல்லே என்கிற பதில்தான் வர்றது. நேற்றைக்கு மத்தியானம் போயிருந்தேன். வாசலிலே அவர் ஸ்டாண்டர்டு கார் நின்னுக்கிட்டிருக்கு. ஆனா, அவர் வீட்டிலே இருந்த அம்மா என்ன பதில் சொன்னாங்க, தெரியுமா? 'அவர் ஷூட்டிங்' போயிருக்காருன்னாங்க. 'அவர் கார் இருக்கிறதே'ன்னேன். 'ப்ரொட்யூசர் கார் அனுப்பிச்சாரு'ன்னாங்க. 'எந்த ப்ரொட்யூசர்'னு கேட்டேன். 'விமலா பிக்சர்ஸ்' இன்னாங்க. 'அந்தக் கம்பெனியிலேயிருந்துதானே நான் வர்றேன்'னு கேட்டேன். அந்தம்மா முகம் என்னமோ போல் ஆயிட்டது. அப்புறம் காமெடியன் வேணு மாடியிலே இருந்து வந்தாரு. 'மிஸ்டர் வெங்கு, நீங்க ஒண்ணும் தப்பா நினைக்காதிங்க. ஒரு நடிகனுக்கு 'டிமாண்டு' அதிகமாக வேணுமானல் இந்த மாதிரியெல்லாம் 'ஸ்டண்ட்' வேலைகள் செய்ய வேண்டியிருக்கிறது. நிறைய 'சான்ஸ்' இருக்கிறது போலக் காட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவ்வளவுதான். நான் நிச்சயமாக 'அவுட்டோரு'க்குத் தயாராக வந்து விடுகிறேன். நீங்க போய் டைரக்டரிடமும், முதலாளியிடமும் சொல்லுங்கன்னரு. அதனாலே தயாராய் வந்துடுவாரு."

"ஓஹோ, அப்படியா? சரி. நான் நிருபமா தேவியை நேரில் பார்த்துச் சொல்லிவிட்டேன். இருந்தாலும் இன்னொரு தடவை டெலிபோனிலேயும் சொல்லிவிடு."

அப்பொழுது படாதிபதி அங்கு வேகமாக வந்து ஒன்றும் பேசாமல் சோபாவில் உட்கார்ந்து கன்னத்தில் கை வைத்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்து விட்டார்.

உடனே வெங்கு வெள்ளி வெற்றிலேப் பெட்டியை எடுத்து அவரிடம் நீட்டினன்.

"என்ன சார், சமாசாரம்? ஒரேயடியாய் இடிந்து போய் விட்டீர்களே!" என்று கேட்டார் டைரக்டர்.

"இடிந்து போகாமல் என்ன பண்ணுவது? சொல்லுங்கள். ஹீரோ பிரபாகர், 'அவுட்டோர்' ஷூட்டிங்குக்கு வர முடியாதாம். ஒரு பொங்கல் ரிலீஸ் படத்துக்காக இராப் பகல் ஓய்வு ஒழிவில்லாமல் படப் பிடிப்பிலே கலந்து கொண்டிருக்கிறாராம். மூச்சுவிடக் கூட அவகாசம் இல்லேயாம். டெலிபோனிலே இப்பொழுதுதான் சொன்னரு. நாம் பம்பாயிலே 'அவுட்டோர் ஷூட்டிங்' போவதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்தாகி விட்டதே. ஹீரோ இல்லாமல் எப்படி அங்கெல்லாம் போய் ஷூட்டிங் எடுக்க முடியும்? இந்தச் செய்தியைக் கேட்டதிலேயிருந்து எனக்கு இரத்தக் கொதிப்பு வந்து விட்டது!" என்று மிகவும் சோர்ந்து போய்க் கூறினர் படாதிபதி.

"நீங்கள் கவலையை விடுங்க, 'பாஸ்' ! 'அவுட்டோர் ஷூட்டிங்'குக்குப் பிரபாகர் வரவில்லேயானல் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடாது. அவர் இல்லாமலே சமாளிக்க முடியும். இதுக்கா இப்படி இடிஞ்சு போய் உட்கார்ந்துட்டீங்க ? 'காமிரா ட்ரிக்'கெல்லாம் எதற்குத்தான் இருக்கு? 'தலையெழுத்துப் போல் நடக்கட்டும்' என்று ஒரு படம் வந்து நூறு நாட்கள் சக்கைப் போடு போட்டதே, தெரியுமா ? அந்தப் படத்தின் ஷூட்டிங்போது இப்படித்தான் ஹீரோ, ஹீரோயின் முதலியவர்களெல்லாம் மொத்தமாக வெளியூருக்கு வந்து படப் பிடிப்பிலே கலந்து கொள்ள முடியாதுன்னு சொல்லிட்டாங்க. அந்தப் பட முதலாளிக்கு வேண்டாதவங்க சில பேர் ஒண்ணாக் கூடிக்கிட்டுப் பல இடைஞ்சல்களை ஏற்படுத்திப் படப் பிடிப்பை நிறுத்தப் பார்த்தாங்க. அவரு இதுக்கெல்லாம் துளிக்கூடப் பயப்படல்லே. காமிராவை மாத்திரம் காஷ்மீருக்கு எடுத்துக்கிட்டுப் போய் வெளிப்புறக் காட்சிகளையெல்லாம் அற்புதமாகப் படமாக்கிக்கிட்டு வந்தாங்க. இங்கே வந்ததுக்கப்புறம் கதா

நாயகனையும் கதாநாயகியையும் தனியாகப் படமெடுத்து 'ஸூப்பர் இம்போஸ்' பண்ணிச் சரி பண்ணிட்டாங்க. 'கதாநாயகனும், கதாநாயகியும் ஆவி ரூபத்திலே காஷ்மீரைச் சுற்றி வந்தது பிரமாதம்!' என்று கேலியாக ஒரு பத்திரிகை விமரிசகர் எழுதியிருந்தார். ஆனால் அதை அந்தப் படாதிபதி பொருட்படுத்தவில்லை. படம்தான் 'சக்ஸஸ்' ஆயிடுச்சே? அப்புறம் பத்திரிகைக்காரன் என்ன எழுதினா யாருக்கு என்ன?''

படாதிபதி ''என்ன டைரக்டர் ஸார்! வெங்கு சொல்லுகிறது சரிதானா? இல்லே, வாய்ச் 'சவடால்' அடிக்கிறானா?'' என்று கேட்டார்.

''அவன் சொல்லுவது முழுக்க முழுக்க உண்மை. வெளிப்புறக் காட்சிகளின் சிறப்பினாலோ, கலை உத்திகளினாலோ ஒரு படம் வெற்றியடைந்து விடுவதில்லே. வெற்றியென்பது ஒரு 'லக்'. அவ்வளவுதான். அது எப்படி வருமென்று சொல்ல முடியாது. வெங்கு அநுபவத்திலேயே ரொம்ப ரொம்பத் தெரிந்து வைத்திருக்கிறான் ஸார்! அவன் சொல்லுகிறபடியே நாம் பம்பாய் வெளிப்புறக் காட்சிகளை மட்டும் படம் பிடித்துக் கொண்டு வந்து விடலாம். எப்படியும் நிருபமா தேவியும் வேணுவும் வருகிறார்கள். அவர்கள் தோன்றும் காட்சிகளை எடுத்துக் கொள்கிறது. ஹீரோ வருகிற காட்சிகள் ஒன்றிரண்டை 'லாங் ஷாட்'டில் எடுத்துக் கொள்கிறது! 'லாங் ஷாட்'டில் ஹீரோவுக்குப் பதிலாக லாந்தர் கம்பம்கூட நிற்கலாம்! அப்புறம் இங்கே வந்து கதாநாயகன் கதாநாயகி ஆகியவர்களைத் தனியாகப் படம் எடுத்துச் சேர்த்துக் கொள்ளலாம்!'' என்றார் டைரக்டர்.

''ஆமாம், ஸார்! கதாநாயகனும் கதாநாயகியும் காதல் பண்ணிக் கொண்டே புல் தரையில் புரளணும். அவ்வளவுதானே? அது காஷ்மீர ராஜ்யப் புல்லானால் என்ன? வாஹினி ஸ்டுடியோ புல்லானால் என்ன? புல்லிலே என்ன வித்தியாசம் தெரியப் போகிறது ஜனங்களுக்கு?'' என்றான் வெங்கு.

''டைரக்டர் சார்! இப்பொழுதுதான் என் மனசுக்கு நிம்மதி திரும்பியது. வெங்கு! உன் யோசனைகள் பிரமாதம்! சரி, நாம் உடனடியாக 'அவுட் டோர்' ஷூட்டிங்குக்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்ய வேண்டும்...'' என்றார் படாதிபதி.

''ஓ, யெஸ்! உடனே எட்டு கழுதைகளுக்கும், சலவைத் தொழிலாளர் வேஷத்துக்குப் பத்து எக்ஸ்ட்ராக்களுக்கும் ஏற்பாடு பண்ணி விடுகிறேன்!'' என்றான் வெங்கு.

''என்னது? கழுதையாவது, ஒண்ணாவது?'' என்றார் படாதிபதி.

''ஆமாம்! நாம் எடுக்கிறது கலர்ப் படம் இல்லையா? ஊதா, சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் என்று வண்ண வண்ணத் துணிகளை பீஸ் பீஸாக வாங்கிப் போடுவோம். ஆற்றங் கரையிலே சலவைத் தொழிலாளர்கள் அவற்றைத் தோய்த்து அலசி உலர்த்துவதைப் படம் பிடிப்போம். 'அவுட்டோர் ஷாட்' அமர்க்களமாக இருக்கும்!'' என்றான் வெங்கு.

படாதிபதியும் டைரக்டரும் அவன் அறிவைக் கண்டு அயர்ந்து போனார்கள்.



ஜாலவித்தை செய்கிறாரே!

''அகில உலகப் புகழும், எட்டு தங்க மெடல்களும் பெற்ற மந்திரவாதி கோஹியா பாஷாவைச் சந்திக்கப் போகிறீர்கள்!''

திரை மூடியபடியே இருந்தது. இன்னிசை தொடர்ந்தது.

''கோஹியா பாஷா எங்கே? தம் மந்திர சக்தியினால் மறைந்து விட்டாரா?''

''இதோ வந்து விட்டார்!''

கோழி முட்டையை வாய்க்குள் போட்டுக் கொண்டு வயிற்றிலிருந்து எடுக்கிறார்; வாயிலிருந்து பேப்பர் பேப்பராக வெளி வருகிறது! நியூஸ் பிரிண்ட் கிடைக்காத காலத்தில் நியூஸ் பிரிண்டை வாயிலிருந்து வரவழைத்துக் கொடுக்கலாமே?

ஒரு பெட்டியில் வைக்கும் பறவைகள் மறைந்து போய்த் திரும்பி வருகின்றன. கோஹியா பாஷா ஹிந்தியிலும் முழங்குகிறார்! 'ஹிந்தி ஒழிக' என்று யாரும் வாய் திறக்கவில்லை. பயம்! மந்திரவாதியாயிற்றே!


''உங்களுக்கு வேண்டாத மாமியார், வேண்டாத கணவன் இருந்தால் இங்கே அனுப்பி வையுங்கள். இந்தப் பெட்டிக்குள் அடைத்து, வாளால் குத்தி யமனுலகுக்கு அனுப்பிவிடலாம்!'' என்று தமாஷாகக் கூறிக் கொண்டே தம் கோஷ்டியைச் சேர்ந்த பெண்ணைப் பெட்டிக்குள் அடைத்து வாளால் குத்துகிறார்! அந்தப் பெண் எந்த வித ஆபத்துமின்றி வெளியே வருகிறாள்.

''கலை! கலை! கலை!'' ரசிகப் பெருமக்கள் தலையிலிருந்தும் வயிற்றிலிருந்தும் அந்நிய நாட்டு நாணயங்களைப் படிக் கணக்கில் கொட்ட வைக்கிறார்! வரி மன்னர் மொரார்ஜி தேசாய் கண் படாமலிருக்கட்டும்!

கறுப்புத் துணிகளுக்கு மத்தியில், 'பூத்மஹா'வில் நாற்காலிகளும் மேஜைகளும் பூத்தொட்டிகளும் நர்த்தனமாடுகின்றன; உள்ளே செல்லும் கோஹியா பாஷா மறைந்து, ரசிகர்களின் மத்தியிலிருந்து வெளிவருகிறார்! நமக்குக் கோஹியா பாஷா எப்படி மறைகிறார் என்ற வித்தையையாவது சொல்லித் தர வேண்டும்! கடன்காரர்கள், வரிக்காரர்கள் இவர்கள் எதிர்ப்பட்டால் மறைந்து தப்பிவிடலா மல்லவா?

துல்ஜாப்பூர் மகாராஷ்டிரத்தில் உள்ளது. சிவாஜி வழிபட்ட பவானி தேவி இந்த ஊரில் கோயில் கொண்டிருக்கிறாள். அஸ்தமன பூஜைக்குப்பின் அம்மன் ஒரு பொற்கட்டிலில் துயிலுகிறாள். கட்டிலில் படுப்பதென்பது தேவிக்கு மட்டுமே உரியது. துல்ஜாப்பூர்வாசிகள் எப்பொழுதும் கட்டிலில் சயனிக்க மாட்டார்கள்.

தகவல்: மு. க. தியாகராஜன் ஆதாரம்: ''உலக விசித்திரங்கள்''



இவை என்ன?





''எங்க சிநேகித் வீட்டு ரேடியோ நிப்போராம்!''

இவை அனைத்தும் பண்டையத் தமிழக வெற்றிலைப் பெட்டிகள்.

பித்தளையில் பரங்கிக்காய், ஆமை, மீன், கூடை வடிவங்களில் அருமையான வேலைப்பாடுகளுடன் அமைந்த இவை, தற்போது சென்னைக் கலைக்கூடத்தில் காட்சிப் பொருட்களாக இருக்கின்றன.

- ராம்



நடுவில் ஒரு மைதானம். அதன் இரண்டு பக்கங்களிலும் எதிரெதிராக இரண்டு பிரும்மாண்டமான ரஸாயனத் தொழிற்சாலைகள். ஒன்று நேஷனல் ரஸாயனக் கம்பெனி, மற்றது இண்டர் நேஷனல் ரஸாயனக் கம்பெனி. வெறும் தொழிற்சாலைகள் மட்டுமல்ல; கிடங்கு, ஆபீஸ் அதிகாரிகளும் தொழிலாளர்களும் வசிக்கும் விடுகள் முதலியனவும் இருந்தன அங்கே.

இன்னொன்றும் அங்கே இருந்தது. அது தான் இரு கம்பெனிகளுக்குமிடையே தீவிரமான போட்டி மனப்பான்மை. இந்த மனப்பான்மை கம்பெனி அதிபர்களிடையே மட்டுமில்லாமல் சாதாரணத் தொழிலாளர்களிடமும் பரவியிருந்தது.

ஓர் உதாரணம் பாருங்கள். ஒரு தடவை இண்டர் நேஷனல் கம்பெனி விசுவகர்மா

அனுதாபக் கூட்டம்



வங்க மூலம்: **அஜித்கிருஷ்ணவசு**

தமிழாக்கம்: **சு. கிருஷ்ணமூர்த்தி**

பூஜையை மிகப் பிரமாதமாகக் கொண்டாடப் போவதாக நேஷனல் கம்பெனிக்காரர்கள் கேள்விப்பட்டார்கள். பம்பாயிலுள்ள சினிமாப் பின்னணிப் பாடகர்கள் எல்லாரையும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

நேஷனல் கம்பெனியின் அதிபர்கள் அவசரக் கூட்டம் கூட்டினார்கள். விசுவகர்மா பூஜைக்கு ஒரு புதுமையான ஏற்பாடு செய்யா விட்டால் நேஷனல் கம்பெனியின் கௌரவம் மண்ணுகப் போய் விடும். இண்டர் நேஷனல் கம்பெனியிடம் நேஷனல் கம்பெனி தோற்று விடலாமா? என்ன செலவானாலும் சரி, சினிமா நக்ஷத்திரங்களைக் கொண்டே ஏதாவது ஒரு விழா ஏற்பாடு செய்து இண்டர்நேஷனல் கம்பெனியைத் தலை குனியச் செய்வதென்று தீர்மானமாயிற்று.

உண்மையிலேயே நேஷனல் கம்பெனியின் ஏற்பாடு புதுமையிலும் புதுமை! விசுவகர்மா பூஜையின்போது சினிமா நக்ஷத்திரங்களின் கிரிக்கெட் விளையாட்டு விழா நடைபெற்றது. நடிகர் மதியம் குமாரின் குழு ஒரு பக்கம், மறுபக்கம் நடிகை விசித்ராசென்னின் குழு. அப்போது மழைக் காலம். மழை வந்து விழாவைக் கெடுத்து விடாமல் இருப்பதற்காக மைதானம் முழுவதையும் 'வாடர் புரூஃப்' துணியால் மூடி ஒரு பிரும்மாண்டமான கூடாரம் போட்டார்கள்! இந்த ஏற்பாடுகளைக் கண்டு ஊரே மூக்கில் விரலை வைத்தது!

விழாவில் பங்கு கொண்ட நக்ஷத்திரங்களில் பெரும்பாலோர் அதற்குமுன் தங்கள் வாழ்வில் கிரிக்கெட் மட்டையைத் தொட்டதில்லை. நடிகர்களும், நடிகையரும் தங்கள் தங்கள் இஷ்டப்படி உடைகளை அணிந்து கொண்டு வந்து கிரிக்கெட் விளையாட்டை 'விளையாட்டாக' ஆடித் தீர்த்தார்கள். அதைப் பார்க்க ஊரே திரளாக வந்துவிட்டது. இண்டர் நேஷனல் கம்பெனி ஏற்பாடு செய்த பாட்டுக் கச்சேரியைக் கேட்க ஆளில்லை. பாடகிகள் பாட்டுக் கச்சேரி செய்வதில் என்ன புதுமை இருக்கிறது!

கிரிக்கெட் விழாவுக்கு ஏராளமான 'விளம்பரம் கிடைத்தது. சினிமாப் பத்திரிகைகளிலும், விளையாட்டுப் பத்திரிகைகளிலும், செய்திப் பத்திரிகைகளிலும் இந்த விழாவின் வர்ணனை ஏராளமான படங்களுடன் பிரசுரமாயிற்று. நேஷனல் கம்பெனிக்கு ஏகப்பட்ட விளம்பரமும், பாராட்டுக்களும் கிடைத்தன. இண்டர் நேஷனல் கம்பெனி அவமானத்தால் துடித்தது.

இதற்குச் சில நாட்களுக்குப் பிறகு இண்டர் நேஷனல் கம்பெனியின் ஜெனரல் மானேஜர் இறந்து விட்டார். கம்பெனி அவருடைய மறைவுக்கு வருத்தம் தெரிவிக்க ஒரு பெரிய அனுதாபக் கூட்டம் ஏற்பாடு செய்தது. நகரப் பிரமுகர்களெல்லாரும் அதற்கு அழைக்கப்பட்டார்கள். ஆனால் நேஷனல் கம்பெனியைச் சேர்ந்த எவருக்கும் அழைப்பு அனுப்பப்படவில்லை. நோக்கம் நேஷனல் கம்பெனியை அவமானப்படுத்துவதுதான்.

இந்த நிகழ்ச்சியால் நேஷனல் கம்பெனிக்காரர்களுக்கு ஏற்பட்ட கோபத்துக்கு அளவில்லை, அவர்கள் பல்லைக் கடித்துக் கொண்டு தங்களுக்குள் சொல்லிக் கொண்டார்கள்: ''இருக்கட்டும்! நமக்கும் ஒரு காலம் வரும்!''

இந்தச் சமயத்தில் நேஷனல் கம்பெனியின் தலைமைக் குமாஸ்தா நோய்வாய்ப்பட்டார். நோய் முற்றிக் கொண்டே வந்தது. கடைசியில், 'இப்போதோ, அப்போதோ' என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. அவ

ருக்குச் சிகிச்சை செய்து வந்த வைத்தியரும் கைவிரித்து விட்டார்.

சீக்கிரமே ஓர் அனுதாபக் கூட்டம் நடத்த வாய்ப்பு ஏற்படும் என்ற நம்பிக்கையில் நேஷனல் கம்பெனிக்காரர்களுக்கு உற்சாகம் ஏற்பட்டது. ''இண்டர்நேஷனல் காரர்கள் அவர்களுடைய ஜெனரல் மானேஜருக்காக நடத்திய அனுதாபக் கூட்டத்தைவிடப் பல மடங்கு விமரிசையாக நாம் நமது தலைமைக் குமாஸ்தாவுக்காகக் கூட்டம் ஏற்பாடு செய்வோம்!'' என்று அவர்கள் தீர்மானித்தார்கள். இண்டர்நேஷனல் கம்பெனியிடம் நேஷனல் கம்பெனி ஒருபோதும் தோல்வியடையாது! இத்தகைய வாய்ப்பை அளிப்பதற்காக அவர்கள் எல்லோரும் தங்கள் தலைமைக் குமாஸ்தாவை மனதார வாழ்த்தினார்கள்.



நேஷனல் கம்பெனியின் குமாஸ்தாக்களில் சிலர் கவிகள். அவர்கள் அனுதாபக் கூட்டத்தில் வாசிப்பதற்காக இரங்கற்பாக்கள் இயற்றத் தொடங்கினார்கள். தொழிற்சாலையின் கிடங்கில் வேலை பார்த்து வந்த பவார்ணவ சர்வாதிகாரிக்குச் சங்கீதத்தில் ஈடுபாடு உண்டு. அவன் எப்போதும் ராகத்துடன் மூக்கால் முணுமுணுத்துக் கொண்டே இருப்பான். அதைக் கேட்டால் அவன் அழுது கொண்டிருப்பது போலத் தோன்றும். ஆகையால் அவனுக்கு நல்ல பாடகன் என்ற பெயர் இருந்தது. அவன் தன் சகாக்களிடம் சொன்னான்: ''நீங்கள் விரும்பினால் இரங்கற்பாக்களுக்கு நானே மெட்டமைத்துப் பாடுகிறேன். கேட்பவர்கள் எல்லாரும் அழுது தீர்த்து விடுவார்கள், பாருங்கள்!'' இந்த யோசனையை மற்றவர்கள் உற்சாகத்துடன் ஒப்புக் கொண்டார்கள். ஆகவே சர்வாதிகாரி தன் வீட்டில் பாட்டைப் பாடி ஒத்திகை செய்ய ஆரம்பித்தான்.

கம்பெனியின் பிரசார இலாகாவில் வேலை செய்யும் அனந்த தஸ்தீதார் அனுதாபக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய அனுதாபத் தீர்மானத்தைத் தயார் செய்யத் தொடங்கினான். அதைப் படித்துப் பார்த்த மற்றவர்கள் தத்தம் யோசனைகளைச் சொல்லச் சொல்ல அந்தத் தீர்மானமும் உருமாறிக் கொண்டே வந்து, கடைசியில் பிரமாதமாக அமைந்து விட்டது. சோக உணர்ச்சி பொங்கித் ததும்பும் அந்தத் தீர்மானத்தைப் படித்தவர்களும், கேட்டவர்களும் கண்ணீரை அடக்க முடியாதவகையில் அமைந்திருந்தது அந்தத் தீர்மானம்.

இவ்வாறு அனுதாபக் கூட்டத்தைச் சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. வரவிருக்கும் கூட்டத்துக்கேற்றவாறு தங்கள் மனநிலையையும் பக்குவப்படுத்திக் கொண்டிருந்தார்கள், நேஷனல் கம்பெனிக்காரர்கள். அதற்காக வருத்தம் நிறைந்த சூழ்நிலையை அவர்களே வலுவில் வரவழைத்துக் கொண்டார்கள்.

இந்தச் சமயத்தில்தான் தெளிவான, ஆகாயத்தில் இடி இடித்தது போல், சற்றும் எதிர்பார்க்கப்படாத நிகழ்ச்சி ஒன்று நடந்தது. நோய்வாய்ப்பட்டிருந்த தலைமைக் குமாஸ்தா பிழைத்து விட்டார்! இந்தத் திருப்பத்தைக் கண்டு முன்பு கைவிரித்துவிட்ட வைத்தியரே திகைத்துப் போய் விட்டார்!

வலுவில் துக்கத்தை வரவழைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த நேஷனல் கம்பெனிக்காரர்களை இந்தச் செய்தி உண்மையான துக்கத்தில் ஆழ்த்தி விட்டது. இரங்கற்பாக்கள் இயற்றியிருந்த கவிமணிகள், பாட்டுப் பாடி ஒத்திகை செய்து கொண்டிருந்த பவார்னவ சர்வாதிகாரி, அனுதாபத் தீர்மானம் தயார் செய்த அனந்த தஸ்தீதார், இன்னும் பல்வேறு ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்த மற்றவர்கள், எல்லாரும் ஏமாற்றமடைந்து பிழைத்தெழுந்த தலைமைக் குமாஸ்தாவைத் திட்டித் தீர்த்தார்கள். சீ! என்ன மனுஷன்! கடைசியில் பிழைத்தெழுவதாயிருந்தால் சாகப் போவதாகப் போக்குக் காட்டி நூற்றுக்கணக்கானவர்களை இப்படி ஏமாற்றுவானேன்! தன்னை நம்பியிருந்தவர்கள் எல்லாரையும் ஏமாற்றிவிட்டானே, நன்றியில்லாத மனுஷன்!

எல்லா ஏற்பாடுகளும் விழலுக்கிறைத்த நீராகிவிட்டன! இண்டர் நேஷனல் கம்பெனியை மட்டம் தட்ட ஓர் அருமையான வாய்ப்பு கையை விட்டு நழுவி விட்டது....!

திடீரென்று ஒரு நாள் — தலைமைக் குமாஸ்தா பிழைத்து எழுந்தது போலவே எதிர்பாராதவிதமாக — நேஷனல் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் அமர் சௌதுரி மாரடைப்பால் இறந்து போய் விட்டார்.

அவருக்கு எப்போதும் இரத்த அழுத்தம் உண்டு; வயதும் எழுபதாகிவிட்டது. இருந்தாலும் அவர் இப்படி இறந்து விடுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

தெளிவான வானத்தில் இடி இடித்த உவமையை முன்பே ஒரு தடவை உபயோகித்தாகிவிட்டது. இல்லாவிட்டால், அந்த உவமையை அமர்சௌதுரியின் சாவை வருணிக்க உபயோகித்திருக்கலாம். மரணச் செய்தி எல்லாரையும் ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது. அமர்சௌதுரி உண்மையிலேயே ஒரு பெரிய சூரர். காரியத் திறனில் அவருக்கு இணை அவர்தான்.

மரணச் செய்தியின் திகைப்பும் அதிர்ச்சியும் நீங்கியபிறகு நேஷனல் கம்பெனிக்காரர்களுக்குச் சற்று ஆறுதலும் ஏற்பட்டது. அனுதாபக் கூட்டம் நடத்த ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்தது குறித்து. தலைமைக் குமாஸ்தா செய்யத் தவறியதைத் தம் சாவால் செய்து காட்டித் தம் கம்பெனியின் மானத்தைக் காப்பாற்றி விட்டார் அமர் சௌதுரி!

அமர் சௌதுரியின் மரணத்துக்குப்பின் கம்பெனியின் சீனியர் டைரக்டரான விஷ்ணு பாதுரி கம்பெனியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். அமர்சௌதுரி உயிருடனிருந்தவரையில் பாதுரிக்குத் தம் திறமையை வெளிக் காட்ட வாய்ப்பு எதுவும் கிடைக்கவில்லை. அதை ஈடு செய்யும் முறையில் தம் அதிகாரத்தையும் திறமையையும் உபயோகித்து அனுதாபக் கூட்டத்தைச் சிறப்பாக நடத்தி வைக்க ஏற்பாடு செய்தார் மானேஜிங் டைரக்டர் பாதுரி......

கம்பெனியின் விசாலமான அரங்கில் அனுதாபக் கூட்டம் ஏற்பாடாயிற்று. குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பே ஹால் நிரம்பி விட்டது. உட்கார இடம் கிடைக்காமல் பலர் நின்று கொண்டிருந்தார்கள். பார்வையாளர்களுக்குச் சற்றுத் தள்ளி ஒரு விசாலமான மேடை. அதன் மேல் ஓர் ஓரத்தில் மலர் மாலைகளால் நன்கு அலங்கரிக்கப்பட்ட அமர்சௌதுரியின் சித்திரம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. கூட்டத்துக்குத் தலைமை வகிப்பவருக்காகவும் அதில் பேசப் போகிறவர்களுக்காகவும் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. மேடையின் மேல் சுற்றிலும் அழகிய கிண்ணங்களில் ஏதோ ஒரு வாசனைப் பொடி புகைந்து கொண்டிருந்தது. அந்த வாசனைப் புகை மேடை முழுதும் மேக மண்டலம் போல் பரவியிருந்தது.

அனுதாபக் கூட்டத்துக்குத் தலைமை வகிக்க அழைக்கப்பட்டவர் ஊரிலே ஒரு பெரிய பிரமுகர். அவர் பெயரைக் கேட்டால் அழுத பிள்ளை வாய் மூடும். ஆடம்பரம், அழுத்தம், கம்பீரம், செல்வம் ஆகிய எல்லாவிதமான பெரிய மனிதத் தன்மைகளும் அவரிடம் நிரம்பியிருந்தன.

குறிப்பிட்ட நேரத்தில் சபைத் தலைவரும் மற்றப் பேச்சாளர்களும் மேடையின் மேல் வந்து அமர்ந்தார்கள். அவர்கள் அமர்ந்ததுமே மேடையில் சூழ்ந்திருந்த அசாதாரணமான வாசனையை உறிஞ்சி உறிஞ்சி நுகர்ந்து அனுபவித்தார்கள். இவ்வளவு பரம சுகமான வாசனையை அவர்கள் இதற்கு முன்னால் நுகர்ந்ததேயில்லை.

சபைத் தலைவர் கம்பீரமாக எழுந்து ஒலிபெருக்கியின் முன் வந்து நின்று கொண்டு கூட்டத்தைத் தொடக்கினார்: "சபையில் குழுமியிருக்கும் சீமான்களே, சீமாட்டிகளே! நாம் இன்று ஒரு பெரிய அயோக்கியன், அகம்பாவக்காரன், மோசடிப் பேர்வழியின் அகால மரணத்தைக் குறித்து — அகால மரணமென்று ஏன் சொல்கிறேனென்றால் இந்த ஆள் வெகு காலத்துக்கு முன்பே செத்து ஒழிந்திருக்க வேண்டும் — மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்ள இங்கு கூடியிருக்கிறோம். இந்த மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது பற்றி நான் மிகவும் பெருமைப்படுகிறேன். செத்துப் போன அமர்சௌதுரியை எனக்குக் கட்டோடு பிடிக்காது. அவன் எப்போது ஒழிவான் என்று ஏங்கிக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான மக்களில் நானும் ஒருவன் என்பதை இப்போது கர்வத்துடன்

பெர்க்லி - கல்கி இலக்கியப் பரிசுத் திட்டம்

அமரர் கல்கி அவர்கள் சரித்திரக் கதைகள், சமூகக் கதைகள், நகைச்சுவைக் கதைகள் ஆகியவற்றை எழுதுவதற்கு இளம் எழுத்தாளர்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கியவர். அன்னாரது நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், அமெரிக்காவில் இயங்கும் பெர்க்லி தமிழ்ச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இந்தச் சிறுகதைப் போட்டியினை நடத்துகிறது கல்கி ஸ்தாபனம்.

சமூகச் சிறுகதைகள், சரித்திரச் சிறுகதைகள், ஹாஸ்யச் சிறுகதைகள் என மூன்று வகையான கதைகளை எழுத்தாள அன்பர்களிடமிருந்து வரவேற்கிறோம்.

சமூகச் சிறுகதைகளில் முதல் பரிசு ரூ. 1000; இரண்டாவது பரிசு ரூ. 500; மூன்றாவது பரிசு ரூ. 250.

இதேபோல் சரித்திரச் சிறுகதைகளுக்கும் ஹாஸ்யச் சிறுகதைகளுக்கும் முதல் இரண்டாவது, மூன்றாவது பரிசுகள் தனித் தனியே உண்டு. ஆக மொத்தம் ரூ. 5250 பரிசுத் தொகையாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

ஒருவர் எத்தனை சிறுகதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

கல்கியில் ஐந்து அல்லது ஆறு பக்கங்களுக்குள் அடங்குகிற மாதிரி சிறுகதைகள் அமைந்திருப்பது நலம்.

பரிசு பெறாத கதைகளில் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவனவற்றுக்கு வழக்கமான சன்மானம் உண்டு.

சிறுகதைகளின் உரிமைகள் அனைத்தும் சிறுகதைகளின் ஆசிரியர்களுக்கே உரியன. முதன் முதலாகக் கல்கியில் வெளியிடும் உரிமை ஒன்று மட்டுமே கல்கி ஸ்தாபனத்துக்கு உரியது.

இலக்கியத் துறையில் பிரபலமானவர்கள் பஞ்சாயத்தார்களாக இருந்து பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இந்தப் போட்டி சம்பந்தமான எவ்விஷயத்திலும் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் போதுமான தபால் தலைகள் வைத்து அனுப்ப வேண்டும்.

போட்டி சம்பந்தமாக எந்தவிதமான கடிதப் போக்கு வரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

மொழிபெயர்ப்போ தழுவலோ அல்ல என்பதைக் குறிப்பிட்டு ஆசிரியர், கல்கி காரியாலயம், சென்னை-10 என்ற விலாசத்துக்குக் கதைகளை 15-7-68க்குள் அனுப்ப வேண்டும்.

உறையின் மீது 'பெர்க்லி—கல்கி இலக்கியப் பரிசுத் திட்டம்' என்றும், ஹாஸ்யச் சிறுகதை, சமூகச் சிறுகதை, அல்லது சரித்திரச் சிறுகதை என்றும் குறிப்பிடுதல் அவசியம்.

எழுத்தாள அன்பர்களின் முழு ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம்.

சொல்லிக் கொள்கிறேன். இத்துடன் இந்தக் கூட்டத்தின் அலுவலைத் தொடர்கிறேன்...''

சபையிலிருந்த எல்லாரும் திடுக்கிட்டார்கள். இதென்ன விபரீதம் !

தலைவர் பெருங்குடியர் என்ற விஷயம் எல்லோருக்கும் தெரியும். கூட்டத்தில் ஒருவர் சொன்னார்: ''நிறையச் சரக்கை உள்ளே போட்டுவிட்டு வந்திருக்கிறார் தலைவர். அதனால்தான் உளற ஆரம்பித்து விட்டார்.''

அனுதாபக் கூட்டத்துக்குத் தலைமை வகிக்க வரும் சமயத்தில் ஒருவர் இப்படிக் குடித்துவிட்டு வருவாரா? என்ன ஆச்சரியம்! இம்மாதிரி நிலையைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை, சபையோர்களால்.

முன் வரிசையில் ஒரு நீள பெஞ்சியின் மேல் பத்திரிகைக்காரர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் தலைவரின் பேச்சைக் கேட்டுத் திகைத்துப் போய் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அவர்கள் எவ்வளவோ அனுதாபக் கூட்டங்களுக்குப் போயிருக்கிறார்கள் : இருந்தாலும் இத்தகைய அதிசயத்தை அவர்கள் இதற்குமுன் கண்டதில்லை.

தலைவர் உட்கார்ந்ததும் புதிய மானேஜிங் டைரக்டர் விஷ்ணு பாதுரி பேச எழுந்தார். அவரைப் பார்க்கச் சபையோருக்குப் பாவமாக இருந்தது. சபைத் தலைவரை ஏற்பாடு செய்தது அவர்தான். இருந்தாலும் தலைவர் இந்த மாதிரிக் குடித்துவிட்டு வந்து உளறுவார் என்று அவர் கண்டாரா ? தாம் ஏற்பாடு செய்த தலைவரின் உளறலைத் தாமே மறுக்க வேண்டிய நிலையில் இருந்தார் விஷ்ணு பாதுரி.

பாதுரி பேசத் தொடங்கினார்: ''சபையோர்களே ! இன்று நேஷனல் கெமிகல் கம்பெனிக்கு ஒரு திருநாள். நம் கம்பெனியின் நல்ல காலந்தான் இப்போதாவது கிழவன் அமர்சௌதுரி உயிரை விட்டான். இன்னும் கொஞ்ச நாட்கள் அவன் உயிரோடு இருந்திருந்தால் கம்பெனியே உயிரை விட்டு விட நேர்ந்திருக்கும். செத்தவன் கம்பெனியைக் குட்டிச்சுவராக்கிக் கொண்டிருந்தான். கடவுள்தான் இப்போது அதைக் காப்பாற்றியிருக்கிறார். இப்போது நான் மானேஜிங் டைரக்டர் ஆகிவிட்டேனல்லவா, இனி, பாருங்கள், நம் கம்பெனி எப்படி முன்

னேறுகிறது என்பதை! நான் இஷ்டப்பட்டால் இங்கே அமர்சௌதுரியின் வண்டவாளங்களை வெளிப்படுத்தலாம். இருந்தாலும் செத்துப் போன மனுஷனுடன் வர்மம் எதற்கு !''

விஷ்ணுபாதுரியின் பேச்சு சபையிலிருந்தவர்களை இன்னும் திகைப்பில் ஆழ்த்தியது. பத்திரிகைக்காரர்களும் விழித்தார்கள். இந்த மாதிரிச் செய்தியைப் பத்திரிகையில் பிரசுரித்தால் எப்படியிருக்கும் !

விஷ்ணு பாதுரி பேச்சைத் தொடர்ந்தார்: ''உண்மையே வெல்லும் என்பது உலக வழக்கு. கடைசியில் உண்மை வென்று விட்டது. நான் மானேஜிங் டைரக்டராக ஆகிவிட்டேன். கம்பெனியில் அமர்சௌதுரியால் ஏற்பட்ட கோளாறுகளை யெல்லாம் நிவர்த்தி செய்து நம் கம்பெனியை மறுபடி நல்ல நிலைக்குக் கொண்டு வருவது என் பொறுப்பு. மேலும் பேசி உங்கள் நேரத்தை வீணக்க விரும்பவில்லை, வணக்கம் !''

இப்போது டைரக்டர்களில் ஒருவரான சம்பு பானர்ஜி பேச எழுந்தார். சம்புபானர்ஜி நிதான மனப் போக்குள்ள மனிதர். அவர் ஒரு போதும் உணர்ச்சி வசப்பட்டுப் பண்புக் குறைவாக நடந்து கொண்டதில்லை. ஆகையால் அவர் தம் பேச்சால் நிலைமையைச் சமாளிப்பார் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள்.

''நண்பர்களே! அமர்சௌதுரி செய்த கோளாறுகளை நிவர்த்தி செய்யப் போவதாகச் சொல்லுகிறார் விஷ்ணுபாபு! ஆனல் என் பயம் என்னவென்றால் அவர் உள்ள கோளாறுகளை நீக்குவதற்குப் பதிலாகப் புதுக் கோளாறுகளை உண்டாக்கி விடுவாரே என்பதுதான்! அப்புறம் அந்தக் கோளாறுகளைப் போக்க நான் வரவேண்டும்! இந்தப் பொறுப்புக்கு நீர்தான் தகுதியானவர் என்று சொல்லிக் கொள்கிறீர்களே, விஷ்ணு பாபு! உம் யோக்யதை எனக்கல்லவா தெரியும் !''

நேஷனல் கம்பெனியின் மானேஜர் சபையில் முதல் வரிசையில் உட்கார்ந்திருந்தார். அவர் தம் பக்கத்தில் உட்கார்ந்திருந்த தொழிற்சாலை சூபரின்டெண்டிடம் சொன்னர்: ''விஷயம் மிகவும் ரசாபாசமாக ஆகிக் கொண்டிருக்கிறது. மேடை மேல் ஏறி இந்த உளறுவாயர்களை அதட்டி வாயை மூடச் சொல்ல வேண்டியதுதான். அமர்சௌதுரியின் வண்டவாளங்கள் நமக்குத் தெரியாதா? இருந்தாலும் செத்துப் போன ஆளைப் பற்றிக் கேவலமாகப் பேசலாமா? அதனல் நம் கம்பெனிக்கல்லவா கெட்ட பெயர் !''

மானேஜர் மேல்நாட்டில் பயிற்சி பெற்றவர். பெரிய கண்டிப்புப் பேர்வழி என்று அவருக்குப் பெயர் உண்டு. அவர் தடதடவென்று மேடையின் மேல் ஏறிச் சம்பு பாபுவைப் பிடித்து அவருடைய நாற்காலியில் உட்கார்த்தி வைத்தார். சம்பு பாபு மானேஜரை மீற முடியாமல் உட்கார்ந்தார்.

''அப்பாடா!'' என்று பெருமூச்சுவிட்டார்கள் சபையிலிருந்தவர்கள். எல்லாரும் மானேஜரின் திறமையையும், கண்டிப்பையும் பாராட்டினர்கள். நல்ல வேளை! அவரால் கம்பெனியின் மானம் பிழைத்தது !

அடடா! இதென்ன! மானேஜரும் மற்றவர்கள் மாதிரியே பேச ஆரம்பித்து விட்டாரே, அவர் என்ன சொல்கிறார்?

''சீமான்களே, சீமாட்டிகளே! எனக்கு முன்னல் பேசியவர்கள் அமர்சௌதுரியின் பல குணதிசயங்களைப் பற்றிப் பேசினர்கள். ஆனல் அவர்களில் யாரும் அமர்சௌதுரி எவ்வளவு மோசமான நடத்தையுள்ளவர் என்பதைப் பற்றிச் சொல்லவில்லை. உயிரோடு இருந்தவரையில்தான் அவரிடம் பயப்பட்டுக் கொண்டிருந்தோம். இனி மேல் என்ன பயம்? நான் சொல்கிறேன், அமர்சௌதுரியைப் போல ஸ்திரீலோலன், கீழ்த்தர நடத்தையுள்ளவன் உலகத்திலேயே வேறு யாரும் இருக்க முடியாது. அவருடன் பழகியவர் எல்லோருக்கும் இந்த விஷயம் தெரியும். சந்தேகம் இருந்தால் விஷ்ணு பாபுவைக் கேட்டுப் பாருங்கள், சம்பு பாபுவைக் கேட்டுப் பாருங்கள் !''

விஷயம் மேலும் மேலும் ரசாபாசமாகப் போய்க் கொண்டிருப்பதைக் கண்ட அக்கௌண்டண்ட் நாராயண் சாட்டர்ஜிக்குப் பொறுக்கவில்லை. அவர் தம் பக்கத்தில் அமர்ந்திருந்த தொழிற்சாலை சூபரின்டெண்டிடம் சொன்னர்: ''இதென்ன விபரீதம் ! நம் கம்பெனியின் பெயர் நாசமாகி விட்டது! இந்த மானேஜரும் அந்தக் கோஷ்டியுடன் சேர்ந்து விட்டார். நீங்களாவது மேடையில் ஏறி நிலைமையைச் சமாளியுங்கள்! உம், சீக்கிரம் போங்கள்!''

தொழிற்சாலை சூபரின்டெண்ட் மேடைக்கு ஓடினர். வாசனைப் புகை நடுவில் நின்று கொண்டிருந்த மானேஜரை ஒரு பக்கம் நகர்த்திவிட்டுத் தாம் அங்கு நின்று கொண்டார். பிறகு சபைத் தலைவரைப் பார்த்துச் சொன்னர்: ''நான் கொஞ்சம் பேச வேண்டும் !''

அவருடைய கட்டுமஸ்தான சரீரத்தைப் பார்த்துப் பயந்துவிட்ட சபைத் தலைவர், ''சரி, பேசுங்கள்!'' என்றார்.

சூபரின்டெண்ட் நல்ல பலசாலிதான். ஆனல் பிரசங்கம் செய்து பழக்கமில்லை அவருக்கு. ஆகையால் பேச்சை ஆரம்பிக்கு முன் சற்று நேரம் பலமாக மூச்சை உள்ளுக்கு இழுத்துக் கொண்டு பிறகு ஆரம்பித்தார் :

''இதுவரை யாரும் சொல்லாத விஷயங்களை நான் சொல்லப்போகிறேன், கேளுங்கள்! அமர்சௌதுரி ஒரு வடிகட்டின முட்டாள். ஆனல் அந்த ஆள் தமக்குத் தெரியாதது ஒன்றுமே இல்லை என்ற நினைப்புடன் நடந்து கொண்டார். தமக்குத் தெரியாத விஷயங்களில் தலையிட்டுக் காரியத்தைக் கெடுப்பது அமர்சௌதுரியின் சுபாவம். தொழிற்சாலையின் விவகாரங்கள் அவருக்கென்ன தெரியும்? அப்படியும் அந்த ஆள் அதிலும் தலையிட்டுக் குட்டையைக் குழப்புவார். என்ன அதிகப் பிரசங்கித்தனம், பாருங்கள்! இருபது வருட அநுபவமுள்ள எனக்கு இந்த ஆள் புத்தி சொல்வதா!''

மேடைக்குப் போகிறவர்களெல்லாருமே இறந்து போன மனிதனைத் திட்டித் தீர்க்கிருர்களே ! நாம்தான் இதை நிறுத்த

'வேண்டும்'' என்று எண்ணியவராக மேடையை நோக்கிப் போனார் அக்கௌண்டண்ட் நாராயண் சாட்டர்ஜி.

அவர் மேடையேறி வருவதைக் கண்ட தொழிற்சாலை சூப்பிரிண்டெண்டெண்ட், பேச்சை நிறுத்திவிட்டு அவரைக் கேட்டார்: ''நீங்களும் பேசப் போகிறீர்களா?''

''ஆமாம்!'' என்று சொல்லிக் கொண்டே ஒலிபெருக்கியின் முன் வந்தார் நாராயண் சாட்டர்ஜி. அங்கு சூழ்ந்திருந்த வாசனைப் புகையை உள்ளுக்கு இழுத்தவாறு அவர் பேசத் தொடங்கினார் :

''சபையோர்களே! நான் இந்தக் கம்பெனியின் அக்கௌண்டெண்ட். இந்தத் தொழிலில் பழமும் தின்று கொட்டையும் போட்டவன். கணக்கில் தகிடுதத்தம் செய்து பகலை இரவாகவும், இரவைப் பகலாகவும் ஆக்க முடியும் என்னால். இறந்து போன அமர்சௌதுரி ஒரு பக்கா அயோக்கியப் பேர் வழி. அவர் சொந்தக் காரியங்களுக்காகக் கம்பெனிப் பணத்தைச் செலவழிக்கத் தயங்குவதில்லை. ஒரு தடவை அவர் தசரா விடுமுறையில் குடும்ப சகிதமாகத் தென் இந்தியா முழுதும் உல்லாசப் பிரயாணம் செய்து விட்டு வந்தார். யார் செலவில் தெரியுமா? கம்பெனி செலவில்! போகும் போது கையில் கம்பெனிச் சரக்குகளின் அட்டவணைகளையும், சில 'சாம்பிள்'களையும் எடுத்துக் கொண்டு போனார். அதனால் அவர் கம்பெனி வேலைக்காகச் சுற்றுப் பிரயாணம் செய்வதாக ஆகிவிட்டதாம் !''

செய்திப் பத்திரிகைகளின் ரிப்போர்ட்டர்கள் மலங்க மலங்க விழித்தார்கள். நேஷனல் ரஸாயனக் கம்பெனி போன்ற ஒரு பிரசித்திபெற்ற ஸ்தாபனத்தில் இப்படிப்பட்ட ஓர் அனுதாபக் கூட்டம் நடந்ததென்று பத்திரிகைகளில் பிரசுரித்தால் அது நாட்டுக்கே அவமானமல்லவா !

அக்கௌண்டண்ட் தொடர்ந்து பேசினார்: ''அமர்சௌதுரி தன் பெண்ணின் கல்யாணத்தை மிக ஆர்ப்பாட்டமாக நடத்தினார். பந்தல் செலவு மட்டும் இரண்டாயிரம் ரூபாய் ஆயிற்று. ஆனால் இந்தப் பந்தல் செலவு முழுதும் கம்பெனிக் கணக்கில் எழுதிவிட்டார். எப்படித் தெரியுமா ? பந்தலின் நான்கு பக்கங்களிலும் கம்பெனியின் சோப்பு பற்பசை, ஹேர் ஆயில் முதலியவற்றின் விளம்பரங்களை மாட்டிவிட்டுப் பந்தல் செலவு முழுவதையும் கம்பெனியின் விளம்பரச் செலவாகக் கணக்கில் எழுதி விட்டார் ! அவருக்கு ஒரு பைசா செலவில்லை. இன்னும் பாருங்கள்........!'' — அக்கௌண்டெண்ட் இன்னும் பேசிக்கொண்டே போனார்.

நேஷனல் கம்பெனியில் கெமிஸ்டாக வேலை பார்த்து வந்த கௌரி சங்கர் மட்டும் இந்த அனுதாபக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. கம்பெனியின் ஆய்வுக்கூடமே அவருடைய உலகம். அப்போது அவருடைய நண்பரொருவர் அங்கு ஓடி வந்து, ''என்ன கௌரி சங்கர் ! அங்கு ஒரே அமர்க்களமாக இருக்கிறது ! நீ இங்கு ஆராய்ச்சியில் ஒரேயடியாக மூழ்கி யிருக்கிறாயே!'' என்றார்.

''அமர்க்களமா ! அதென்ன ?'' என்று விசாரித்தார் கௌரிசங்கர்.

''அமர்சௌதுரியின் மரண அனுதாபக் கூட்டத்தில் பேசுபவர்களெல்லாரும் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு அவரைத் திட்டித் தீர்க்கிறார்கள். அவர்கள் சொல்வ தெல்லாம் உண்மைதான் என்றாலும், இறந்து போன மனிதனை இப்படித் திட்டுவது நன்றாயிருக்கிறதா ? அதில் ஆச்சரியமென்னவென்றால் சபையில் உட்கார்ந்திருப்பவர்கள் மேடைக்குப் போனதும் தங்களை மறந்து அமர்சௌதுரியைப் பற்றிய உண்மைகளைச் சொல்ல ஆரம்பித்துவிடுகிறார்கள்.........''

நண்பரின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த கௌரிசங்கர் துள்ளிக் குதித்தார். அவசர அவசரமாக ஓடி அலமாரியைத் திறந்து ஒரு டப்பாவை எடுத்துப் பார்த்தார். 'பகீ' ரென்றிருந்தது அவருக்கு. உடனே தம் வேலைக்காரன் காளூராமைக் கூப்பிட்டார்.

''ஏண்டா, நான் அன்றைக்கு ஒரு பொடியைக் கொடுத்து இந்த டப்பாவில் போட்டு வைக்கச் சொன்னேனே, அந்தப் பொடி எங்கே? டப்பா காலியாக இருக்கிறதே!''

''அதையா சொல்லுகிறீர்கள்? அன்று டப்பாவில் போடும்பொழுது பொடி கொஞ்சம் கீழே சிந்திவிட்டது அதன்மீது பீடி பற்ற வைக்கக் கிழித்த நெருப்புக் குச்சியைப் போட்டேன். அதிலிருந்து கிளம்பிய வாசனை மிகவும் நன்றாக இருந்தது. ஆகையால் இன்று அனுதாபக் கூட்டத்துக்காக ஹாலை அலங்கரிக்கும்போது மேடையின்மேல் வாசனைப் புகைக்காக வைத்திருந்த கிண்ணங்களில் சந்தனப் பொடியுடன் இதையும் தாராளமாகக் கலந்து விட்டேன்!''

''ஐயோ, குடி கெட்டுப் போய்விட்டதே!'' என்று பதறினார் கௌரிசங்கர். ''அது சாதாரண வாசனைப் பொடி இல்லையடா, காளூ ! நான் மிகக் கஷ்டப்பட்டு ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்த 'சத்திய சூரணம்'! அதை நெருப்பில் போட்டு அதன் புகையை முகர்ந்தால் முகர்ந்தவர் தம்மை அறியாமலே உண்மை பேச ஆரம்பித்து விடுவார். சரி, சரி! வா, என்னுடன் !''

கௌரிசங்கரும் காளூவும் கூட்ட அரங்குக்கு ஓடினார்கள். வாசனைப் புகைக் கிண்ணங்களை அவசரம் அவசரமாக மேடையிலிருந்து அப்புறப்படுத்தினார்கள். சிறிது சிறிதாக மேடையின் மேலிருந்த புகை குறைந்தது....

இதற்குள் அக்கௌண்டெண்ட் தம் பேச்சை முடித்து உட்கார்ந்து விட்டார்.

தாங்கள் முன்பு பேசிய விஷயங்கள் மேடையின் மேலிருந்தவர்களுக்கு மறந்து போய் விட்டன.

கூட்டத்தை முடிக்க எழுந்த தலைவர் துக்கத்தால் தழுதழுத்த குரலில் பேசினார்: ''நமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய திரு அமர் சௌதுரியின் மரணம் நம் நாட்டுக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும். அமர் சௌதுரி ஓர் இலட்சிய வீரர்; ஒழுக்கத்தின் அவதாரம்; அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்ற எங்கள் மனத்தில் அவரது நினைவு என்றும் பசுமையாக நிலைத்திருக்கும். வாழ்க, அமர்சௌதுரி! வாழ்க, அவரது பணி! வாழ்க, அவரது இலட்சியங்கள்!''

தவறாது உபயோகித்தால் போர்ஹான்ஸ் பற்பசை ஈறு உபாதைகளை நிறுத்தி, பற்சிதைவைத் தடுக்கிறது

சிறியோர், பெரியோர் யாவரிடமிருந்தும் தாமாகவே தேடி வந்த நற்சாட்சிக் கடிதங்கள், ஈறு உபாதைகளையும், பற்சிதைவையும் தடுப்பதிலே போர்ஹான்ஸ் பற்பசையின் வியக்கத்தக்க வெற்றியைப் போற்றுகின்றன. இந்த நற்சாட்சிக் கடிதங்களை ஜெப்ரி மானேர்ஸ் & கோ. லிட். கம்பெனியாரின் எந்த ஆபீஸிலும் காணலாம்.

"நான்கு வருடங்களாகத் தவறாது நான் போர்ஹான்ஸ் பற்பசை உபயோகித்து வருகிறேன். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு என் பற்கள் சீர்கெட்டு, துர்நாற்றத்தோடு அடிக்கடி இரத்தமும் வடிந்தது... ஒரு டாக்டர் 'போர்ஹான்ஸ் பற்பசை' உபயோகிக்குமாறு சிபாரிசு செய்தார்...பல் நோய்கள் அகன்று, என் பற்கள் இப்போது மிக நன்றாக உள்ளன".

—'ராமு' கடப்பா.

"கடந்த மூன்று வருடங்களாக உங்கள் போர்ஹான்ஸ் பற்பசையை உபயோகிப்பதால், என் ஈறுகள் வலுவடைந்து ஆரோக்கியமாக விளங்குகின்றன. எனக்கு முன்பு ஈறுக் கோளாறுகளினால் அவதியிருந்தது. ...உங்கள் பற்பசையின் உதவியால் மட்டுமே இப்போது என்னால் சுகமடைய முடிந்தது".

—டி. என். தாஸ், ஷிகார்பூர்.

போர்ஹான்ஸ்

பல் வைத்தியரொருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை

பற்களைத் தக்கமுறையில் பராமரிக்க இரவிலும், காலையிலும் போர்ஹான்ஸ் பற்பசையையும், போர்ஹான்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத் பிரஷையும் உபயோகியுங்கள்... உங்கள் பல் வைத்தியரையும் தவறாது பார்த்து வாருங்கள்!



இலவசம்! "பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்ற வண்ணப் புத்தகம். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் கிடைக்கும். இப்புத்தகத்தைப் பெற, (தபால் செலவுக்காக) 10 பைசா தபால் தலைகளை, இக் கூப்பனுடன் அனுப்புங்கள்: மானேர்ஸ் டெண்ட்டல் ப்யூரோ, தபால் பை 10031, பம்பாய் 1.

K-6

பெயர் ____________________

விலாசம் ____________________

____

மொழி ____________________

95F-202 TAM



தூங்கும் பிரயாணியுடன் ஒரு பேட்டி!



நமது கற்பனை நிருபர் ரயில்வே பட்ஜெட்டைப் பார்த்து விட்டு, இரவு மெயில் வண்டி ஒன்றில் தாவி ஏறிக்கொள்கிறார்.

அவர் ஏறிக் கொண்ட பெட்டி ஒரு மூன்று அடுக்கு உறங்கும் பெட்டியாக அமைந்து விடுகிறது.

குறட்டை ஒலியைப் பலவித சிற்றலைகளில் 'பிராட்காஸ்ட்' செய்து கொண்டிருக்கிறார் ஒரு பிரயாணி. அவருடைய 'கர்ர்ர்ர்...புர்ர் கொக் கொக் கொர்...' நிகழ்ச்சிகளின் விளைவாகச் சில சக பிரயாணிகள் உறக்கம் இழந்து படுத்தவாறே கொட்டுக் கொட்டென்று விழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

விழித்துக் கிடக்கும் பிரயாணிகளில் ஒருவர் நிருபரைப் பார்த்துவிட்டு, ''யார் சார் அது?'' என்று கேட்கிறார். நிருபர் தாம் யார் என்பதைச் சொன்னதும், ''ஓஹோ! அப்படியா? உங்களுக்குப் புண்ணியமாக இருக்கட்டும். அந்தக் குறட்டை ஒலி நிகழ்ச்சியாளரை எழுப்பி, அவரைக் கேளுங்கள்'' என்றார்.

நிருபர்: சார், சார்!

குறட்டைப் பிரயாணி: ஊம்ம்ம்...! கர்... பொர்.... கர்.... த்சொ, சொ, 'சொ... யார் அண்ணாச்சி அது? டிஸ்டர்ப் பண்றீங்க...? டிக்கட்தானே?.... கர்புர்....!

நிருபர்: டிக்கெட் இல்லேங்க சார், பேட்டிக்கு வந்திருக்கிறேன். ஒரு நாலு கேள்வி போடலாம்னு வந்திருக்கிறேன். ரயில்வே பட்ஜெட் பார்த்தீங்களே... எப்படி? கட்டணம் எல்லாம் உயர்த்திட்டாங்களே, உங்க அபிப்பிராயம் என்ன?

குறட்டைப் பிரயாணி: கட்டணங்களை உயர்த்துவது இனி நடக்காது. இப்போதே கட்டணம் ரொம்ப உயர்வு தான். இதை இன்னும் எப்படி உயர்த்த முடியும்? சும்மா பயப்படாதீங்க. அவங்களாலே உயர்த்த முடியாது.

நிருபர்: உயர்த்தப் போவதாகப் பார்லிமெண்டிலே அறிவித்திருக்காங்க சார்.... இருபத்தேழு கோடி பட்ஜெட்டிலே துண்டு விழுந்திருக்கிறதாம். அதைச் சரிக்கட்ட எல்லா முனைகளிலும் கட்டணங்களை உயர்த்திவிடப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். தூங்கும் பலகைக்குக்கூட கட்டணம் அதிகரித்து விடுகிறது.

குறட்டைப் பிரயாணி: மக்கள் பிரயாணத்துக்குக் கட்டண உயர்வு என்பது இனி கொள்ளை யடிப்பதற்குச் சமான மாகும். விழித்துக் கொண்டிருக்கிற பிரயாணியினிடமே கட்டணக் கொள்ளை அடிக்கிறவங்களுக்குத் தூங்குகிற பிரயாணியிடம் கொள்ளையடிப்பது சுலபமாகத்தான் இருக்கும். அதனால் எல்லோரும் விழிப்புடன் இதை எதிர்க்க வேண்டும். கட்டண உயர்வுச் சுமை இனி தாள முடியாது... சக பிரயாணிகள் அனைவரும் இவ்விஷயத்தில் விழிப்புடன் இருக்க வேண்டும்.

சக பிரயாணி ஒருவர் (தட்டில் படுத்தபடியே): கவலைப்படாதீங்க சார்... நாங்கள் விழித்துக்கொண்டிருக்கிறோம். தூங்குவதற்கென்று பணத்தைக் கொட்டிக் கொடுத்துவிட்டுத் தங்களுடைய குறட்டை ப்ரோகிராம்களின் உதவியால்.... விழிப்புடனேதான் இருந்து வருகிறோம். நீங்கள் நிம்மதியாகத் தூங்குங்கள்.

— ''கதிர்''

(பொசிநோ: நீலகண்டன் வீட்டு முன் வராந்தாவில் அவர் பத்திரிகை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒரு பஞ்சாபி இளைஞன் தாடி, தலைப்பாகையுடன் எட்டிப் பார்க்கிறான்.)

இளைஞன்: நமஸ்தே சாப்! நமஸ்தே...

நீலகண்டன் (பேப்பரை விலக்காமலேயே வந்திருப்பவர் யாரென்று தெரிந்துகொள்ளாமல்): நமஸ்தே! நமஸ்தே!...இதென்னது பிரும்மபுத்திராவிலே வெள்ளம் வருகிற மாதிரின்னா பிரசிடெண்ட் ரூல் ஒவ்வொரு ஏரியாவிலேயும் நுழைகிறது!...

இளைஞன்: சாப்!... சாப்!...

நீலகண்டன் (பேப்பரை விலக்காமலேயே): ஆமா!... சாப்பாடுதான்!... சீப்மினிஸ்டர்களையெல்லாம் அவர்களுடைய கட்சிப் புகைச்சலே சாப்பிட்டு விட்டது!...சோ... பிரசிடெண்ட் ரூல் கம்ஸ்...

இளைஞன்: • பிரசிடெண்ட் சர்டிபிகேட் இதர் ஹை!



ஒருமைப்பாடு ஷீடு

கோமதி சுவாமிநாதன்

நீலகண்டன் (பத்திரிகையை விலக்காமலேயே): பிரசிடெண்ட் சர்டிபிகேட் யாருக்கு வேணும்! சென்ட்ரல் மினிஸ்டரி ரெகமெண்ட் பண்ணணும்!

இளைஞன்: மினிஸ்டர் ரெகமெண்டேஷன் ஹை! ஹை!

நீலகண்டன்: என்னேயா மாடு விரட்டறே ஹை ஹைன்னு! (பத்திரிகையை விலக்கிப் பார்த்துத் திடுக்கிட்டு) ஓ!... மிஸ்டர் பல்தேவ் சிங்கைத் தேடறீங்களா?...இப்படியே மாடிக்குப் போங்களேன்!... வேண்டாம்! நானே கூப்பிடறேன். (மாடிப் பக்கம் பார்த்து)..மிஸ்டர்பல்தேவ்சிங்!மிஸ்டர்சிங்..

(பல்தேவ் சிங் மாடிப் படிகள் வழியாக இறங்கி வருகிறார். தாடிக்கார இளைஞரைப் பார்த்தவுடன் திரும்பி வேகமாக மேலே போகிறார்.)

இளைஞன் (ஆங்கிலத்தில்): நான் யாரையும் தேடி வரவில்லே சாப்! உங்களைப் பார்க்கத்தான் நிற்கிறேன். கைரேகை பார்த்து ஜோசியம் சொல்லுவேன். கோணலூர் பஞ்சாயத்து போர்ட் பிரசிடெண்ட் பஸ்டு கிளாஸ் சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்... பழைய மினிஸ்டர் பால்வண்ணன் சர்டிபிகேட் இருக்கு!... இதோ பார்க்கிறீர்களா?

(கையிலிருக்கும் புத்தகத்தை விரிக்கிறான்.)

நீலகண்டன்: ஓ! மைகாட்... வேண்டாம் அப்பா!... எனக்கு இப்போ ஜோசியம் பார்க்காமலே எல்லாம் தெரியும்!... நீ ஜெயம் பறயா?

இளைஞன்: மாஸ்டர்!... இப்போ உங்களுக்குக் கல்யாணக் கவலே...

நீலகண்டன்: இப்பவா எனக்குக் கல்யாணக் கவலே? இருபத்தி ஏழு வருஷங்களுக்கு முன்னாலே நான் எப்போ கல்யாணம் பண்ணினேனோ அப்பவே முதல் எனக்குக் கவலேதான்!... சந்தோஷமாவா குடும்பம் நடத்தறேன்?

இளைஞன்: இல்லே 'மாஸ்டர்! உங்க குழந்தைகள் கல்யாணம்...

நீலகண்டன்: அபாண்டம்! அபாண்டம்! அதைப் பற்றி நான் கொஞ்சம் கூட நினைத்தே பார்ப்பதில்லே. பழைய கவலேகள் நிறைய இருக்கும்போது புதுக் கவலேகளை வாங்கி நான் ஸ்டாக் பண்ணுவதில்லே! மனசிலே 'ஸ்டோரேஜ் ஸ்பேஸ்' இல்லே.

(கன்யாலால் எட்டிப் பார்க்கிறார்.)

இளைஞன்: பாபூ! ஆயியே! ஆயியே!

கன்யாலால்: ஜாவோ! ஜாவோ!...இந்தாப்பா!... நீ ஏன் நேரத்தை வீணாக்கிக்கிட்டு இங்கே நிக்கறே! இங்கே யாரும் உன் கிட்டே ரேகை பார்த்துக் கொள்ளும் நாட்டமே இல்லே!

நீலகண்டன்: இன்னொரு தடவை ஓங்கி அழுத்தமாகச் சொல்லுங்கள் கன்யாலால்ஜீ!

'கன்யாலால்: ஆமா!, இதோ இருக்கிறாரே புரொபசர்ஜீ! இவரே ஒரு படா ஜோசியர்! உனக்கு இங்கே வேலே இல்லே.

(இளைஞன் முகவாட்டத்துடன் போகிறான்.)

நீலகண்டன்: வெரி குட்! வெரி குட்.... ஆனால் நான் பயந்து போயிட்டேன் சேட்ஜீ!

கன்யாலால்: எதற்காக?

நீலகண்டன்: வேறே ஒண்ணும் இல்லே! நீங்க சொன்னதை நம்பி அந்த ஆசாமி தன் கையைப் பார்க்கச் சொல்லி என் முன்னாலே நீட்டினா நான் முழிச்சிருப்பேனே...

(பல்தேவ் சிங் வருகிறார்.)

பல்தேவ் சிங்: அந்த ஆசாமி போயாச்சா?

நீலகண்டன்: அப்பவே கொசு மாதிரி பறந்து போயிட்டான். நம்ப கன்யாலால்ஜி பிளிட் பம்பு மாதிரி வந்து விரட்டிட்டார்! அது சரி! நீங்க ஏன் அந்த ஆசாமியைப் பார்த்து அப்படிப் பயந்து நழுவினீங்க?

கன்யாலால்: இருக்கும், இருக்கும்! ஏதாவது படான்கோட், ஜாதியானு உறவைச் சொல்லிக் கொண்டு ஆசாமி சப்பாத்திக்கு உட்கார்ந்துவிடுவாரோ என்ற பயமாக இருக்கலாம்!

(சாட்டர்ஜி வருகிறார்.)

சாட்டர்ஜி: ஐ எக்ரி வித் யூ!

நீலகண்டன்: வாங்கோ! வாங்கோ!... எதற்கு 'எக்ரி' பண்ணறீங்க?

சாட்டர்ஜி: அதுதான் அந்தச் சபாபதி விஷயம்! காண்ட்ராக்டா வேலேயை முடிச்சுக் கொடுத்துவிட ஒப்புக் கொண்டுவிட்டான்.

நான் செகண்ட் ஹாண்டிலே வாங்கின ஆறு நாற்காலிகளையும் ரிப்பேர் பண்ணிவிடக் கூலி பேசிவிட்டேன்.

நீலகண்டன்: கோவிந்தா! கோவிந்தா!

கன்யாலால்: அது யாரு புது ஆசாமி?

நீலகண்டன்: ரொம்பப் பழைய ஆசாமி! திருப்பதி வேங்கடாசலபதியைக் கூப்பிட்டேன்!... நாங்க சப்பாத்தின்னு சொல்லிக்கிட்டிருந்தோம். உடனே நீங்க சபாபதியைத் தூக்கிச் சப்பாத்தி மேலே போட்டீங்க!

கன்யாலால்: பல்தேவ் சிங்ஜீ ஜோசியக்காரரைப் பற்றிச் சொல்லவே யில்லே... உறவோ என்னவோ...

பல்தேவ் சிங்: நத்திங் நத்திங்... எனக்கு ஜோசியம்னு கொஞ்சம் பயம். அவன் என்னத்தையாவது சொல்லி வைப்பான். நம்ப மனசு அலட்டிக் கொள்ளும். இன்று செய்ய வேண்டியதை மறந்து விடுவோம்!

நீலகண்டன்: ரொம்பக் கரெக்ட். எனக்கும் அதே அபிப்பிராயம்தான். எதிர்காலம்



மிஸ்டரியாக, மர்மாக இருப்பதிலேதான் சுவை இருக்கிறது. என்ன நடக்கும், என்ன வரும் என்று தெரிந்து கொண்டால் இன்டரெஸ்ட் போயிடும்!

பல்தேவ் சிங்: அச்சா புரொபஸர் சார்! போன வருஷம் ஒரு ஜோசியன்கிட்டே மாட்டிண்டேன்!... 'ஒரு வாரத்திலே உமக்கு விபத்து ஏற்படும், ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்' என்று சொல்லி வைத்தான்.

கன்யாலால்: நீங்க விட்டை விட்டே வெளியே போகாமல் உட்கார்ந்திருந்தீரா?

நீலகண்டன்: கடைசியிலே பாத்ரூமிலே வழுக்கி விழுந்திருப்பார்.

பல்தேவ் சிங்: அப்படி ஏதும் விழுந்திருந்தால் மனசுக்கு ஒரு திருப்தி இருக்குமே! ஏதோ கண்டம் வந்தது. இலேசாகத் தப்பித்தோம் என்று...

சாட்டர்ஜி: என்ன ஆயிற்று?

பல்தேவ் சிங்: ஒரு வார காலம் பூப்போல் அடிமேல் அடி வைத்துப் பிளாட்பார ஓரத்தில் நடந்து, பஸ் நடுவில் உட்கார்ந்து, ரொம்ப ஜாக்கிரதையாக இருந்தேன். வாரம் போயிடுத்து!... அப்புறம் ஒரு சந்தேகம் வந்துடுத்து. ஜோசியன் ஒரு வாரம்னுதானே சொன்னான்? எந்த வாரம்னு சொல்லலியே. குறிப்பிட்ட அந்த வாரம் இன்னும் வரவில்லையோ என்று பயந்து நடுங்கிக் கொண்டே யிருக்கிறேன்....

சாட்டர்ஜி: வெரி குட்! வெரிகுட்!... நான் வேறே விதமாக இந்த ஜோசிய வேதனையை அனுபவிச்சேன்.

நீலகண்டன்: சொல்லுங்கோ, கேட்போம்!

சாட்டர்ஜி: ஒரு பஞ்சாபி ஜோசியன் ஓர் ஆஞ்சநேய கவசத்தைத் தள்ளிவிட்டு இரண்டு ரூபாய்களையும் வாங்கிக் கொண்டு எதிர்பாராம ஒரு கிழவியோட சொத்து வந்து சேரும்னு சொல்லி வைச்சான். ஜோசியம் 'சென்ட் பர்ஸென்ட்' பலித்தது....

நீலகண்டன்: வாட்! வாட்!... எவ்வளவு வால்யூ?

சாட்டர்ஜி: வால்யூவுமாச்சு, வால்யூமுமாச்சு! கேளுங்க கதையை! உடனே ரயிலிலும் பஸ்ஸிலும்) ;) . ளுக்கு மதிப்புக் கொடுக்க முயன்றேன். அ) போதுதான் வருங்கால மாமியாரின் கண்களில் பட்டுத் தொலைத்தேன்!.... தன் பெண்ணைத்தான் சொத்தாக என் தலையில் கட்டி வைத்தாள்! அவளே மீதிச் சொத்தாக என் குடும்பத்துடன் ஐக்கியமாகி விட்டாள். போதுமா?

நீலகண்டன்: மார்வலெஸ்! மார்வலெஸ்! மனிதாபிமானமே உம்மை விட்டுப் போயிருக்குமே....! நீங்க என்னவோ இப்படிச் சொல்றீங்க!.... இன்னிக்கு இந்த மெட்ரூனிலே பொசிஷன் என்ன தெரியுமோ ?

கன்யாலால்: காலேஜுகள், பள்ளிகள் முதலியவற்றிலெல்லாம் ஜோசியப் பாடமும் சொல்லித் தரணும்னு மாணவர்கள் ஸ்ட்ரைக் பண்றாங்களா ?

நீலகண்டன்: உமக்கு இதே ஞாபகம் !.... நான் சொல்றது வேறே ! இன்னிக்கு இந்த ஊரிலே, ஜோசியம் சொல்றவங்க எத்தனை பேர் இருக்காங்களோ, அத்தனை பேர் கேட்கறவங்க இருக்காங்க....! சொல்றவங்க ஜாஸ்தியாகவே இருப்பாங்கன்னு தோணுது.

பல்தேவ்சிங்: ஜனங்களுக்குத் தன் எதிர் காலத்தைப் பற்றி அவ்வளவு குழப்பம் ?

நீலகண்டன்: இன்றைக்குச் செய்யும் காரியத்தை ஒழுங்காகச் செய்து விட்டால் நாளையைப் பற்றிய பயம் இருக்காதே! இவங்க தான் 'இன்றைக்கு' என்பதில் அக்கறையே செலுத்துவதில்லையே !.... என்னை எடுத்துக் குங்கோ!.... இந்தப் பத்திரிகைகளில் சிலவற்றில் ஜோசியப் பகுதி, வார, மாத பலன் வரும்.....! நான் அந்தப் பக்கம் வர்ற போது கண்களை மூடிக் கொண்டு பக்கத்தைத் தள்ளிவிடுவேன்......

சாட்டர்ஜி: உங்களுக்கும் பயம்தான் என்று சொல்லுங்கள்.

நீலகண்டன்: பயம்னு இல்லே!.... தேவையில்லேன்னு பொருள்.

(நீலகண்டனின் பையன் வேணு வேகமாக வெளியிலிருந்து வருகிறான்.)

வேணு: அப்பா !.... இங்கே ஒரு பஞ்சாபி ரேகை சாஸ்திரக்காரர் வந்தாரா?

நீலகண்டன்: வந்தான் ! 'திரும்பிப் போ'ன்னு கறுப்புக் கொடி காண்பித்து அனுப்பிச்சுட்டேன் !

வேணு: என்னப்பா ! அவசரப்பட்டுட் டீங்க ! அவர் ஓர் இருபதாம் நூற்றாண்டு வொண்டர் ! அவர் நல்ல பலன்களைத்தான் சொல்லுவார். அப்படிச் சொல்ல முடியாத இடங்களை அணுகவே மாட்டாராம்! என் முகத்தைப் பார்த்துவிட்டு, இந்த வீட்டுக்கே நல்ல பலன்கள் உண்டு என்றார். நான் வரச் சொன்னேன்.

நீலகண்டன்: உன் முகத்தில் வழியும் அசடு என் கண்களுக்கு மாத்திரம்தான் தெரியுமா ? அவனுக்குத் தெரியாதா ?...

வேணு: போங்க அப்பா!.... அவர் ஆஞ்சநேய உபாசி..... உங்களுக்கு வெளி நாடு போக வாய்ப்பு இருக்கும் என்று சொன்னான்.....

நீலகண்டன்: அப்படியா?.... பாருடா ! இந்தத் தெரு முனையிலே அந்த ஜோசியர் இருக்காரான்னு....

சாட்டர்ஜி, கல்யாணம்: வேணுஜீ.... கூப் பிடு.... நாங்களும் கேட்கிறோம்.....

(காட்சி முடிவு.)

யமனுக்கு ஓய்வு!



நாம் சந்திக்க நினைத்த மனிதர் எதிர் பாராதவிதமாக நம் எதிரே வந்து நின்றால், ''அட ! உம்மைத்தான் நினைத்தேன். வந்து விட்டீரே ! எமன் இளிச்சவாயனாயிருந்தால் உமக்கு ஆயுசு நூறு !'' என்று வாயார வாழ்த்துவோம். இந்த யமன் கொஞ்ச காலம் ஓய்வெடுத்துக் கொண்டு உலகுக்கு இறவா வரம் கொடுத்தால் எப்படியிருக்கும்? அந்தக் காட்சிகளைக் காணவும் எமனே வந்து நின்றால் ? பலதரப்பட்ட மக்கள் மன ஓட்டத்தைக் குத்தல் மொழியில் புதுமையான முறையில் வழங்கி 'இறவா வரம்' நாடகம் தொடருகிறது. உலகம் முழுதும் சாவே இல்லாதது புரட்சியை ஏற்படுத்துகிறது. கடைசியில் 'மரணம் வேண்டும்! மரண தேவனே! வா!' என்றே மக்கள் பிரார்த்தனை புரியத் தொடங்கி விடுகின்றனர். கதாபாத்திரங்களின் மன இயல்புகள் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன இந்த நாடகத்தில்.

இசை அமைப்பு: டி. ஆர். பாப்பா. இந்த நாடகத்துக்கு அவர் உயிரூட்டியிருக்கிறார். ஹாஸ்யரஸத்தை இன்னும் அதிகமாகவே அங்கங்கே வழங்கியிருந்தால் நாடகம் பூரண வெற்றி பெற்றிருக்கும். இந்த நாடகத்தை எழுதியவர் ஸ்ரீ டி. என். விசுவநாதன். தயாரித்தளித்தவர் குஹன். நடித்தவர்கள் பிரசித்திபெற்ற நடிகர்களில்லையாயினும், தங்கள் நடிப்பினால் நாடக வெற்றிக்கு உதவியுள்ளார்கள். 'இறவா வரம்' நாடகம் புதுமையான கருத்துடன் ரேடியோ நாடக விழாவில் இடம் பெற்றது. இந்த நாடகம் தவிர 'துரோணர்', 'ஒரே குழந்தை', 'மனச் சாயை' ஆகிய நாடகங்களும் 'ரேடியோ நாடக விழா'வில் இடம் பெற்றன.




MYSORE SANDAL
OIL



ஈடேறிய விருப்பம்

எஸ். ரங்கநாயகி

விவாக தினத்தன்றே கூடியிருந்தோர் ஒருமிக்க கூறியது எனக்கு இன்றும் நினைவிருக்கிறது. "சுசீலா! உனக்கு வாய்த்திருப்பவர் பரமசாது போலிருக்கிறதே! உனக்குச் சரியான இடம்தான்!"

அப்பாகூடச் சொன்னாரே, என் அம்மாவிடம், "நம்ப சுசிக்குச் சரியான வரனைத் தேடிப் பிடித்து விட்டேன், பார்த்தாயா? இந்த வாயாடியை எவன் கட்டி மாரடிக்கப் போகிறானோ என்று கவலைப்பட்டாயே, இனி இவள் வைத்தது சட்டம்" எனக் கூறிவிட்டு என்னைப் பார்த்துச் சிரித்தபடி கேட்டார். "எத்தனை தோப்புக்கரணம் போடச் சொல்லுவாய்?"

"தேகப் பயிற்சிக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு!" என்றேன் நானுமே.

"ஆளே இளைத்த செட்டில் சேர்க்கை. நீ வேறு தேகப்பயிற்சி அது இது என்று ஆரம்பித்து விடாதே" - தங்கை பானு கூறினாள்.

என் கணவர் காதுபடவும் இது போன்ற பரிகாசப் பேச்சுக்கள் விழும் போது அவர் என்னை நோக்கிப் புன்முறுவல் பூக்கிறார். வெட்கம் என்னைத் தலை குனிய வைக்கிறது.

"அப்பாடியோவ், சுசீலாகூடத் தலைகுனியக் கற்றுவிட்டாளே!" - அக்கா உமா கூறிய சொற்கள்.

ஏன் தலை குனிந்தோம் என்று எனக்குக் கூட முதலில் புரியவில்லை. ஆனால் மணமேடைக்கும், பெண்களுக்கான இந்த நாண உணர்ச்சிக்கும் பெரிதும் சம்பந்தம் உண்டு என்று மனம்தான் புரிய வைத்தது.

என் விவாகத்தை அப்பா கோலாகலமாக நடத்தி வைத்து விட்டார். உமாவின் விவாகத்தைவிட இரண்டு மடங்கு அதிகச் செலவுடன் நடந்தது. நான் ஏதாவது குறை சொல்லிச் சண்டைக்கு இழுத்துவிடுவேனோ என்று அப்பாவுக்குப் பயமாம். அதனால் தான் விமரிசையாக விவாகத்தை நடத்தி விட்டாராம் — அம்மா உமாவிடம் அப்படித் தான் சொல்லிக் கொண்டிருந்தாள். பெண்களுக்கிடையே இதென்ன பேதபாவம் என உமா குறைப்பட்டுக் கொள்ளப் போகிறாளே என்று அம்மா அவளைச் சமாதானம் செய்தாளா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அப்பா என் விவாகத்தைச் சிறப்பாகச் செய்திருக்காவிடில் எனக்குக் குறையாகத் தான் இருந்திருக்கும். வாழ்வில் ஒரே ஒரு நாள் இக்கோலாகல நிகழ்ச்சிக்குக் காரண கர்த்தாவாக மையமாக இருக்கும் பெண்ணுக்காக அப்பா செலவு செய்து அந்தப் பெண்ணுக்கு இன்பம் தருவதில் என்ன தவறும்? உமாவுக்குக் கேட்கத் துணியவில்லை. அதற்கு நான் என்ன செய்யட்டும்? பெற்றோரில்லாத உமாவின் கணவனாவது கேட்டிருக்க வேண்டும்.

அப்பா கெட்டிக்காரர்தான். கடலூரிலிருந்து கொண்டே இரு பெண்களின் விவாகத்தை எளிதாக முடித்துவிட்டதோடு இரு மாப்பிள்ளைகளையும் சாதுப்பிள்ளைகளாகப் பிடித்து விட்டார். உமாவுக்குச் சென்ற வருடம்தான் விவாகமாயிற்று. சென்னையிலேயே வேலையாக இருந்த அவள் கணவன் சந்திரனுக்குப் பெற்றோர்களோ, உடன் பிறந்தவர்களோ கிடையாது. அதனால் உமாதான் குடும்பத் தலைவி. எனக்கு அப்படி இல்லை. கணவருக்குப் பெற்றோர் உண்டு. தமையன், மன்னி உண்டு. எல்லோரும் ஒரே வீட்டில் ஒரே குடும்பமாக வாழ்பவர்கள். உடன்பிறந்த ஒரே சகோதரி டில்லியில் கணவனோடு குடித்தனம் செய்து கொண்டிருப்பவள். தனிக் குடித்தனத்துக்கு ஆரம்பமில்லைதான். அதனால் என்ன, நான் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை. உமாவைப் போல் வீட்டு விசாரம், ரேஷன் வாங்கும் படலம், கிடைக்காத பண்டங்களுக்குப் பிளாக் மார்க்கெட் தேடுதல் இந்த வேலையெல்லாம் இருக்காதே. மாமியார் நல்ல வேளையாகப் படு ஆசாரமாம். அதனால் சமையல் வேலை கையில் விழாது. காலை ஒரு பத்திரிகை படித்தால், பிற்பகல் வேளைக்கு லேடீஸ் கிளப், தையல் வகுப்பு, சம்ஸ்கிருத வகுப்பு என்று ஏதோ பொழுதுபோக்கு இல்லாவிடில் இதெல்லாம் உருப்படியாகக் கற்கப் போகிறேனாக்கும் — மாலை கணவருடன் வெளியிடங்களுக்குச் சுற்றிவரச் சௌகரியமாக இருக்கும். குழந்தை குட்டிகள் இருந்தால் தாத்தா பாட்டியிடம் சீராடப் பழக்கிவிட்டால், அந்தத் தொல்லையும் விட்டது.

விவாகம் முடிந்த அந்த மாதமே கடலூரிலிருந்து சென்னைக்குக் கணவர் வீட்டுக்கு வந்து விட்டேன். என்னைப் பார்க்க வந்தவர்கள் எத்தனையோ பேர்கள். சிலர் மாமியாரிடம் இரகசியமாக, "லட்சணமான பெண்ணாக இருக்கிறாள். நம்ப மூர்த்தியின் அழகுக்கு ஏற்ற பெண்தான்" என்று என்னைப் பற்றி விமரிசித்தனர்.

என் கணவர் அப்பாவி. அவர் அண்ணா வாசுவும், மன்னி ராஜியும் அந்த வீட்டிலேயே இருந்து கொண்டு தங்கள் பணிகளுக்கும் உல்லாசப் பொழுதுக்குமே முழு நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருந்தனர். ராஜியின் பெற்றோர்களும் சென்னையிலேயே இருந்தனர். அடிக்கடி அவள் பிறந்த வீட்டுக்குப் போவாள். அவளுடைய உடன் பிறந்தவர்களும் பெற்றோர்களும் அவளைப் பார்க்க வருவ

தும் உண்டு. அந்த வீட்டில் பிறந்த பெண்ணாக ராஜி நடந்து கொண்டாள். என் மைத்துனர் கெட்டிக்காரர்; பிடிவாதக்காரர். மனைவியின் போக்குக்கு விட்டுக் கொடுத்தாலும் சில முறைகள் தம் பிடிவாதத்தில் உறுதியாக நடந்து கொள்வார்.

அப்படித்தான் அன்று ஒரு புதிய படம் ரிலீஸாகி இருந்தது. பிரபல நடிகர்கள் நடித்தது. அப்படத்துக்கு அன்றே போகவேண்டுமென ராஜிக்கு ஆசை. ஆனால் என் மைத்துனரோ ரிலீஸான தினமே போகக் கூடாது எனப் பிடிவாதம் பிடித்தார். ஏனெனில், டிக்கெட்டு கிடைப்பது கஷ்டம். ''கறுப்பு மார்க்கெட்டில் இரண்டு பங்கு கொடுத்து வாங்கிப் பார்க்க அப்படி என்ன ஆத்திரம்?'' என்றார். ''கடைசியில் எவனாவது படம் நன்றாக இல்லை என்று வேண்டுமென்று விமரிசனம் எழுதி வைப்பான். அதை வைத்துக் கொண்டு நீங்கள் அழைத்தே போகமாட்டீர்கள்'' என ராஜி வாதம் செய்தாள். மாமியாரும் மாமனாரும் இந்தச் சண்டையைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தனர். வாய் திறக்க வேண்டுமே, ஊஹூம், பிள்ளை பாடு மாட்டுப் பெண் பாடு என்று இருந்துவிட்டனர். பல கட்டங்களில் அவர்கள் பெரிய பிள்ளையிடம் இப்படித்தான் இருந்து விட்டனர். மைத்துனருக்குத்தான் வெற்றி. கஞ்சப் பிரபு என்று நான் சொல்லிக் கொண்டேன்.

என் கணவர் நான் வந்தது முதல் என்னிடம் அன்பாக இருந்தார். மாலையில் கையில் கதம்பம் இருக்கும். இன்னும் நிறைய வாங்கி வரக் கூடாதோ என எனக்கு ஆவல். ஒரு தினம் அவரிடம் கேட்டு விட்டேன்: ''தலை நிறைய வைக்கும்படி வாங்கி வந்தால் மணக்க மணக்க இருக்குமே. குறைந்தது நான்கு முழமாவது வேண்டாமா?'' என்று. எனக்குச் சாட்டைபோல் அடர்த்தியாக முழங்கால் வரை நீண்டு மயிர் இருந்தது.

அவர் மெள்ளப் புன்முறுவல் பூத்தார். என்னைக் கண் குளிரப் பார்த்தார்.

''உங்களுக்கும் விருப்பமும் ஆசையும் இருந்தால் வாங்கி வாருங்கள். நான் கட்டாயப்படுத்தவில்லை'' என்றேன்.

''ஆசை! விருப்பம்!'' எனக் கூறிவிட்டு அவர் நிறுத்தினார். ''கஸி, எனக்கு எத்தனை ஆசைகளும் விருப்பங்களும் இருக்கின்றன, தெரியுமா? அவையெல்லாம் நிறைவேறத்தான் வழியில்லை.''

எனக்கு அப்போது அவர் பேச்சு புரியவில்லை. ஆனால் அவர் எத்தனை ஆசைகளை அடக்கி வைத்திருக்கிறார் என்பதை அறிந்து என் மனம் மட்டும் மகிழ்ச்சி அடைந்தது. அப்படிப்பட்ட அப்பாவி இல்லை. மனைவிக்கு எத்தனையோ செய்ய ஆசைப்படும் கணவராகத்தான் இருக்கிறார் என்ற திருப்தி.

மறு நாள் நான் பல் துலக்கிவிட்டு உள்ளே வந்து கொண்டிருந்த போது என் கணவர் தன் அம்மாவிடம் கூறிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது. ''அம்மா, கஸிலாவுக்கு நாலு முழமாவது கதம்பம் வேண்டுமாம்'' என்கிறார்.

''அதற்கென்னப்பா, குழந்தை ஆசைப்பட்டால் ஆறு முழம் வேண்டுமானாலும் வாங்கிக் கொடேன். நீ சந்தோஷமாக இருக்கணும். அதற்காகத்தானே அழகான பெண்ணைப் பார்த்து விவாகம் செய்து வைத்தோம்'' என்கிறார் மாமியார்.

நான் நின்ற நிலையில் அப்படியே நிற்கிறேன். இப்படி அம்மாவிடம் போய்ச் சொல்லி வைக்கிறாரே இந்தப் புருஷன், அப்பாவித்தனம் என்பதா, பயந்த தன்மை என்பதா! என் மைத்துனராக இருந்தால் இப்படி அனுமதி கேட்டுக் கொண்டு நிற்பாரா!

அன்று மாலை கதம்பம் ஒரு கட்டே வந்து விட்டது.

''எனக்கு வாங்கித் தர உங்களுக்கு விருப்பமும் ஆசையும் இருக்கும் போது அம்மாவின் அனுமதி வேண்டுமா?'' என்று சண்டை போடுகிறேன். மீண்டும் புன்சிரிப்பு, மீண்டும் அதே பதில். ''என் ஆசைகளெல்லாம் நிறைவேறத்தான் வழியில்லையே!''

பெற்றோர்களுக்கு அடங்கி அடங்கியே பழகிவிட்ட தோஷம், எதற்கும் அம்மாவைக் கேட்க வைத்து விடுகிறது.

தினமும் நான் அவருக்குத் துணிவு பாடத்தைப் போதிக்க ஆரம்பித்து விட்டேன். ''உங்கள் ஆசையை நிறைவேற்றிக் கொள்ளக் கூடவா உங்களுக்கு உரிமை கிடையாது? இனியும் இப்படி இருக்கக் கூடாது. நான் பக்கபலமாக இருக்கிறேன். துணிவைக் கடைப் பிடியுங்கள். பயந்து பயந்து வளர்ந்துவிட்ட கதை இது.''

''அப்படிச் செல்ல முடியாது கஸி. சில வருடங்களாகத்தான் இப்படி நிற்கும்படி செய்து விட்டார்கள்.''



"கல்யாண வயது வந்ததும் பெண்டாட்டி தாஸனாகிவிடப் போகிறானே என்று தங்கள் கைக்குள் உங்களை நிறுத்திக்கொள்ளப் பழக்கி உங்கள் அப்பாவித்தனத்தைப் பயன்படுத்திக் கொண்டு விட்டார்கள். உங்கள் அண்ணாவிடம் அவர்கள் இட்டம் பலிக்கவில்லை. அவர் என்றைக்குமே அடங்காதவர்."

என் கணவர் அதிகமாக இந்த வாக்கு வாதத்தில் இறங்குவதில்லை. ஆனால் எதை வாங்க வேண்டுமானாலும் அம்மாவையோ அப்பாவையோ அனுமதி கேட்பதை மட்டும் நிறுத்தவில்லை. எனக்கு மாமியார் மாமனாரிடம் எரிச்சல் கூட்டல் நிலையில் பெருகிக் கொண்டு போகிறது.

என் அம்மாவுக்கு இதையெல்லாம் எழுதினால், "அதனால் என்ன சசி, உனக்குப் புடவையோ, மற்றப் பொருளோ கிடைக்காமல் இல்லையே!" எனப் பதில் எழுதுகிறாள்.

நானும் மறுக்கவில்லை. புடவையும் மற்றப் பொருள்களும் என் கணவர் கொண்டு தரும்போது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது? நீல நெக்லஸ் ஒன்று எனக்கு அன்பளிப்பாகக் கிடைத்தபோது பெருமை பிடிபடவில்லை. ஆனால் அதன் பின்னே ஒட்டி நின்ற சூத்ரதாரியை நான் அறிந்தபோது சதவித மகிழ்ச்சியில் சில எண்கள் பள்ளத்தில் விழுந்து விட்டன.

அன்றைக்கு ஒரு நாள் ஆழ்ந்த சிவப்பில் நைலக்ஸில் ஜரிகைப் பூ வேலைப்பாடு அமைந்த ஒரு புடவையை அவர் எனக்குப் பரிசாகக் கொண்டு வந்து தந்ததும் என் குதூகலம் கட்டுமீறிச் சென்றது. அதை அப்போது உடுத்திக் கொண்டு ஸ்வாமி படத்தை நமஸ்கரித்தேன். பக்கத்திலிருந்த மாமியாரைப் புறக்கணிக்க முடியவில்லை. அவரையும் நமஸ்கரித்துவிட்டு எழுந்தபோது, "திருஷ்டி விழுந்துவிடும்போல் இருக்கிறது. முதலில் மூர்த்திக்குக் காட்டு" என்றார். நான் மாடிக்கு ஓடினேன். அவருடைய மகிழ்ச்சியில் இன்பம் கண்டேன்.

"இதுக்கு ஜோடியாக நெக்லஸ், தோடு சிவப்பில் இல்லை. புடவையை நீல வர்ணத்தில் பொறுக்கி யிருந்தால் நீல நெக்லஸ், நீலத் தோடும் போட்டுக்கொள்ள எல்லாம் 'மாட்சி'ங்காக இருக்கும்!" என்றேன்.

"நான் நீலம்தான் பொறுக்கினேன். அம்மாதான் உனக்குச் சிவப்பு எடுப்பாக இருக்கும் என்றாள்."

நான் விருட்டென எழுந்து நின்றேன். மாமியார் காலையில் இவருடனேயே இவர் காரியாலயத்துக்குப் போகும்போது வெளியில் சென்றது, மாம்பலத்தில் தன் சகோதரியின் வீட்டில் இருந்துவிட்டு மாலை இவரோடுதான் வீடு திரும்பியதும் எல்லாம் என் நினைவுக்கு வந்தன.

"மனைவிக்குப் புடவை வாங்கக்கூட அம்மா வேண்டுமாக்கும். நீலப் புடவையின் விலை அதிகமாக இருந்திருக்கும்" என்று எரிச்சலுடன் கூவினேன்.

"தப்பு சசி! நீலப் புடவைதான் விலை குறைவு. இது பத்து ரூபாய் விலை அதிகம்."

"எப்படி இருந்தால் என்ன! நீங்கள் ஆசைப்பட்டது, விரும்பியது வாங்கக் கூடவா உங்களுக்கு உரிமை இல்லை?"—மீண்டும் பழைய பல்லவி. "நான் விரும்புவது, ஆசைப்படுவது நிறைவேற்ற முடியாமல் செயலற்று நிற்கிறேனே!"

"இனி என் புடவைக்கு உங்கள் அம்மா வரவேண்டாம். நானே வருகிறேன்."

கணவரின் உரிமைக்கு நான் எப்படியாவது போராடித்தான் ஆக வேண்டும். விலை மலிவோ, மட்டப் பொருளோ கணவர் ஆசைப்படுவதைத்தானே மனைவி விரும்புவாள்? இது என் அம்மாவுக்குக்கூடத் தெரிந்திருக்கவில்லையே!

அந்த மாதம் சம்பளத்தோடு என் கணவர் மாடிக்குச் சென்றபோது, என் மாமனாரும் பின்தொடர்ந்தார். சிலமுறை அவர் அவ்வாறு போவதை நான் பார்த்திருக்கிறேன். அன்று வீட்டுக்கு வந்திருந்த விருந்தாளிக்குக் கலந்த காப்பி இருந்ததால் அந்தக் காப்பியை எடுத்துச் செல்ல எனக்குத் தாமதமாகவில்லை. மாடியில் நான் கண்டதும் கேட்டதும் எனக்கு வெகுவாகச் சினத்தைத் தந்தது.

"என்டா மூர்த்தி! சம்பளப் பட்டியலுக்கும் நீ கொடுத்துள்ளதற்கும் ஒரு ரூபாய் குறைகிறதே!" என் கணவரின் சம்பளத்தைக் கையில் வைத்துக் கொண்டு என்னுடைய மாமனார் கணக்குக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"ஏதோ உதவி நிதியாம். ஒரு ரூபாய் பிடித்து விட்டார்கள்."

"உண்மைதானே?"

"நீங்கள் போய்க் கேட்டுப்பாருங்களேன்."

மாமனார் கீழே இறங்கி விட்டார்.

காப்பியின் சூட்டை விட என் சூடான வார்த்தைகளை என் கணவர் விழுங்கிக் கொண்டிருந்தார்.

"இத்தனை சொல்லியுமா இன்னும் உங்களுக்குத் துணிவு பிறக்கவில்லை? மாதச் சம்பளத்தை அப்படியே அப்பாவிடம் கொடுத்து விடுகிறீர்களே! உங்கள் அப்பாவுக்கு பென்ஷன் வருகிறது. உங்கள் அண்ணாவும் குடும்பத்துக்குக் குறிப்பிட்ட அளவுதான் போடுகிறார். நீங்கள் மட்டும் ஏன் உழைத்து ஓடாகி, முழுச் சம்பளத்தையும் கொடுத்துவிட வேண்டும்?"

"நான் என்ன செய்யட்டும்? நீ வரு முன்பே அப்பா இப்படி கண்டிஷன் போட்டு விட்டாரே. நான் கேட்டால் 'உனக்காக இந்தக் கண்டிஷன் பேரில் மூவாயிரம் ரூபாய் கொடுத்தவன்டா' என்று மண்டையில் அடிப்பார்."

நான் உறுமினேன். மூவாயிரமாம் மூவாயிரம்! டிபாஸிட்டுக்காகக் கொடுத்திருப்பார். அதற்காக ஆயுள் முழுதும் சம்பளத்தை அவர் கையில் ஒப்படைக்கணுமா? எனக்கு ஆத்திரமாக வந்தது.

"உங்களுக்குத் துணிவு வருவதற்காவது நான் தனிக் குடித்தனத்துக்கு ஏற்பாடு செய்கிறேனா இல்லையா பாருங்கள்." நான் சூளுரைத்தேன்.

"அப்படி நீ செய்தால் ரொம்ப நன்றி செலுத்துவேன், சசி! மனத்தோடு கொதிக்கும் என் ஆசைகளும் விருப்பங்களும் ஈடேற வழி பிறக்குமே!"

அதற்குப் பிறகு குடும்பத்தில் அனை வருமே என் குணம் மாறிவிட்டதாக உணர்ந்து கொள்ள வைத்தேன்.

நானே பீரோவைத் திறந்து பணம் எடுத்துக் கொண்டேன். மாமியாரோ மாம னாரோ அருகில் இருந்தால் பணம் எடுப்ப தற்குக் காரணம் சொல்லுவேன்.

''அப்பாவுக்குப் பயந்ததெல்லாம் போதும். உங்களுக்குத் தன்னால் துணிவு வராது. நான் ஏற்படுத்தித் தருகிறேன் பாருங்கள். இனி உங்கள் சம்பளம் உங்களுடையது.''

''அப்படி நீ ஏற்பாடு செய்து விட்டால் எனக்குச் சந்தோஷமாகத்தான் இருக்கும். என் நெருங்கிய நண்பன் சுதாகர்கூட 'உன் பணத்துக்குக்கூட உனக்கு உரிமை இல்லாமல் உன் அப்பாவின் அதிகாரம் என்னடா இது?' என்கிறான். சில முறை அந்தச் சுதாகர் வீட்டில் தங்குவதுண்டு. அவன் தான் செல்லும் இடங்களுக்கெல் லாம் அழைத்துச் செல்வான் தன் காரி லேயே. நிறைய சொத்துக்காரன். அப்பா வுக்கு இதெல்லாம் பிடிக்காது. சுதாகர் பரிகசிப்பான்.''

''பார்த்தீர்களா! நண்பர்களே பரிகாசம் செய்யும் உங்களுக்கு இன்னும் துணிவு பிறக்கவில்லை. மெள்ள மெள்ளச் சம்பளம் முழுதும் உங்கள் கையில் தங்கும்படி ஏற்பாடு செய்து விடுகிறேன்.''


அவர் மென்ன என் தோளைப் பற்றுவார். ''என் சம்பளம் என் கையில் இருந்தால் என் விருப்பங்களும் ஆசைகளும் என்னமாய் ஈடேறும் தெரியுமா?''

வீட்டில் ஏதாவது பொதுவாகப் பேச்சு நடக்கும்போது நான் கூவ ஆரம்பித்து விட்டேன். ''ஊருக்கு இளைத்தவராகி வீட்டுக்கும் சோடையாகிவிட்டார்கள். சொந் தச் சம்பாதிப்பில் உரிமை இல்லாமல் போய் விட்டது. மாடு போல் உழைத்து ஓடி போல் தேய்ந்ததுதான் மிச்சம். தன் விருப்பம் தன் ஆசை என்றெல்லாம் கூட நிறை வேற்றிக் கொள்ள முடியவில்லை...'' இப் படியாகக் கணவரிடம் கூறுவதாக எல்லோர் காதிலும் விழும்படியாக அலறினேன். மைத்துனரும் மன்னியும் என் பேச்சையோ எங்களையோ கவனிக்கவே மாட்டார்கள். மாமியாரும் மாமனாரும் முதலில் பதிலே கூறாமல் இருந்தார்கள். பிறகு, ''அவன் பொறுப்பை நீ ஏற்றுக் கொண்டால் எங் களுக்கு நல்லதுதான். நிம்மதியாக இருப் போம்!'' என்றார்கள். வயது வந்த ஆண் பிள்ளைக்குத் தன்னையே பார்த்துக் கொள்ளத் தெரிந்திருக்காதபடி இப்படியா அடக்கி ஆட்சி செலுத்தியிருக்க வேண்டும்? இப் போது மனைவி குறி காட்டிப் பொறுப்பேற் கும் பதவியைத் தருகிறார்கள்.

ஒரு நாள் கணவருடன் கடைத் தெருவில் போய்க் கொண்டிருந்தபோது இவர் நண்பர் சுதாகரைச் சந்திக்க நேர்ந்தது.

''கலி! இவன்தான் 'சுதாகர்' என்பேனே, அந்த நண்பன்... சுதாகர்! இவள் என் மனைவி கலியா!'' கணவர் அறிமுகப்பட லத்தை முடித்துக் கொண்டார்.

சுதாகர் என்னை நோக்கிக் கரம் குவித் தார். ''க்ளாட் டு மீட் யூ. மனைவியைப்



முதல் கைதி: என் கையில் மாத்திரம் பணம் ஏராளமா இருந்தால்....!

இரண்டாம் கைதி: இரும்பு விலங்கைத் தூர எறிந்துவிட்டு, தங்க விலங்காகப் போட்டுக் கொள் வாயோ?

பற்றி மூர்த்தி பெருமையாகச் சொல்லு வான். துணிவும் வலிவுமாக இவனுக்காகப் பரிந்து உரிமைப் போராட்டம் நடத்துவதைக் கதையாகச் சொல்லுவான்.''

என் மனத்துள் சுதாகரின் பேச்சு பெரு மையைத் தோற்றுவித்தது. எனினும் நான் மௌனமாகப் புன்முறுவல் மூலம் அவர் கூறிய புகழுரையை அங்கீகரித்தேன்.

''வாழ்க்கை அனுபவிக்கத்தானே இருக் கிறது? இந்தப் பெரியவர்களுக்கு இது தெரிய வேண்டாமோ? இவன் சம்பளத்- தையே வாங்கி வைத்துக் கொண்டு விடு கிறார்களாமே!''

மாமனார் மாமியார் பற்றி நண்பரின் எதிரில் விட்டுக் கொடுக்க எனக்கு அவ்வளவு விருப்பமில்லை. ''அப்படியெல்லாம் இல்லை. அடுத்த மாதத்திலிருந்து இவர் சம்பளம் இவரிடம்தான் இருக்கும்'' எனக் கூறி வைத்தேன்.

''ஓ, அப்படியா! அப்படின்னா ரொம்ப சந்தோஷம்... மூர்த்தி! அப்ப ஊட்டி, பங்களூர் இதுக்கெல்லாம் நம்ப பயணம் நிச்சயம் இருக்கும். நானே அழைத்துப் போகிறேன்.''

நண்பர் விடைபெற்று விட்டார்.

''என்ன கலி, சம்பளத்தை என் கையில் தந்துவிடுவதாகப் பேசிவிட்டாய். அப்பா என்னை பிடிப்பார். இவனோ ஊட்டி, பெங் களூர் அது இது என்று ஆரம்பிக்கிறானே!''

''நீங்கள் கவலைப்படாதீர்கள். அடுத்த மாதச் சம்பளம் நம் கையில்தான்.''

அடுத்த மாதமே என் போராட்டத்துக்குப் பலன் கிடைக்கும் என நான் எதிர்பார்த் திருக்கவில்லை. என் கணவர் சம்பளம் வாங்கி

வந்த நாள். வழக்கம்போல் அவரைத் தொடர்ந்து என் மாமனார் மாடிக்குப் போகவில்லை. ஆனால் என் கணவரோ ''அப்பா!'' என்று கூப்பிட்டு விட்டார். அதற்குப் பிறகு மாமனார் மாடிக்குப் போனார். நானும் வேணுமென்றே அவருடன் மாடிக்குச் சென்றேன்.

''இந்தாருங்கள், அப்பா சம்பளம்!''

மாமனார் சம்பளத்தை வாங்கிக் கொள்ளவில்லை. ''கலாவிடம் கொடுப்பா. அவள் இனி நிர்வகித்துக் கொள்ளுவாள்.''

கணவர் வியப்பைக் காட்டிக் கொண்டார். நான் காட்டிக் கொள்ளவில்லை. அழுத்தமாகவே பணத்தை வாங்கிக் கொண்டேன்.

மாமனார் கீழே இறங்கிச் சென்றதும் சம்பளத்தை என் கணவரின் கையிலேயே வைத்தேன். ''இனி உங்கள் சம்பளம் உங்களுடையது.''

அவருக்குக் கொள்ளைக் குதூகலம். சம்பளத்தைத் தம் மேஜை டிராயரில் வைத்துக் கொண்டார். ''ஓ கலீ, உனக்கு எப்படி நன்றி செலுத்துவதென்றே எனக்குப் புரியவில்லை. என் விருப்பமெல்லாம் இனி ஈடேற்றிக் கொள்ள முடியும்.''

கணவருக்காக வாதாடி வெற்றியடைந்து அதனால் அவர் கண்ட ஆனந்தத்தை மனக் குதூகலிப்போடு நான் அநுபவித்தேன்.

மறு நாள் காலையே எனக்கு எதிர்பாராத பயணம் ஒன்று ஏற்பட்டு விட்டது. அப்பாவுக்குத் திடீரென உடல் நிலை பாதிக்கப்பட்டு விட்டதாகக் கடலூரிலிருந்து தந்தி வந்தது. என் சகோதரி உமாவுடன் பஸ்ஸிலேயே நான் புறப்பட்டுப் போய் விட்டேன்.

ஆண்டவன் கிருபையில் அப்பா பிழைத்து விட்டார். சில நாட்கள் அங்கு தங்கும்படி நேரிட்டது. என் கணவருக்காக நான் உரிமைப் போராட்டம் நடத்தியதைக் கதையாகப் பெற்றோர்களிடம் கூறினேன். அம்மாவோ, ''கலீ, உன்னைப் பொல்லாதவளாகக் காட்டிக் கொண்டு விட்டாயேடி.... மாமியார் மாமனார் உனக்குக் குறை வைத்திருக்கவில்லையே!'' எனப் பழைய பல்லவியே பாடுகிறாள். அப்பாவோ, ''உனக்குத் துடுக்குத்தனமும், துணிச்சலும் அதிகம்'' எனக் கூற, சகோதரிகளும் ஆமோதித்தனர்.

கணவரிடமிருந்து கடிதம் வந்தது. அவர் அவசரமாக ஊட்டிக்குப் போகிறாராம். நான் வரும் வரை காத்திருக்க முடியாதாம். பெங்களூருக்குப் போகும் போதும், அடுத்த முறை ஊட்டிக்குப் போகும் போதும் கண்டிப்பாக அழைத்துப் போவதாக எழுதியிருந்தார். நான் ஊட்டி ஒரு முறை பார்த்திருப்பதால் அவருடன் போகாதது பற்றிக் குறைப்பட்டுக் கொள்ளவில்லை. என் உரிமைப் போராட்டத்தால் அவராவது நாலு இடங்களுக்குச் சென்று சந்தோஷம் அநுபவிக்கட்டுமே!

நான் கடலூரிலிருந்து திரும்பிவிட்டேன். பஸ் கோளாறினால் இரவு ஏழு மணிக்குத்தான் வீட்டை அடைய முடிந்தது. உமா தன் வீட்டுக்குச் சென்று விட்டாள். என் கணவர் இன்னும் திரும்பியிருக்கவில்லை.

ஒரே அசதியாக இருந்ததால் சாப்பிட்டு விட்டு எட்டு மணிக்கே படுத்துக் கொள்ள மாடிக்குச் செல்லப் படி போது மாமனார் கூப்பிட்டார்.

''கலா, மூர்த்தி ஊரிலில்லை தெரியுமா?''

''உம்......!''

திடீரென அவர் தலை நிமிர்ந்து என்னைக் கேட்டார். ''சம்பளப் பணத்தைப் பத்திரமாக வைத்தாயாம்மா?''

எனக்கு ஆத்திரமும் கோபமுமாக வந்தது. இனி சம்பளப் பணத்தைப் பற்றி இவருக்கு என்ன கவலை? குடும்பத்தில் பங்கு போடவில்லையே என்ற குறையாக்கும்.

''பத்திரமான இடத்தில்தான் வைத்திருக்கிறேன். உங்கள் பிள்ளையின் கையிலேயே கொடுத்திருக்கிறேன்.''

''மூர்த்தியின் கையிலா?'' என்று திடுக்கிட்டுக் கேட்கிறார் அவர்.

அப்பாவிடம் அடங்கிய பிள்ளை, மனைவியிடமும் அடங்கியிருக்க விரும்பும் தந்தை இப்படி எங்கேனும் உண்டா? மனைவி பணம் கொடுத்து வாங்குவதைவிட, தானே மனைவியிடம் சொல்லாமல் வாங்கி வந்து அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் இன்பம் எவ்வளவு உயர்ந்தது என்பது எனக்குத் தெரியாதா! ஊட்டியிலிருந்து என் கணவர் வாங்கி வரப் போகும் பண்டங்களைப் பார்த்தாவது தெரிந்து கொள்ளட்டுமே.... பெரிய பிள்ளைக்கும் சிறிய பிள்ளைக்கும் இடையே ஏன் இப்படி ஓரவஞ்சனை காட்ட வேண்டும்....!

நான் பேசாமல் மாடிக்குப் போய்விட்டேன். கீழே என் மாமனார், மாமியாரிடம் கூறியது ஒன்றிரண்டு காதில் விழுந்தது. ''வாயாடி என்று எல்லோரும் கூறிய போதும், இந்த மாதிரி பெண்தான் மூர்த்திக்கு அவசியம் எனத் திட்டமிட்டேன்.... பார்க்க அழகாகவும் இருக்கிறாள். மூர்த்தி இவளிடம் மயங்கி அடங்கிக் கிடப்பான் என்று நினைத்தேன். இந்தக் காலத்துப் பெண்கள் கணவன் சம்பளத்தைத் தன் கையில் வைத்துக் கொண்டு கணவனை ஆட்டிப் படைக்க வேண்டும் என்று ஆசைப்படும்போது இந்தப் பெண் அவன் கையில் கொடுத்து விட்டதே!''

வயதாகி விட்டால் இப்படித்தான் அசட்டுத்தனமாகப் பேசுவார்கள் என நான் பேசாமல் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டேன். என் கணவர் தன் நண்பரின் காரில் திரும்பியிருக்கிறார் போலும். அவர் வந்து படுத்ததே எனக்குத் தெரியாது.


திடீரென இரவு சத்தம். ''கம் ஆன் ஜாக்கி..... பிக் அப்.... ஃப்ளை ஜானி.... கம் ஆன்...... ஜாக்கி, கம் ஆன்.... பிக் அப்...''

நான் திடுக்கிட்டு விழித்துக் கொண்டு சத்தம் போட்ட கணவரையும் எழுப்பினேன். அவர் கண்களைக் கசக்கிவிட்டபடியே என்னை நோக்கினார்.

''என்ன இதெல்லாம் சத்தம்? எப்போது வந்தீர்கள்?''

வந்ததுமே என்னை எழுப்பி எனக்காக வாங்கி வந்தவைகளை எனக்குக் காட்டவில்லையே என்று எனக்குக் குறை.

''கலீ, என் பணத்துக்கு எனக்கு உரிமை வாங்கித் தந்தது பற்றி ரொம்ப நன்றி.... இல்லாவிடில் நான் ஊட்டி வரை போயிருக்க முடியுமா? என் ஆசைகளையும் விருப்பங்களை



''தந்தையே! நான் இந்தச் சித்திரத்தில் உள்ளவளைத்தான் திருமணம் செய்து கொள்வேன்!''

''டாடி! நான் இந்தப் படத்தில் உள்ளவளைப்போலவே இருப்பவளைத்தான் கல்யாணம் செய்துகொள்வேன்!''

யும் நிறைவேற்றியிருக்க முடியுமா, மனிதனுடைய விசித்திரத்தைப் பாரேன். ஆசையோடு அநுபவித்து நாம் எதை நடத்தி விட்டு வருகிறோமோ அதையே கனவிலும் பார்க்கிறோம். கிண்டியில் ஆவி வரவில்லை என்று சுதாகர் பெங்களூர் ஊட்டியில் முயற்சி செய்யலாம் என்று ஆலோசனை சொன்னான். உன் புண்ணியத்தில் இந்த மாதச் சம்பளம் கையில் கிடைத்ததும் அங்கு ஊட்டியில் ரேஸ் சீஸன் ஆரம்பித்ததும் சரியாக இருந்தது. முதலில் கட்டிய குதிரை ஒன்றில் ஜெயித்தான். ஆனால் அதோடு விட்டுவிட முடியுமா...? மேலும் மேலும் பணம் கட்டிய போதும் உள்ளதும் போச்சு. சுதாகருக்கோ ஆரம்பமே அவுட். என் பணத்தில் அவன் கட்டியும் எல்லாம் மைனஸ் தான். டிப்ஸ் சரியாகப் பார்த்திருக்கணும்.''

அவர் சொல்லிக் கொண்டே போகிறார். ரேஸ் குதிரை போல் என் தலையும் சுற்ற ஆரம்பிக்கிறது. ''நீ......ங்கள் ரேஸுக்கா போனீர்கள்.......?''

''ஆமாம், சுசி. எனக்கு இதில் ரொம்ப விருப்பம் உண்டே. சம்பாதிக்க ஆரம்பித்த புதிதில் கை பணத்துக்கு மேல் கொஞ்சம் பணம் கடனாகி ஏதோ நடந்து விட்டது. அந்தப் பிசாசுப் பணம் மூவாயிரம் ரூபாயை அப்பா அடைத்து என் மானத்தைக் காப்பாற்றி விட்டதற்காக, மாதச் சம்பளத்தை அவர் கையில் ஒப்படைக்கும் நிபந்தனையை அப்பா போட்டு விட்டார். என் ஆசைகளையும் விருப்பங்களையும் ஈடேற்ற முடியாமல் திணறினேன். 'எர்ன் அண்ட் என்ஜாய்' இந்தப் பிரின்ஸிபல் உனக்குத் தெரிந்ததுகூட அப்பாவுக்குத் தெரியவில்லை. இந்த ஊட்டியில் அடிக்க முடியாத அதிர்ஷ்டத்தைப் பெங்களூரில் பார்த்துக் கொள்ளுகிறோம். அதுவும் இல்லாவிட்டால் கிண்டி இருக்கவே இருக்கிறது..... சுதாகருக்கு இன்னும் சில பிஸினஸ் — காட்டன் அது இது என்றில்லையா — எல்லாம் தெரியும்.... அண்ணாவைப் போல் கஞ்சத்தனமாக இருந்தால் வாழ்க்கையை அநுபவிக்க முடியுமா......?''

என் தலை சுற்றிச் சுற்றிக் கடைசியில் என் கணவரின் 'ரேஸ் ஹார்ஸ்'க்குத் துணையாக 'வின் பாயிண்ட்'டைத் தொடாமலே நொண்டிக் கொண்டே பின்னால் போய்க் கொண்டிருந்தது. தந்தைக்கு அடங்கித் தனக்கெனத் துணிவில்லாத புருஷனுக்குக் கணவரை அப்பாவியாக நோக்கிக் கொண்டிருந்த மனம், கணவரின் விருப்பத்தை எது என்று புரிந்து கொள்ளாததையும் அப்பா கொடுத்த மூவாயிரத்துக்கான காரணத்தைக் கேட்காததையும், பெங்களூர் ஊட்டி போன்றவை உல்லாச ஸ்தலத்தோடு கிண்டிக்கும் சகபாடிகள் என்பதை அறவே மறந்து விட்டதையும், இந்தப் பிள்ளையை அடக்கியாளவும் தன் அழகில் மயக்கித் தனக்கு அடிமையாக்கிப் பொல்லாத சுதாகரின் நட்பை மறக்கடிக்கச் செய்யவும் ஒரு பெண் தேவை என என் மாமனார் என்னைத் தேர்ந்தெடுக்க மாமியாரோ என் அழகுக்கு அழகு செய்து கணவனின் மனத்தைத் திருப்ப வழி செய்ததை அறியாமல் விட்டதையும் என்னிடம் காட்டி, 'யார் அப்பாவி' என அதே மனம் இப்போது கேட்கிறது. துணிச்சல்காரி, அடுக்குக்காரி, பொல்லாதவள் என என் பெற்றோரே எனக்கு அளித்துள்ள பட்டங்கள்!

நான் காலண்டரை நோக்குகிறேன் — கணவரின் அடுத்த மாதச் சம்பளத்தை மாமனாரின் பாதங்களில் சமர்ப்பிக்க முதல் தேதி வர எத்தனை நாட்கள் இருக்கின்றன?

படித்துப் பாருங்கள்

நீங்களும் உங்கள் ஆரோக்கியமும்

மூன்று , தொகுப்பாசிரியர்களோடுகூட, தத்தம் துறையில் நிபுணர்களாக விளங்கும் சிறந்த தேர்ச்சி பெற்ற பல டாக்டர்களும் சேர்ந்து இந்த நல்ல ஆங்கிலப் புத்தகத்தை உருவாக்கியுள்ளனர்.

புத்தகத்தின் சில பகுதிகளை நான் மாதிரி பார்த்தேன். எளிதில் படித்துப் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் நூல் அமைந்திருப்பது என் மனத்தில் பதிந்தது. வைத்தியக் கருத்துக்களை அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய மொழியிலும், விதத்திலும் எழுதுவதில் பெருமளவு வெற்றி கண்டிருக்கிறார்கள்.

சில அச்சுப் பிழைகள் தவிர, மொத்தத்தில் நூலின் அமைப்பும் சித்திரங்களும் நன்கு அமைந்துள்ளன.

நூல் விலை: ரூ. 34.50 என்பது ஏறக்குறைய ஒரு மத்திம அளவு வைத்தியப் பாடநூலின் விலைக்குச் சமமாகும். சிலரால் தான் இவ்வளவு விலை கொடுத்துப் புத்தகம் வாங்க முடியும். மக்களிடம் விரிவாக வைத்திய விஷயங்கள் பரவ வேண்டும் என்பது கொள்கையாயினும், அதன் விலை இந்த நோக்கத்துக்கு மாறாக இருக்கிறது. எனினும், பொது நூலகங்களும் வைத்தியசாலை, வைத்தியக் கல்லூரி நூலகங்களும் இந்நூலை வாங்கி வைத்தால் அதன் பயன் பலருக்குக் கிட்ட முடியும்.

—டாக்டர் என். வைத்தியநாதன் எம்.டி.

YOU AND YOUR HEALTH : Edited by Dr. V. N. Bhave, Dr. N. S. Deodhar and Dr. S. V. Bhave; Publishers: G. Y. Rane Prakashan, Poona-4

துளசி இராமாயணம் *(தமிழில்)*

கவித்துவ அழகும், தத்துவ எழிலும் வாய்ந்த வாசகங்களைத் துளசிதாஸரின் 'ராம சரித மானஸம்' எனப்படும் இராமாயணத்தில் நிறையக் காணலாம். வடபுலத்தில் இராமாயணம் என்றாலே துளசி ராமாயணம்தான். பிற்கால ஹிந்திக்குப் பிறப்புத் தந்த ஆதி ஹிந்தியில் அமைந்த முதன்மையான நூல் அது. பக்தி, பாத்திரப் படைப்பு, காவிய உத்தி யாவற்றிலும் உலக இலக்கியங்களில் இடம் பெற வேண்டிய பெருமை படைத்த நூல் அது.

நாம் அறிந்த இராமனையும், இராம சரிதத்தையும், இராமாயண பாத்திரங்களையும் பரம பாகவதரான கோஸ்வாமி துளசியின் புதுக் கண் கொண்டு பார்க்கும்போது நமக்கு ஒரு புது அநுபவமே பிறக்கிறது.

ஸ்ரீ ராமனுக்கு இளவரசர் பட்டம் கட்ட உத்தேசித்திருப்பதாக வசிஷ்டர் கூறுகிறார். உடனே சக்கரவர்த்தித் திருமகன் எண்ணுவதைப் பாருங்கள் :

இராமர் வியப்புற்று, 'சகோதரர்களாகிய நாங்கள் ஒன்றாகவே பிறந்தோம் ; குழந்தைப் பருவத்தில் ஒன்றாகவே உண்டோம், விளையாடினோம், உறங்கினோம். காது குத்துதல், பூணூல் விழா, திருமண விழா ஆகிய அனைத்தும் ஒன்று போலவே நடந்தன. ஆனால் இக்குற்றமற்ற குடியில் மற்றவர்களை விட்டு விட்டு மூத்தவனுக்கே முடிசூட்டுவது மட்டும் நேர்மையில்லை யெனத் தோன்றுகிறது' என்று எண்ணினார்.

துளஸியின் இன்னொரு தனிச் சிறப்பு அவர் பரம பக்தராக ஸகுண உபாஸனையைப் போற்றிய போதிலும் அவருக்கு அத்வைதத்தில் இருந்த பற்றுதல்தான். இராமனுக்கும் இலக்குவனுக்குமிடையே சீதை சென்றது பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்குமிடையே மாயை செல்வது போலிருந்தது என்று அவர் கூறும் அழகு உன்னி உணர வேண்டியதாகும்.

இவ்வாறு துளஸிதாஸரின் அற்புத நூலில் உள்ள கதையை மட்டுமின்றி, அவரது உட்சிறப்புக்களும் வெளிப்படும் விதத்தில் கருக்கமாக ஒரு தமிழ் மொழிபெயர்ப்பு வந்திருப்பது, ஒரு பெரிய குறையை நிறைவு செய்து விட்டதெனலாம். மொழிபெயர்ப்பாளருக்கு ஹிந்தி—தமிழ் இரண்டிலும் உள்ள தேர்ச்சி நூலில் தெற்றெனத் தெரிகிறது.

ஆனால் 'சசாங்கப்ரியம், காசீசம், சங்கரம்' போன்ற முழு சம்ஸ்கிருத சுலோகங்களில் காணும் முழு சம்ஸ்கிருதப் பதங்களை அவர் 'ஷஷாங்கப்ரியம், காஷீஷம், ஷங்கரம்' என்றெல்லாம் எழுதியிருப்பதுதான் இடறுகிறது. நூலின் பல இடங்களில் 'குளுரை' என்பது 'குழுரை'யாகவும், 'கொளுத்துதல்' என்பது 'கொழுத்துதல்' எனவும், 'பளு' என்பது 'பழு'வாகவும், இதுபோல் ழகர — ளகர 'அத்வைதம்' காணப்படுகிறது.

தமிழாக்கம் : தி. வேங்கட கிருஷ்ணய்யங்கார் பிரசுரம் : வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை—17; விலை : ரூ. 7—50

நல்ல பரிசு

நல்ல குழந்தைகளுக்கான நல்ல பத்திரிகை கண்ணன் நடத்திய தொடர்கதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றது 'நல்ல பரிசு' என்ற இந்தக் கதை. குழந்தைகளுக்குப் பரிசளிக்க ஏற்ற புத்தகம்தான். பெரியவர்களான உங்களுக்கும் ஒரு பரிசு வேணுமானால் புத்தகத்தை வாங்கிக் குழந்தைகளுக்குப் படித்துக் காட்டுங்கள். அவர்கள் முகத்தில் ஏற்படும் பாவ மாறுதல்களைப் பார்த்து ரசியுங்கள். அதை விட நல்ல பரிசு உங்களுக்கு வேறென்ன வேண்டும் ?

ஆசிரியர் : லியோ ஜோஸப், பிரசுரம்: கலைமகள் காரியாலயம், சென்னை—4 ; விலை : ரூ. 1—25.

இந்தியாவில் உயிரினம் பெருகுவது ஒரு புறம் கவலையளிக்கிறது. மறுபுறம், மற்றோர் உயிரினம் மறைந்து வருவதும்தான் கவலையளிக்கிறது ! ★



புலி வாழ்க, கிளி ஒழிக !

இப்போதைய ஜனன மரணப் போக்கிலேயே போனால் இன்னும் நாம் பது ஆண்டுகளில் இந்தியக் காடுகளில் புலி என்பதே இருக்காது என்று ஒரு நிபுணர் கருதுகிறார்.

☐ தாஜ்மகாலும் கஜுராஹோ சிற்பமும் போல் புலியின் கம்பீரம் மிக்க வடிவமும் இந்தியாவுக்குப் பெருமை தருவது. யுகம் யுகமாக சிருஷ்டியில் பக்குவமடைந்து பூரண எழிலுடன் விளங்கும் ஓர் உயிரினம் மனிதனின் அசட்டையினால் மறைவதாவது ! பார்க்கப் போனால் புலியை வாழ வைக்க ரொம்பவும் சிரமப்பட வேண்டாம்; தனிமையும் போதிய உணவும் கிடைத்தால் அதற்குப் போதும்.

ஆனால் அதை எங்கே நாம் வாழ விட்டோம்? நமது மகாராஜாக்கள் ஒவ்வொருவரும் தமது நாளில் ஆளுக்கு ஆயிரம் புலிகளைக் கொல்வதில் பெருமை அடைபவர் ஆயிற்றே !

☐ "புலி ஒரு கொடூர மிருகம், மனிதனும் புலியும் அடுத்தடுத்து வாழ்வதா?" என்று அஞ்சவதற்கு அவசியம் இல்லை. புலி வாழும் பகுதியில் சாதாரணமாக எண்ணிக்கையில் அதிகமாக இருப்பது மனித இனம். ஆனால் உணவுக்கு வேறு எதுவும் இல்லையென்றால், தான் அது மனிதன் பக்கம் திரும்புகிறது.

☐ பதினைந்து மாத காலம் இந்தியக் காடுகளில் திரிந்து, புலியின் பழக்க வழக்கங்களை யெல்லாம் ஆராய்ந்து பார்த்த ஜார்ஜ் ஷ்காலர் என்னும் உயிரியல் நிபுணர் "மானும் புலியும்" என்றொரு நூல் எழுதியிருக்கிறார்.

☐ இந்தியக் காடுகளில் சுமார் இரண்டாயிரம் புலிகள் இருக்கலாம். பெண் புலிகள் பலவும் கோடையில் கருத்தரிக்கின்றன. ஆனால் புலி வேட்டை பெரும்பாலும் கோடையிலேயே நடைபெறுவதால் புலியினம் வளரும் வாய்ப்புப் பெரிதும் தடைப்படுகிறது. தாய்ப் புலி இறந்தால் குட்டிகள் போதிய அளவு தற்காப்புக்கும் வேட்டைக்கும் பயிற்சி பெறாமல் தவிக்கின்றன. ஒரு காட்டெருமையின் தாக்குதலைக்கூடச் சமாளிக்க முடியாமல் இத்தகைய பயிற்சிபெறாத புலி திணறுவது சகஜம். பயிற்சி பெறாத புலிகள் சில இந்த மோதல்களில் இறந்து விடுகின்றன.

☐ தான் வாழும் பகுதியிலுள்ள புதர்களிலும் செடிகளிலும் புலி தன் ஆசன வாயின் வழியே ஒருவகை நெடியை விட்டு வைக்கிறது. இந்த நெடி மூன்றுமாத காலம் வரைகூட மறையாமல் இருக்கும். புலி ஒரு பகுதியில் குடியிருக்கிறது என்பதை உணர இது பயன்படுகிறது.

☐ புலி, தான் ராஜாவாக விளங்கும் காட்டில் மற்ற சாதாரணப் பிராணிகளை விட்டு வைக்கும். ஆனால் போட்டியாக விளங்கும் சிறுத்தை போன்றவற்றைச் சும்மா விடாது. ஆண் புலி தன் பெண் புலிகளோடு தொடர்பு கொள்ளும் மற்றப் புலி, சிறுத்தைகளைச் சற்றும் விட்டு வைக்காது.

☐ வேட்டையாடி முடித்ததும் புலி உரக்க உறுமுகிறது. கிடைக்கும் உணவைப் பகிர்ந்து கொள்ளும்படி மற்ற மிருகங்களை அழைப்பது போலிருக்கிறது அந்தக் கூவல். சக புலிகளும் மற்ற மிருகங்களும் அங்கே கூடுகின்றன. வேட்டையாடிய புலி முதலில் வேண்டிய அளவு தின்று முடியும் மட்டும் அவை மரியாதையுடன் தூர இருந்து பார்க்கின்றன.

நாட்டு மனிதனும் காட்டுப் புலியைப் போலத் தான் ஈட்டும் பொருள்களைத் தன் இனத்துடன் பங்கிட்டு வாழ்ந்தால் உலகின் துன்பம் ஓரளவு குறையுமல்லவா ?

ஆதாரம் :

டைம்ஸ் ஆப் இந்தியா

தகவல் :

தம்பி சீனிவாசன்

வட்டமேஜை

- சிறப்புப் பணி
- 'சேனை' தரும் வேதனை
- உரைகல்
- கொசுத்தொல்லை, பெருந்தொல்லை!

ஸ்ரீ கருணானந்த மண்டலி, ஞான பாஸ்கர ஸ்ரீ பி. என். நாராயண சாஸ்திரிகள் அவர்களின் சிறந்த ஒத்துழைப்போடு, ஸத்வித்யா பிரவசனம், அனுஷ்டானம், தார்மிக புஸ்தக வெளியீடுகள், தெய்வ பக்தியைப் பரப்புவது இவைகளை முக்கியமான கொள்கைகளாய்க் கொண்டு நடந்து வருகிறது. பிரதி தினமும் காலையிலும் மாலையிலும் பெரியோர்களுக்கும் சிறியோர்களுக்கும் வேத வகுப்புகளும், சிறியோர்களுக்கு ஸ்தோத்திர பாட வகுப்பும் தியாகராய்நகர், ராமேசுவரம் ரோடு ஸ்ரீ காமகோடி மண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

இம்மண்டலியின் பதின்மூன்றாவது ஆண்டு விழாவையொட்டித் தயாரித்துள்ள மலரை ஸ்ரீ டி. எம். பி. மகாதேவன் அவர்கள் வெளியிட்டார்கள். இந்த ஆண்டு விழா மலரில் ஸ்ரீ துர்வாஸ மஹரிஷியால் ஸ்ரீ காஞ்சி காமாட்சி கோவிலுக்கென்றே எழுதப்பட்ட சௌபாக்கிய சிந்தாமணி முறைப்படியான ஸ்ரீ தேவி நவாவரண பூஜை கல்பம் முதல் முறையாக வெளிவருகிறது. மேலும் மேலும் இம்மண்டலியின் தொண்டு சிறக்க நாட்டிலுள்ள நல்லோர் அனைவரின் சார்பிலும் வாழ்த்துகிறேன்.

சென்னை—17 எம். சாம்பசிவம்

என்னுடைய தென்னிந்திய நண்பர் ஒருவர் 13—2—68 அன்று பம்பாய் மான்கூர்டு ரயில் நிலையத்திலிருந்து மூன்று கல் தூரத்தில் இருக்கும் செம்பூர் ரயில் நிலையம் செல்ல வேண்டியிருந்ததால், பிற்பகல் 12—10 மணி மின்சார வண்டியில் ஏறினார். பிற்பகல் வண்டியாதலால் கூட்டம் அதிகம் இல்லை. எனது நண்பர் பிரயாணம் செய்த அதே பெட்டியில் சுமார் பதினைந்து மகாராஷ்டிரர்கள் இருந்தனர். இவர்கள் பெரும்பாலும் தமிழ் மக்களைத் துன்புறுத்தி வரும் 'சிவசேனை' என்ற கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் ஒருவர் என்னுடைய நண்பரிடம், ''தயவு செய்து உங்களுடைய பேனாவைக் கொடுங்கள்'' என்று கேட்டார். எனனுடைய நண்பர் உடனே தமது பேனாவைக் கொடுத்தார்.

வண்டி கோவண்டி என்ற ரயில் நிலையத்தைக் கடந்து சென்றது. எனது நண்பர் அடுத்த ரயில் நிலையத்தில் இறங்க வேண்டியிருந்ததால், 'பேனாவைத் தயவு செய்து திருப்பிக் கொடுங்கள். நான் இறங்க வேண்டும்' என்றார். ஆனால் மனிதத் தன்மையே இல்லாத அந்த மகாராட்டிரர் ''இது என்னுடைய பேனா. நீ பேனா கொடுக்கவில்லை'' என்று கூறினார். வண்டியில் உள்ள இதர மகாராஷ்டிரர்கள் இந்த மகாராஷ்டிரரின் நண்பர்கள் ஆதலால், அவர்களும் அவரையே ஆதரித்துப் பேசினார்கள். மேலும் அந்தப் பரிதாபத்துக்குரிய தென்னிந்தியரை 'வாய் போனபடி வசை பாடினார்கள். அந்தத் தென்னிந்தியர் செம்பூர் ரயில் நிலையத்தில் தன்னுடைய பேனாவைப் பெற்றுக்கொள்ளாமல் இறங்கும்படியாகி விட்டது.

இதுபோன்ற பல அக்கிரமங்களை இந்தச் சிவசேனைக் கூட்டத்தினர் செய்து வருகிறார்கள்.

நமது மதிப்புக்குரிய தமிழக முதலமைச்சர் திரு அண்ணாதுரை மகாராஷ்டிர முதல்வர் திரு வி. பி. நாயக்குடன் கலந்து ஆலோசித்து, சிவசேனைக் கூட்டத்தினர் பம்பாய் வாழ் தமிழ் மக்களை துன்புறுத்தாமல் இருக்கும்படி செய்தாரேயானால், பம்பாய் வாழ் தமிழ் மக்களாகிய நாங்கள் திரு அண்ணாதுரை அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டிருப்போம்.

பம்பாய்—19 லா. வே. பாலன்

சென்ற 3—3—68 கல்கி இதழில் தாங்கள் வெளியிட்ட திரு என். ஏ. பால்கிவாலா அவர்களின் 'ராஜாஜி' பற்றிய கட்டுரை ஒரு சிறந்த உரைகல். ராஜாஜியின் பெருங்காப்பியம் என்ற வாழ்க்கையைத் திரு பால்கிவாலா நுணுக்கமாக ஆராய்ந்திருப்பது நமக்குப் பெருமை தருகிறது. உலகம் வாழ, ஸ்ரீ ராஜாஜி நீண்ட காலம் வாழட்டும்!


சென்னை — 5 புனர்வசு

இவ்வளவு நாட்களும் சென்னையின் ஒரு சில பகுதிகளே கொசுக்களின் வாசஸ்தலமாக இருந்து வந்தன. இந்த ஆண்டு 'சென்னை மாநகராட்சியின் சிறந்த சாதனைகள் காரணமாக நகரம் முழுவதும் கொசுக்கள் பரவிப் பேட்டைக்குப் பேட்டை தாரதம்மியம் பாராமல் தங்கள் பணியைச் செவ்வனே புரிந்து வருகின்றன. மக்கட் தொகையைக் கட்டுப்படுத்த முயலும் வேளையில், நகராட்சி கொசுப் பெருக்கத்துக்கு ஆக்கம் அளித்து வருவது விரும்பத்தக்கதுதானா? ஒருவேளை சென்னையில் குடியேறும் மக்களைக் குறைக்க, சென்னை மாநகராட்சி கையாளும் சூழ்ச்சியோ?

பாதாளச் சாக்கடை போன்ற வசதிகள் பெறாத மாம்பலம், சைதாப் பேட்டை போன்ற பகுதிகளுக்கு விடிவுகாலம் சட்டென்று ஏற்படுவதாகத் தெரியவில்லை. பெருகி வரும் கொசு உபத்திரவத்தைத் தடுக்கச் சென்னை நகரம் முழுதும் மருந்துகளாவது தெளிக்கலாம் அல்லவா?

சென்னை — 7 மார்க்கபந்து

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி